ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 3 விக்கிரம௵ சித்திரை௴ கதிர் 10

மே 1940

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை — 1
சீனாவைப்பற்றிய சில உண்மைகள். டாக்டர் எஸ். பி. சின்ஹா 9
காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம் 24
வேதாந்த ரகசியங்கள் — ஸ்ரீ ஸதானந்த சுவாமிகள் 25
மலரும் வாழ்க்கையும் — எஸ். கிருஷ்ணன். 30
கற்பனா சக்தி — ரா. லக்ஷ்மீ நரசிம்மம் 34
அழகுச் செல்வம் — நிர்வேத சைதன்யர் 35
தன்னம்பிக்கை — "வில்வலன்" 38
புறநானூறு — ச. முனிஸ்வாமி பிள்ளை 45
நண்பன் கூடாவிடில் பொ. திருகூட சுந்தரம் பிள்ளை M. A. B. L. 48
சுதந்திரத்தின் தேவைகள் யாவை? — ஸன்யாட் ஸென்னின் பிரசங்கங்கள் 8 வெ. சா. 49

டாக்டர் மேக்நாத் சாஹா, D. Sc. F. R. S.
தி. கோ. கிருஷ்ணன் B .Sc. (Hons) — 57
ஹகீம் அஜ்மல் கான் — "ஒரு காங்கிரஸ் வாதி" 63
அலுமினியம் — "வாதூலன்" 65
அஹிம்சா தர்மத்தின் அந்தரங்க மென்ன? "ஆசிரமவாசி" 67
மதமும் அரசாங்கமும் — வ. அ. தியாகராஜன் M.A. 74
துலாக்கோல் —(புத்தக விமரிசனம்.) 81
யுத்தம் நடக்கிற பிரதேசங்களைப் பற்றி 85
அன்றாட உலகம் — 87
என்னுடைய வாழ்க்கையின் லட்சியம் மகாத்மா காந்தி 91

அநுபவ ஜோதிஷர்

இவர் பல பிரபுக்களால் உண்மைப் பலன்களுக்காகப் பரிசுகள் பெற்றவர். எதிர் காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் கணிக்க ரூபா 2. மாதவாரி, ஒரு வருடப் பலன் யெழுத ரூ. 5. ஆயுள் பூராவாகப் பலன் யெழுத ரூ. 25. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

Lt col. கிரஹாம் சேடன் ஹட்சின் D. S. O. M. C. 'W. பிளான்' 'சாபு' இவைகளின் ஆசிரியர் லண்டன், 19-12-38-ல் தெரிவிப்பதாவது:

இவர் தெரிவிக்கும் ஜோதிட பலன்கள் மிக அதிசயிக்கத் தக்க, உண்மையான அநுபவத்திலிருந்து வருகின்றன. எனக்கு மிகவும் முக்கியமான சில விஷயங்களில் இவர் மிகத் தெளிவான அடையாளங்களைத் தெரிவித்தார். அதன் மூலமாக நான் சௌகரியம் அடைந்து வருகிறேன்.

விலாசம்:—பிரபசர் காழியூர்-

கோவிந்தாச்சாரி,

3-2, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்டால்

பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் வாரம் வெளியிடப் பெறும்.

"ஜோதி"

வருஷ சந்தா

பர்மாவுக்கு	4—0—0
இந்தியாவுக்கு	4—8—0
மலேயா முதலிய எல்லா வெளி நாடுகளுக்கு	6—0—0

தனிப் பிரதி

பர்மா, இந்தியா	0—6—0
வெளி நாடுகளில்	0—8—0

— ஏஜெண்டுகள் எங்கும் தேவை —

விளம்பரங்கள் முதலிய விபரங்கட்கு நேரே எழுதுக.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்.
நெ. 47, 31-வது வீதி,
இரங்கூன்.

ஜோதி

கதிர் 3 மே—1940 சுடர் 10

மனிதன் எங்கே?

இன்றைய மனிதன் அறிவு என்னும் கோயிலில் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொள்ளப் பார்க்கிறான்; ஆனால் அகங்கார மென்னும் முட் பாதையில் அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கிறான். அன்பென்னும் நீரோடையிலே ஸ்நானம் செய்ய வேண்டுமென்பதுதான் அவனுக் கேற்பட்ட நியதி; ஆனால் துவேஷ மென்னும் சுழலில் அகப்பட்டுக் கொண்டு விட்டான்; அதனின்று மீளும் மார்க்கம் அவனுக்குத் தெரியவில்லை. அவன், தன்னிடத்திலேயுள்ள பரம்பொருளை வணங்குவதாகக் கருதிக் கொண்டு தன்னிடத்திலுள்ள பிசாசுக்குத் தான் பூசை போட்டுக் கொண்டிருக்கிறான்.

இவைகளை யெல்லாம் பார்க்கிற போது, இன்றைய உலகம் இறந்து போய் விட்டதா, அப்படி இறந்து போகாமல் உயிரோடிருக்குமானால் அதில் கொலைகாரர்கள்தான் நிரம்பியிருக்கிறார்களா என்பன போன்ற சந்தேகங்கள் நமக்கு உண்டாகின்றன. ஏனென்றால் அன்பில்லாத இடத்தில் வாழ்வில்லை; வாழ்வில்லாத நிலை மரணந்தானே. ஜான் என்ற கிறிஸ்தவ முனிவனுடைய திருவாசகம் இங்குச் சந்தர்ப்பத்தில் நமது ஞாபகத்திற்கு வருகிறது:—

> ‘எந்த ஒரு மனிதன் பிறரை நேசிக்க வில்லையோ அவன் மரண நிலையில்தான் இருக்கிறான். தனது அயலானைத் துவேஷிக்கிற ஒவ்வொருவனும் ஒவ்வொரு கொலைகாரன்தான்.’

அப்படியானால் இன்றைய உலகம் ஒரு கொலைகளமாகிக் கொண்டு வருவதில் என்ன ஆச்சரியம்?

ஏன் மனிதன் இப்படியாகி விட்டான்? வாழ வல்லவோ பிறந்தான் அவன் இந்த உலகத்தில்? ஏன் அவன் வீழ்ந்து போய்க் கொண்டிருக்கிறான்? இந்தக் கேள்வி ஒரு புதிர் போலவே இருக்கிறது. ஏனென்றால் இந்த இருபதாவது நூற்றாண்டில், விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாக, இடம், காலம் முதலியன வெல்லாம் சுருங்கிக்

கொண்டு வருகிற இந்தக் காலத்தில், மனிதன் வீழ்ச்சி வழியே போய்க் கொண்டிருக்கிறான் என்று சொன்னால் அஃது ஒரு புதிராகத்தானே இருக்கும். ஆனால் நடைபெறுவது என்ன? மேற்குத் திசையைச் சிறிது நோக்குங்கள். அங்குள்ள ஒவ்வொரு நாடும், அல்லது ஒவ்வொரு நாட்டின் அரசாங்கமும், தங்கள் சுய நலத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக எந்தவிதமான முறைகளையும் கையாளத் துணிந்து விட்டன. அவைகளுக்கு பலன்தான் பிரதானம். அதனையடைய எதை வேண்டுமானாலும் செய்யலாம், எத்தனை லட்சம் பேரையும் இயமனுக்குப் பலி கொடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்து, அதன்படியே காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றன. இங்ஙனம் சுயநலத்திற்காகப் போராடும் தேசங்களோ, அல்லது அந்த தேச நிருவாகத்தைத் தங்கள் கையிலே பிடித்து வைத்துக் கொண்டு அதனைத் தங்கள் இஷ்டத்திற்கும் தேவைக்கும் ஆனபடி உபயோகித்துக் கொள்ளும் ஒரு சிறு கூட்டத்தினரோ, தங்களுடைய நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியில்தான் முனைந்திருக்கிறார்களே தவிர, அப்படிப் பாதுகாத்துக் கொள்ளத் தாங்கள் செய்யும் முயற்சியானது பிறரைப் பாதிக்காமலிருக்க வேண்டுமே யென்பதைப் பற்றிச் சிறிதுகூட் கவலை கொள்வதில்லை.

இன்றைய உலகில் சிறு நாடுகளின் உரிமைகளைப் பெரிய நாடுகள் விலை கொடுத்து வாங்குகின்றன. அப்படி அந்தச் சிறிய நாடுகள் விலையை வாங்கிக்கொள்ள மறுக்குமானால் அவற்றின் உரிமைகள் நசுக்கப்படுகின்றன. அந்த நாடுகளின் ஜீவ சக்தி தலையெடுக்க வொட்டாமல் கிள்ளி யெறியப்படுகிறது. இங்ஙனம் பெரிய நாடுகள், சிறிய நாடுகளின் உரிமைகளை நசுக்குவது, வேறு சில வல்லரசுகளுக்குப் பாதகமா யிருக்குமானால் அந்த வல்லரசுகள் 'ஓ! சிறிய நாடுகளின் உரிமைகள் அழிக்கப்படுகின்றன; ஜனநாயக சக்திகளெல்லாம் ஒன்று திரண்டு வருக' என்று உலகத்தாரை அறைகூவி அழைக்கின்றன. ஆனால் அதே வல்லரசுகளுக்கு, மேற்படி சிறிய நாடுகளின் உரிமைகள் அழிக்கப்படுவது சாதகமா யிருக்குமானாலுஞ் சரி, அல்லது தங்களுடைய ஏகாதிபத்திய விஸ்தரிப்பை பாதிக்காமலிருந்தாலும் சரி, 'நடுநிலைமை' என்ற பல்லவியைப் பாட ஆரம்பித்துவிடுகின்றன. நியாயமா, அநியாயமா என்பது இவைகளுக்கு முக்கிய பிரச்னையல்ல; சாதகமா, பாதகமா வென்பதுதான் இவைகளுக்கு முக்கிய பிரச்னை. இது மட்டுமல்ல. தங்களுடைய சுயநல நோக்கத்தைச் சீக்கிரமாகவும் சுலபமாகவும் அடைய யுத்தஞ் செய்வது அவசியம் என்று இந்த வல்லரசுகளுக்குப் படுமானால் இவை உடனே யுத்தத்தில் இறங்கி விடுகின்றன. சமாதான வழி ஒன்றிருக்கிறதென்பதுகூட இவைகளுக்குத் தோன்றுவதில்லை. அப்படித் தாங்கள் நடத்தும் யுத்தமும் தரும யுத்தமாக இருக்க வேண்டுமென்பதைப் பற்றி இவை சிந்திப்பதே யில்லை. யுத்தத்தில் தருமம் என்ற ஒன்று இருப்பதாக இவைகளுக்கு நம்பிக்கையே கிடையாது. அந்த நம்பிக்கை யில்லாததால்தான், தற்கால யுத்தங்கள் மிகக் கொடூரமா யிருக்கின்றன.

உலகத்தில் பொருளாதார முரண்பாடுகளும், பொருளாதார சங்கடங்க

ளும் அதிகமாக அதிகமாக, இந்த யுத்தங்களும், இந்த யுத்தத்தின் கொடுமைகளும் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. இதை நினைக்கிற போதுதான் நாம் நடுங்கிப் போகிறோம். உதாரணமாக, இந்த இருபதாவது நூற்றாண்டின் முதல் நாற்பது வருஷத்தில் நடைபெற்றிருக்கிற யுத்தங்களின் எண்ணிக்கையையும், அவற்றினால் ஏற்பட்டிருக்கிற அழிவின் பெருக்கையும், சென்ற பத்தொன்பதாவது, அல்லது பதினெட்டாவது, அல்லது பதினேழாவது, ஏதாவது ஒரு நூற்றாண்டில் நடைபெற்ற யுத்தங்களின் எண்ணிக்கையோடும் அழிவோடும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இந்த நாற்பது வருஷ காலத்தில் நடைபெற்றிருக்கிற யுத்தங்களின் எண்ணிக்கையும் சேதமுந் தான் அதிகமா யிருக்கின்றன. இன்றிலிருந்து ஆயிர வருஷத்திற்குப் பிறகு உலக சரித்திரத்தை எழுதும் ஒரு சரித்திராசிரியன், நம்முடைய தலைமுறை காலத்தைத்தான். யுத்த அழிவு காலமாகக் குறிப்பிடுவான் என்பதில் யாருக்கும் எவ்வித சந்தேகமும் வேண்டுவதில்லை. ஏனென்றால், ஐரோப்பாவில் ரோம ஏகாதிபத்தியம் சிறப்பாக வாழ்ந்திருந்த காலத்திலிருந்து நாளதுவரை—ஏறக்குறைய இரண்டாயிர வருஷ காலத்தில்—சுமார் எண்ணூறு யுத்தங்கள் நடைபெற்றிரு கின்றனவென்று சரித்திராசிரியர்கள் கணித்திருக்கிறார்கள். ஆனால் இந்த நூற்றாண்டில், சென்ற 1914ம் வருஷத்து முதல் மகா யுத்தத்தையும், இப்பொழுது நடைபெறுகிற 1940ம் வருஷத்து இரண்டாவது மகா யுத்தத்தையும் விட்டுவிட்டுப் பார்த்தால் கூட, சென்ற மகா யுத்தம் முடிந்த பிறகு—அதாவது 1918ம் வருஷத்திற்குப் பிறகு—முதல் பத்து வருஷத்திற்குள் இருபத்தைந்து யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன! ஆயினும் உலகம் முன்னேறிக்கொண்டு வருவதாகவும், நாம் சமாதான காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் கருதிக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது சமாதானம் என்று சொல்லப்படுவதெல்லாம் யுத்த நிறுத்தந்தான்; இந்த யுத்த நிறுத்த காலத்தை, அடுத்த யுத்தத்திற்கு ஆயுதங்கள் தயாரித்துக்கொள்வதற்காக உபயோகித்துக் கொள்கிறார்கள் அரசியல் சூத்திரதாரிகள்.

இன்று, உலகத்தில், அரசியல், பொருளாதாரம், சமுதாயம், மதம் முதலிய எந்தத் துறைகளிலாகட்டும் முன்னுக்குப் பின் முரணான சக்திகள் பலவேலை செய்து கொண்டிருப்பதைக் காண்கிறோம். எதுவும் ஸ்திரமில்லாத நிலையில் இருக்கிறது. ஒரு ஜாதியோ, அல்லது ஒரு தேசமோ அடுத்த ஆறு மாதத்திற்குள் என்ன கதியாகும் என்று இப்பொழுது யாரும் துணிந்து சொல்ல முடியாது. ஒரு தேசம் மற்றொரு தேசத்தை நம்பி வாழ முடியவில்லை. இருபது ஆண்டுகளுக்கு முன்னர் சர்வதேச சங்கத்தின் மீது கட்டப்பெற்ற நம்பிக்கைக் கோட்டைகளெல்லாம் தகர்ந்து போய்விட்டன. நியாயமும் தருமமும் அவரவர்களுடைய சுய நலத்திற்காகவே உபயோகப்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

கல்ஹணன் என்ற வடமொழிப் புலவன், தான் எழுதிய 'ராஜதரங்கணி' என்ற ஒரு சரித்திர நூலிலே பின்வருமாறு கூறுகிறான்:—

நல்லதொரு வேலைத் திட்டம் தயாரிப்பது எல்லாராலும் முடியும். அப்படிப்பட்ட வேலைத் திட்டம் இல்லாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். ஆனால் அந்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதைத் தான் யாரும் கவனிப்பதில்லை. ஒவ்வொருவனுக்கும் அம்பு எய்யத் தெரிந்திருக்கலாம். ஆனால் இலக்குப் பார்த்து எய்யத் தெரிய வேண்டும்.

தற்கால உலகினுக்கு இந்த வாசகம் எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது! 1914ம் வருஷ யுத்தத்தின் போது ராஜ தந்திரிகள், என்னென்னவோ உயர்ந்த லட்சியங்களை இளைஞர்களின் முன்னிலையில் நிறுத்திக் காட்டி கொல்லவும் கொல்லப்படவும் அவர்களை யுத்தகளத்திற்கு அனுப்பினார்கள். ஆனால் ஏதோ ஒரு தேவதை சூட்சுமமாக இருந்து கொண்டு இந்த ராஜ தந்திரிகளின் லட்சியங்களைப் பரிகசித்துக் கொண்டிருக்கின்றனவோ என்று கருதும்படியாகத்தான், அந்த யுத்தத்தின் விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. 'இந்த யுத்தத்திற்குப் பிறகு ஒவ்வொரு நாட்டையும் வீரர்கள் வாழு நாடாகச் செய்யப் போகிறோம்' என்று அப்பொழுது ராஜ தந்திரிகள் கூறினார்கள். ஆனால் யுத்தத்திற்குப் பிறகு என்ன கண்டோம்? வேலையில்லாத வீரர்கள் குழிந்த கண்ணோடும் ஒட்டிய தாடையோடும் ஒவ்வொரு நாட்டின் வீதிகளினும் காட்சியளித்தார்கள். 'யுத்தத்தை நிறுத்தவே இந்த மகா யுத்தத்தை நடத்துவதாக' அப்பொழுதைய ராஜ தந்திரிகள் கூறினார்கள். ஆனால் என்ன காண்கிறோம் இப்பொழுது? அதை விடக் கடுமையான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 'உலகத்தில் சுதந்திரத்தை நிலை நாட்டவும், எல்லோரும் சேர்ந்து ஜனநாயக தேவதையை வழிபடக் கூடிய விதமாக உலகத்தைத் தயார்ப் படுத்தவுமே இந்த யுத்தத்தை ஆரம்பித்திருக்கிறோம்' என்று அப்பொழுதைய ராஜ தந்திரிகள் கூறினார்கள். ஆனால் அந்த யுத்தத்திற்குப் பிறகு என்ன கண்டோம்? ஜெர்மனி, இத்தலி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, போலந்து, யூகோஸ்லேவியா, ருமேனியா, கிரீஸ், ருஷ்யா முதலிய நாடுகள் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ சர்வாதிகார ஆட்சி முறைக்கு உட்பட்டன. அந்த மகா யுத்தத்திற்குப் பிறகுதான், இந்தியாவில் பஞ்சாப் மாகாணத்தில் ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. ரௌலட் சட்டம் பிரயோகிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான பேர் சிறைக்குச் சென்றார்கள்.

சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு, மனிதர்களின் தனிப்பட்ட உரிமைகள் கூடப் பாதிக்கப்பட்டன. ஜெர்மனி, இத்தலி, ஜர்லாந்து, பல்கேரியா, ருமேனியா, போலந்து, ருஷ்யா, ஜப்பான் முதலிய நாடுகளில் ஜனங்களின் பேச்சுரிமையும் எழுத்துரிமையும் பலத்த கண்காணிப்பில் வைக்கப்பட்டன. மனமுள்ள மனிதர்கள், அல்லது மனிதர்களின் மனதுகள் சிறைச் சாலைகளில் பத்திரமாக வைக்கப் பட்டன. அந்தச் சிறைச் சாலைகளின் சாவிகளை அரசாங்க அதிகாரிகள் வைத்துக் கொண்டு விட்டார்கள். தன்னுடைய பிரஜைகள் ஒழுக்க சீலர்களாயிருக்க வேண்டு

மென்ற பரம கருணையினுலே, ஜரிஷ் குடியரசு அரசாங்கம் என்ன செய்தது? அல்டோஸ் ஹக்ஸ்லி, பெர்னார்ட் ஷா முதலிய ஆங்கிலப் போறிஞர்களின் நூல்கள் தனது நாட்டெல்லைக்குள் வரக்கூடாதென்று தடுத்து விட்டது. அமெரிக்க ஐக்கிய அரசாங்கம், தன்னுடைய பிரஜைகள் ஷேக்ஸ்பியரையும், பைபிளையும் படித்து சிறிது நேரமாவது தங்களது லௌகிக நாகரிகத்தை மறந்திருக்கட்டும் என்று கருதியதே தவிர, பிரெஞ்சுப் புரட்சிக்கு விதை போட்ட வால்ட்டேர் என்ற புலவனின் நூல்கள் தனது நாட்டெல்லைக்குள் வரக்கூடாதென்று தடுத்து விட்டது. ஜானடார தேசம் என்னென்ன புஸ்தகங்களைத் தடுத்திருக்கிறதென்று நாம் ஒரு ஜாபிதா தயாரிப்போமானல் அது ஐந்தாறு பக்கத்துக்கு மேலாகும். இந்தியா அரசாங்கம் கூட, ஒரு சமயம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதம மந்திரியாயிருந்த ராம்ஸே மாக்டோனல்டின் சில நூல்களைத் தடுத்துவிட வில்லையா?

ஆக, சென்ற மகா யுத்தத்தின் போது உயர்ந்த லட்சியங்களென்று எவை யெவை கூறப்பட்டனவோ அவை யெல்லாம் படுகுழியாகி விட்டன. அந்தப் படுகளத்திலிருந்து தான் தற்போதைய யுத்தம் கிளம்பியிருக்கிறது. இன்று, இந்த நேரத்தில் உலகம் என்ன காட்சியளிக்கிறது? ஷேக்ஸ்பியர் எழுதிய மாக்பெத் என்ற நாடகத்தில் ராஸ் என்ற ஒரு பிரபு கூறுகிறான்:—

'ஆ! ஏழை நாடு! அது தன்னைத்தானே அறிந்து கொள்ள அஞ்சுகிறது. நம்முடைய தாய் நாடென்று அதனை எப்படிச் சொல்ல முடியும்? அது நமது சவக்குழியல்லவோ ஆகி விட்டது. அங்கு, புன்னகை தவழ்ந்த இடமெல்லாம் சூனியமாகி விட்டது. அங்கு ஜனங்களின் பெரு மூச்சும், முணகலும், வீறிட்டுக் கதறும் கூச்சலுந் தான் நிரம்பியிருக்கின்றன. அங்கு ஜனங்களின் கொடுமையான துயரம், மற்றவர்களின் சந்தோஷமாக இருக்கிறது. அங்கு, இறந்து போனவர்கள் யாரென்று விசாரிக்கப்படுவதில்லை. அங்கு புனித மக்களின் வாழ்க்கை அவர்களின் வாழ்நாள் முடிவதற்கு முன்னுலேயே இறந்து விடுகிறது.'

இந்த வருணனை, தற்போது உலகத்திலுள்ள சிறிய நாடுகளுக்கு எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது! நேற்று வரை சுதந்திர மூச்சை விட்டுக்கொண்டிருந்த நாடுகள் இன்று, தங்களது தனித் தன்மை இழந்து நிற்கின்றன. விஞ்ஞானத்தின் கொடுமையைத்தான் இந்த நாட்டு ஜனங்கள் உணர்ந்து வருகிறார்களே தவிர அதன் நன்மையை இவர்கள் அநுபவிக்கவில்லை. இவர்களுடைய கதி தான் இப்படி யென்றால் சுதந்திரமாயுள்ள நாடுகளின் நிலைமை யென்ன? இந்த நாடுகளில் வசிக்கும் அறிவாளிகளான பிரஜைகளின் எண்ண சுதந்திரம் எவ்வளவு தூரம் பாதிக்கப்படாமலிருக்கிறதென்பதை நாம் விஸ்தரித்துச் சொல்லத் தேவை யில்லை. இன்றைய உலகத்துப் பெரும்பாலான வல்லரசுகள், தங்களைச் சாசுவதமான அரசாங்கங்களாக நினைத்துக்கொண்டு பொதுஜனங்களுக்குப் பொறுப்பாயில்லாமல் காரியங்களை நடத்தி வரு

கின்றன. பத்திரிகை, சினிமா, ரேடியோ முதலியவற்றின் மூலமாக இந்த நாடுகள் பிரசாரஞ் செய்து தங்கள் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ளப் பார்க்கின்றன. இந்த நாடுகளின் பிரஜைகள், இந்தப் பிரசாரத்திற்குத் தங்கள் மனத்தை ஒப்புக்கொடுத்துவிட வேண்டியிருக்கிறது.

இவ்வளவுக்கும் காரணம் என்ன? மனிதன், மனிதத் தன்மையை இழந்து விட்டதுதான். மனமுள்ளவன்தான் மனிதன். ஆனால் இன்றைய மனிதன், அறிவைத்தான் வளர்த்துக்கொண்டானே தவிர, இதயத்தைச் சூனியமாக்கிக் கொண்டு விட்டான். ஐந்தறிவு படைத்த பிராணியாகத்தான் இவன் வளர்ந்திருக்கிறானே தவிர, ஆறறிவுள்ள மனிதனாக இவன் இன்னும் பண்படவில்லை. இவனுடைய சுய நலம் இவனையே வளைத்துக்கொண்டு அழிக்கத் தொடங்கியிருக்கிறது. "மனிதன் தனக்காக மட்டும் வாழவில்லை; பிறருக்காகவும் வாழ்கிறான்; அந்தப் பிறருடைய வாழ்விலேதான் தன்னுடைய வாழ்வைக் காண்கிறான்" என்ற உண்மையை இன்னும் மனிதன் அறிந்து கொள்ளவில்லை.

இன்றைய மனிதனுக்கு அறிவு மிகுந்திருப்பதனால், அவன், தன்னுடைய இருதய சூனியத்தை என்னென்னவோ அலங்கார பாஷைகளால் மூடி வைக்கப் பார்க்கிறான். இதனை நாகரிகம் என்று சொல்லிக் கொள்கிறான். சிறப்பாக இந்த எண்ணம் மேனாட்டு அறிஞர்களிடம் வேரூன்றி யிருக்கிறது. முதலில் இவர்கள், தங்களை நாகரிகப்படுத்திக் கொள்ளட்டும்; பிறகு பிறரை நாகரிகப்படுத்தலாம். ஆனால், இவர்களுக்குத் தங்களை நாகரிகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற மனோ இடமாவது இருக்கிறதாவென்று கேட்கிறோம். பிறரை நாகரிகப்படுத்துவதாக இப்பொழுது சொல்லப்படுவதற்கெல்லாம் அஸ்திவாரமாயமைந்திருப்பது எது? பிறரைச் சுரண்ட வேண்டுமென்ற எண்ணந்தான். இதனைத்தான் 'நாகரிகப்படுத்துவது' என்று சொல்கிறார்கள். 'ஜீரணிக்க முடியாத உண்மைகளை அழகிய வார்த்தைகளுக்குள் மூடி வைத்துப் பேசுவதுதான் ராஜதந்திரம்' என்ற ஒரு மேனாட்டு அறிஞனுடைய வியாக்கியானத்திற்கும் இதற்கும் அதிக வித்தியாசமிருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

சுதந்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசுவதுதான் இன்றைய நாகரிக உலகத்தின் சர்வ சாதாரண வழக்கமாயிருக்கிறது. ஆனால் இந்தச் சுதந்திரத்தைவிட உயர்வானது, முக்கியமானது வேறொன்று இருக்கிறதென்பதை மனிதர்கள் மறந்து விட்டார்கள். அதுதான் மனச்சாட்சி. மானிட சமூகத்தின் ஆரம்ப சரித்திர காலத்திலிருந்து இந்த மனச்சாட்சிக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்துப் பேசி வந்திருக்கிறார்கள் அறிஞர்கள். 'மனத்தைத் தூய்மைப் படுத்து; அதனை விசாலமாக்கு' 'உள் நோக்கிப் பார்' 'உன்னை நீயே அறி' என்பன போன்ற சொற்றொடர்கள் சாதாரண பேச்சு வழக்கில் உபயோகிக்கப்படுகின்றன. ஆனால் இதனைச் செயலில் கொண்டு வர வேண்டியது இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் முக்கியமானதாகும். மெனாண்டர் என்ற

இரேக்க கவிஞன் கூறுகிறான்:- 'நம்முடைய மார்பகத்திலேயே நாம் ஒரு கடவுளை வைத்துக் கொண்டிருக்கிறோம். அது தான் மனச்சாட்சி. * * * தனக்காக மட்டும் வாழ்வது வாழ்வல்ல. நீ எந்தக் காரியத்தைச் செய்தாலும், கடவுளும் அந்தக் காரியத்தில் கலந்திருக்கிறார் என்ற உண்மையை நம்பிச் செய். மனிதனுக்குத் தேவையானது நிறைந்த மனம் தான்.'

ஆனால் துரதிருஷ்ட வசமாக இன்று மனிதன் நிறைந்த அறிவும் குறைந்த மனமும் உடையவனாயிருக்கிறான். மனம் என்ற ஒன்று இருப்பதாகக் கூட இவன் கருதுவதில்லை. அதனைக் குழி தோண்டிப் புதைத்து விட்டதாகக் கருதுகிறான். ஆனால் அஃது இறந்து படாது. ஆதலின் அதனைச் சீர் படுத்தி நிறைவுறச் செய்ய வேண்டுவது இன்றியமையாத கடமையாகும். இஃது அநுபவசாத்தியமற்ற காரியம் என்று யாரும் ஒதுக்கித் தள்ளி விட வேண்டாம். இன்று, இவன் இதனைப் புறக்கணித்து விட்டால் இன்னும் அதிகமான ஆபத்தை இவன் வருவித்துக் கொள்ள யத்தனிக்கிறான் என்பது தான் அர்த்தம். உலகத்து ராஜ தந்திரிகள், ஆகாய விமானங்களின் விர்ரென்ற ஓசைக் கிடையே, பீரங்கி முழக்கத்துக் கிடையே, தங்கள் மனம் என்ன சொல்கிறதென்பதைச் சிறிது நேரமேனும் அமைதியாயிருந்து கேட்பார்களாக.

டால்ஸ்டாய் என்ற ருஷ்ய ஞானி கூறுகிறான் :—

"இந்தக் காலத்தில் வசிக்கும் ஒவ்வொரு மனிதனும், சிறப்பாகக் கிறிஸ்தவ உலகத்தில் வசிக்கும் ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே என்ன சொல்லிக் கொள்ள வேண்டுமென்றால் 'நான் ஒரு சக்ரவர்த்தியாயிருக்கலாம்; போர் வீரனாயிருக்கலாம்; மந்திரியாயிருக்கலாம்; ஆனால் எல்லாவற்றிற்கும் முதலாவதாக நான் ஒரு மனிதன்' என்பதுதான்."

இதுதான் நம்முடைய கோரிக்கையும்.

சட்ட மறுப்பு கிடையாது

மகாத்மா காந்தி 27-4-40 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதியிருக்கும் ஒரு கட்டுரையின் முக்கியமான சில பாகங்கள் வருமாறு:—

இந்தத் தடவை காங்கிரஸ் காரியக்கமிட்டி, தெரிந்தே இடுக்கிடத்தக்க, அல்லது புதிய தீர்மானம் எதையும் நிறைவேற்றவில்லை. ஏனென்றால் அதன் முன்னர் எவ்வித வேலைத் திட்டமும் இல்லை. சட்டமறுப்பென்பது என்னால் உருவகப்படுத்த வேண்டியதாயிருக்கிறது. ஆனால் உத்தேசிக்கப் படுகிற இயக்க சம்பந்தமாக அநேக விஷயங்களைக் கமிட்டி ஆலோசனை செய்தது. * * * சட்டமறுப்பு என்று சொன்னால், எதிரியும் அது சமாதான முறையில் நடைபெறுகிறதென்று கருதும்படியாக இருக்க வேண்டும். தனக்குத் தீங்கிழைக்கக் கூடிய விதமாக இந்த இயக்கம் நடைபெறுகிறதென்று அவன் கருதக் கூடாது. சாதாரண இங்கிலீஷ்காரன், அஹிம்சை (ஹிம்

சையை மறைப்பதற்காக) ஒரு போர்வை என்றுதான் கருதுகிறான். முஸ்லீம் லீக்கைச் சேர்ந்தவர்களோ தங்களுக்கு விரோதமாகத்தான் சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்படுவதாக நினைக்கிறார்கள். என்னைப் பொறுத்த மட்டில் பிரிட்டிஷாரை ஒரு நிர்ப்பந்தத்திற்கு—சிறப்பாக அவர்களுக்கு இருப்பதா இறப்பதா வென்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிற போது—உட்படுத்த வேண்டுமென்பது என் விருப்பமல்ல.

காங்கிரஸின் ஒத்துழைப்பினால் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஏற்படுகிற செல்வாக்கு இல்லாமற் செய்துவிட வேண்டுமென்றுதான் நான் கூறுகிறேன். இப்பொழுது என்னுடைய திருஷ்டிக்குப் படுகிற வரையில் பொது ஜன சட்ட மறுப்பியக்கம் என்பது நடைபெறக் கூடாத காரியம். ஒன்று தனிப்பட்ட நபர்கள் சட்ட மறுப்பியக்கத்தை நடத்துவது; அல்லது நான் மட்டும் இயக்கத்தை நடத்துவதென்பதுவே ஆலோசிக்கப் பட வேண்டும். எப்படியிருந்த போதிலும் காங்கிரஸினுடையவும் காங்கிரஸை ஆதரிக்கிற லட்சக் கணக்கான பேர்களினுடையவும் பின்பலம் அவசியம் தேவை.'

காங்கிரஸுக்கு எவ்வித வேலைத் திட்டமும் இல்லையென்பதை காந்தியடிகள் இக்கட்டுரையின் மூலமாக அங்கீகரித்துக் கொண்டிருப்பதை நாம் பாராட்டுகிறோம்.

ஆண்ட்ரூஸ்

காலஞ் சென்ற ஆண்ட்ரூஸ் ஓர் உண்மைக் கிறிஸ்தவர். இதனால்தான் 'தீனபந்து' என்ற கௌரவம் இவருக்கு கிடைத்தது. எங்கெங்கு ஜனங்கள், கடவுள் நெறிக்கு மாறுபட்ட முறைகளினால் அடக்கவும் ஒடுக்கவும் பட்டார்களோ அங்கெல்லாம், ஸ்ரீ ஆண்ட்ரூஸைப் பார்க்கலாம். மதத்தின் பெயரால் இந்தியாவில் அநுஷ்டிக்கப்பட்டு வந்த தீண்டாமை வழக்கத்தை அவர் மனமார வெறுத்து வந்தார். தீண்டப் படாதவர்களின் பரிதாப நிலையைக் குறித்துப் பேசுகிறபோது, அவர் முகம் சிவக்கும்; கண்கள் கனலுமிழும். 'ஆண்டவன் சந்நிதானத்தில் எல்லாரும் ஒன்றல்லவா?' என்று தழதழத்த குரலில் கேட்பார். நிற, வகுப்பு, ஜாதி வேற்றுமைகள் பாராட்டப்படுவதை அவர் அறவே வெறுத்து வந்தார். இந்த வித்தியாசங்கள் ஒழிவதற்காக அவர் பெரும் பாடு பட்டும் வந்தார். அவர் அன்பையே போதித்து அன்பாகவே வாழ்ந்து வந்தார். 'அன்பு எப்பொழுதும் பிறர் மீது பொறாமை கொள்வதில்லை; தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்வதில்லை; அகங்காரம் கொள்வதில்லை; மரியாதைக் குறைவாக நடந்து கொள்வதுமில்லை. * * * அன்பு, துன்பத்தைக் கண்டு எப்பொழுதும் சந்தோஷிப்பதில்லை; உண்மையின் வெற்றியைக் கண்டுதான் சந்தோஷிக்கிறது' என்று செயிண்ட் பால் என்ற கிறிஸ்தவ முனிவன் கொரிந்தியர்களைப் பார்த்துக் கூறிய வாசகத்திற்கு இலக்கியமாகவே இருந்தார் ஸ்ரீ ஆண்ட்ரூஸ். அவர் ஆத்மா சாந்தியடைக!

சீனாவைப் பற்றிய சில உண்மைகள்

——டாக்டர் எஸ். பி. சின்ஹா

சீனாவின் அரசியல் வாழ்க்கையிலே, பாக்ஸர் கலகம் (Boxer-Rebellion) ஒரு முக்கியமான நிகழ்ச்சி. இந்தக் காலத்திலிருந்து அந்த நாட்டில் சில மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. ஆனால் அங்கு நிலை பெற்றிருந்த பழைய ஏகாதிபத்தியத்தையும் அதனுடைய தன்மைகளையும் வேரோடு களைந்தெறிவது அவ்வளவு லேசான காரியமாயிருக்கவில்லை. உள்ளுக்குள்ளேயே கலகம் கனன்று கொண்டிருந்தது. ராணுவ தளகர்த்தர்களின் ஆதிக்கத்தை அடியோடு வேரறுப்பதற்குத் துடித்துக் கொண்டிருந்தனர் பலர். இவர்களில், சீனர்கள் இன்னும் தங்கள் இருதயத்தால் வணங்கும் டாக்டர் ஸன்-யாட்-சென் மிக முக்கியமானவர். இவர் ஐரோப்பாவிலிருந்து தன் தாய் நாட்டுக்குத் திரும்பி வந்தார். சீனர்களை ஒன்று சேர்த்து புரட்சிக்கு விதை போட ஆரம்பித்தார். கொஞ்சம் கொஞ்சமாக புரட்சியாளர்களின் கூட்டம் பெருகத் தொடங்கியது. கிளர்ச்சிகள் ஆரம்பித்தன. சீனாவிலே ஏற்பட்ட 1911வது வருஷப் புரட்சி இதினுடைய பரிணாமந்தான். இந்தப் புரட்சியானது, சீன ஏகாதிபத்தியத்தின் கடைசி மகுடமாகிய மஞ்சு அரச பரம்பரையையும் அதனுடைய ஏகாதிபத்திய ஆதிக்கத்தையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. இந்தப் புரட்சியைத் தலைமை வகித்து நடத்தியது ஸன்-யாட்-ஸென். ஆனால் இந்தப் புரட்சியினாலே பூரணமான வெற்றி கிடைக்கவில்லையென்று தான் கூற வேண்டும். ஏனெனில், புரட்சிக்குக்குப் பின், தேசத்திலே ஜனநாயக ஆட்சி தோன்ற வேண்டியதிருக்க அதற்குப் பதிலாக, சேனைத் தளபதிகள், ஆபீசர்கள் இவர்களிற் பலர் பல மாகாணங்களில் துண்டு துண்டாகத் தங்களது அதிகாரத்தை நிலை நாட்டி நாட்டை ஆளத் தொடங்கினர். இது ஒரு பெரிய ஆச்சர்யமான நிலைமையாயிருந்தது. சில பாகங்களிலேதான் புரட்சியாளர்களால் ஜனங்களுக்குச் சொந்தமான——ஜனநாயக——சர்க்கார் அமைக்க முடிந்தது.

ஆனால் பல தடைகளும் இடைஞ்சல்களும் குறுக்கிட்ட போதிலும், டாக்டர் ஸன்-யாட்-ஸென்னும் அவருடைய தோழர்களும் தங்களுடைய கருமத்திலேயே கண்ணாயிருந்தனர். 'கோமிண்டாங் கட்சி' (சீன தேசிய ஸ்தாபனம்) அமைக்கப்பட்டது. சீன தேசம் மெது மெதுவாக ஜன நாயகப் பாதையிலே செல்ல ஆரம்பித்தது.

பொதுவுடைமைக் கட்சி ஸ்தாபனம்

மஞ்சூ ஏகாதிபத்தியம் வீழ்த்தப்பட்ட பின் சீன தேசத்திலே ஒரு புதிய தேசீய கனவு பரவ ஆரம்பித்தது. மக்கள் ஜன நாயகத்திலே நாட்டங் கொள்ளலானார்கள். இந்த எண்ணங்களோடு அந்த தேச மக்களின் இதயத்திலே கார்ல் மார்க்ஸினுடைய தத்துவம் மலர ஆரம்பித்ததில் ஆச்சரிய மில்லை. 1917ம் வருஷம் நவம்பர் மாதத்தில் ருஷ்யாவிலே நடைபெற்ற பிரசித்தமான புரட்சியின் செய்திகள் சீன தேசப் புரட்சியாளர்களைச் சிந்திக்கச் செய்தன. அவர்கள் இந்த ருஷ்யப் புரட்சியின் மகத்துவம் பொருந்திய பலன்களையும் அதுவளர்ந்த சரித்திரங்களையும் அதற்காதாரமாயிருந்த அந்தத் தத்துவத்தையும் புரட்டிப்பார்க்க முனைந்து விட்டார்கள். ஐரோப்பாவிலிருந்து வந்த சீனர்கள் இந்தச் செய்திகளை சீன தேசம் பூராவும் பரப்புவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர். இதனால் சீனாவிலே ஒரு புதிய சக்தி வளர்ந்தது. பெரும்பாலார் தீவிர எண்ணமுள்ளவர்களாகி மார்க்ஸின் தத்துவத்திலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். பொதுவுடைமைக் கட்சிகளை ஸ்தாபிப்பதற்கு ஏற்பாடாயிற்று.

1911ம் வருஷம், சென்-டு-ஹ்ஸியு (Chen-Tu-Hsiu) என்ற சீனர் ஒருவர் மாஸ்கோவின் மூன்றாவது வெளிநாட்டுச் சங்கத்தோடு சம்பந்தம் ஏற்படுத்திக் கொண்டார். அந்தப் பொதுவுடைமை வெளி நாட்டுச் சங்கமானது 1920ம் வருஷத்திலே எம். மார்லின் (M. Marlin) என்பவரைத் தன்னுடைய தூதராக சீனாவுக்கு ஷாங்காய் நகருக்கு அனுப்பியது. இவர் 1921ம் வருஷம், ஷாங்காய் நகரத்தில் பொதுவுடைமைக் கட்சியை ஸ்தாபித்தார். அந்தக் கூட்டத்திற்கு அப்பொழுது 12 பேர்களே வந்திருந்தார்கள். அவர்கள் சீனாவின் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் வந்தவர்கள். இவர்களில் சென்-டு-ஹ்ஸியு, லிடா-சாவோ (Li-ta-Chao) மாவோ-த்ஸே-டுங் (Mao-Tse-Tung) ஆகியோர் முக்கியமானவர்கள். பலரும் பொதுவுடைமைக் கட்சி அங்கத்தினர்களாகப் பதிவு செய்து கொண்டார்கள்.

இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து ஹூபே, ஷான்ஸி, பீபிங், காண்டன், ஷாண்டுங் மாகாணங்களில் பொதுவுடைமைக் கட்சியின் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பட்டன. இந்தக் காலத்தில் பாரிஸ் நகரத்தில் வாசித்துக்கொண்டிருந்த சீன மாணவர்கள் அங்கே ஒரு பொதுவுடைமைக் கட்சியைத் தோற்றுவித்தனர். அதில் சா ஊ என் ஸாயி, லிலி-ஸான் முக்கியமானவர்கள். மாஸ்கோ, ஜப்பான், ஜெர்மனி இந்த நகரங்களிலும் சீன மாணவர்கள் பொதுவுடைமைக் கட்சி அமைத்தார்கள். ஜெர்மனியில் இந்தக் கட்சியை அமைத்த சீனர்களில் சூ-தேஹ் (Chu Teh) முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர். இவர் இன்று சீனாவிலே செஞ்சட்டைப் படைக்கு பிரதம தளபதியாக இருக்கிறார்.

சீனா தேசத்திலே, பொதுவுடைமைக் கட்சி பிராபல்யமடைந்ததை நாம் ஆராய வேண்டுமானால் அந்தக் கட்சி ஸ்தாபிக்கப்பட்ட 1921ம் வருஷத்திலிருந்து சீன தேச சரித்திரத்தைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். இதை 1921ம் வருஷத்திலிருந்து 1937ம் வருஷம் வரை மூன்று அத்

தியாயங்களாகப் பிரிக்கலாம். அதாவது, 1921ம் வருஷத்தில் பொதுவுடைமைக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டு, 1927ம் வருஷம் வரை அதாவது பொதுவுடைமைக் கட்சியும், சீன தேசீய ஸ்தாபனமாகிய கோமிண்டாங் கட்சியும் ஒன்று யிருந்து வேலை செய்த காலம் வரை ஒரு அத்தியாயமாகவும், 1927ம் வருஷத்திலிருந்து 1936ம் வருஷம் வரை மேற்கண்ட இரண்டு ஸ்தாபனங்களுக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டுப் பெரிய உள்நாட்டுக்கலகம் நடந்தவரை ஒரு அத்தியாயமாகவும், பின்னே 1937ம் வருஷத்திலிருந்து இந்த இரண்டு ஸ்தாபனத்தினரும் தங்களுடைய வேற்றுமைகளை உதறித் தள்ளிவிட்டுத் திரும்பவும் ஒன்று சேர்ந்து ஜப்பானியர்களை எதிர்த்துப் போராடி வருவதை ஒரு அத்தியாயமாகவும் ஆக மூன்று அத்தியாயங்களாக நாம் நோக்குதல் வேண்டும்.

முதல் அத்தியாயம்

1921 முதல் **1927** வரை

பொதுவுடைமைக் கட்சி ஸ்தாபிக்கப்பட்ட 1921 வருஷத்திலிருந்து சீனப் பொதுவுடைமை வாதிகள், தொழிலாளிகள், மாணவர்கள் இவர்களை ஒன்று சேர்த்தார்கள். அவர்களுடைய உரிமைகளைக் காப்பாற்றி ஸ்திரப்படுத்துவதற்காக அநேக வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன.

1923ம் வருஷத்தில் டாக்டர் ஸன் யாட்ஸென் ருஷ்யாவோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். இதன் விளைவாக 1924ம் வருஷத்தில் அவருக்கு உதவியாக ருஷ்யா, தன்னுடைய பிரதிநிதிகள் பலரை மாஸ்கோவிலிருந்து சீனவுக்கு அனுப்பியது. இவர்கள், கோமிண்டாங் கட்சியை லெனின் அமைத்த கட்சியின் ரீதியிலே பலப்படுத்தினார்கள். சீனப் பொதுவுடைமை வாதிகளும் இந்தக் கோமிண்டாங் கட்சியோடு சேர்ந்து ஒத்துழைப்பதாக நிச்சயித்தார்கள்.

முதலாவது ஐக்கிய முன்னணி

இந்த 1924ம் வருஷம் சீனப்பொதுவுடைமை வாதிகள், கோமிண்டாங் கட்சியோடு ஒத்து வேலை செய்வதற்கு ஒரு வேலைத் திட்டத்தைச் சமர்ப்பித்தார்கள். அதை டாக்டர் ஸன்-யாட் ஸென்னும் ஒப்புக்கொண்டார். இந்த வேலைத் திட்டம் இரண்டு பிரிவுகளுடையது; ஒன்று வெளி நாட்டு விஷயம்; (External Policy) மற்றொன்று உள நாட்டு விஷயம். (Internal Policy.)

'ஜப்பான் முதலிய அயல் நாட்டுச் சக்திகளுக்கு எதிராக உள் நாட்டு ஏகாதிபத்திய விரோதிகளை ஒன்று சேர்த்தல்.' அதாவது, சீனுவின் எல்லா தேசிய சக்திகளையும் ஒன்று சேர்த்து, சீன தேசத்தின் நிலைமைக்குகந்த வாறு, அரசியலிலும், பொருளாதாரத்திலும் பூரண சுதந்திரத்தை ஸ்தாபித்தல். மற்றும், தங்களுடைய தேசத்தின் வெளிநாட்டுச் சக்திகளின் அதிகாரங்களை அகற்றுதல். இதுவே அவர்கள் சமர்ப்பித்த அவர்களுடைய வெளிநாட்டு அரசியல் முறை. இதோடு, மேற்கண்ட அரசியல் முறையை புரட்சிகரமான, அதாவது முழு மாற்றமான ரீதியிலே நடத்தவேண்டும் என்ற ஷரத்தும் அந்த வெளிநாட்டு விஷயத்தில் ஒன்று. பொதுவுடைமைக் கட்சி, கோமிண்டாங் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும் ஒன்று சேர்ந்து மேற்கண்ட அரசியல் முறையை தேசத்திலே அமுலுக்குக் கொண்டுவந்து

உள்நாட்டிலே உள்ள மற்ற அரசியல் முறைகளை அதாவது ஏற்கனவே கூறப்பட்டிருக்கும் தளபதிகள் ஆபீசர்கள் இவர்களுடைய ஆட்சியை அடியோடு மாற்றி தேசம் பூராவிலும் ஒரு பெரிய ஜனநாயக அரசியல் முறையை அமைப்பது என்றும் முடிவு செய்யப் பட்டது. இந்த முறையை வகுத்து அதை கோமிண்டாங் கட்சி ஒப்புக்கொள்ளும்படி செய்யப்பட்டதில் சீனப் பொதுவுடைமை வாதிகள் தங்களது பொதுவுடைமைத் தத்துவ திருஷ்டியிலிருந்து கொஞ்சமும் பின் வாங்கவோ, அல்லது விட்டுக் கொடுத்து விடவோ இல்லையென்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. சீன சமூகத்தை அடியோடு மாற்றி யமைக்கும்படியான புரட்சியிலே நாட்டங் கொண்டுள்ள அந்தப் பொதுவுடைமை வாதிகள், அந்தப் புரட்சித் துறையிலே புகுவதற்கு முன் மேற்கண்ட காரியங்களைச் செய்ய வேண்டியது அவர்களுக்கு அவசியமாயிருந்தது. இந்த முயற்சிக்கு கோமிண்டாங் கட்சியினுடைய உதவியையும் அவர்கள் பெற்றுக் கொண்டது ஒரு குற்றமில்லை யல்லவா?

இப்பால் இந்த உபய கட்சியார்களும் 1925-27ல்பெரிய புரட்சிக்குத் தயாரிப்பில் முனைந்தார்கள். கோமிண்டாங் கட்சியில் உள்ள தொழிலாளர்கள், விவசாயிகள் பொதுவுடைமைக் கட்சியில் சேர்க்கப்பட்டனர். ஆனால் இங்கு ஒரு விஷயம் என்னவென்றால் விவசாயிகளுக்காக வகுக்கப்பட்ட வேலைத் திட்டம் சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை.

1927ம் வருஷம் வரை சீனப் பொதுவுடைமைக் கட்சி, சென்–டு–ஹஸியூவின் ஆதிக்கத்திலிருந்தது. நினைத்ததை முடிக்கக்கூடிய அவ்வளவு பிரபலஸ்தராய் அவர் இருந்தார். இதற்கிடையில், மாவோ-த்ஸே-துங் முதலிய தலைவர்கள் விவசாயிகளிடத்திலே வர்க்க உணர்ச்சியைத் தூண்டி அந்த முறையிலே கிளர்ச்சியை நடத்த விரும்பினர். ஆனால், சென்–டு ஹஸியூ இதை விரும்பவில்லை. அவர் கட்சி முழுமையும் இந்த முறையில் வேலை செய்வதைத் தடுத்துவிட்டார். இதனுடைய பலன் என்ன வாயிற்று என்றால் விவசாயிகளிடையிலே ஒரு உருப்படியான காரியம் செய்ய முடியாது போனதோடு இதனால் பின்னே பொது வுடமைக் கட்சிக்கு ஒரு பெரிய நஷ்டமும் ஏற்பட்டதென்றே சொல்ல வேண்டும். சென்–டு– ஹஸியுவின் இந்த நடைமுறையில், எந்த நோக்கோடு ஐக்கிய முன்னணி அமைக்கப் பட்டதோ அதற்குரிய முழுப் பலனையும் பொது வுடமைக்கட்சி பெற முடியாது போயிற்று.

சன்யாட் சேன் மரணம்

1925ம் வருஷம் டாக்டர் ஸன்-யாட்–ஸென் மரண மடைந்தார். இதன் பின்னே கோமிண்டாங் கட்சி மிதவாதிகள் தரப்பில் (Right wing) சென்றது. மெது மெதுவாக அவர்கள் தீவிரப் போக்கிலிருந்து விலக ஆரம்பித்தார்கள். ஆனால் 1926ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் சியாங் கைஷேக், சீக்கிரமாக தீவிர வாதிகளையும் மித வாதிகளையும் ஒன்று கூட்டி பொதுவுடமை வாதிகளோடும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு சீனாவின் வட பாகத்திலே ஆட்சி நடத்தும் ராணுவ தளகர்த்தர்களுக்கு எதிராக யுத்தம் தொடுத்தார். இந்த யுத்தம் சீன சரித்திரத்திலேயே முக்

கியமானதாகும். இந்த யுத்தந்தான், பீகிங்கில் நடை பெற்று வந்த கொடுங் கோலாட்சிக்கு ஒரு முடிவு கட்டியது. மற்றும் 1925ம் வருஷ முதல் 1927ம் வருஷம் வரை நடை பெற்ற புரட்சி யும் ஒருவிதமாக அடங்கியது. ஆனால் இந்த யுத்த காலத்தில் தீவிர வாதி களுக்கும் மித வாதிகளுக்கும் இடை யே இருந்த அபிப்பிராய பேதம் முற்றி 1926ம் வருஷக் கடைசியில் சியாங் கை ஷேக், நான் கிங்கில் சர்க் காரை ஸ்தாபித்தோடு ஹைன்கா ஊ சர்க்காருடன் இருந்த உறவையும் அறுத்துக் கொண்டு விட்டார். இந்தக் காலத்தில் எடுத்துக் கொண்ட இந்த நடவடிக்கையில் சியாங் கை ஷேக் குக்கு பெரும் முதலாளிகளும், வியா பாரிகளும், வெளி நாட்டுச் சக்தி களும் உதவி செய்தார்க ளென்றால் நீங்கள் ஆச்சர்யப் படக் கூடாது!

இந்தக் காலத்தில் ஹைன்கா ஊ அதாவது ஊஹான் சர்க்காரோடு பொதுவுடமைக்காரர்களைத் தவிர்த்து கோமின்டாங் கட்சியின் பெரும்பா லான தீவிர வாதிகளும் கலந் திருந் தார்கள். இவர்கள் சியாங் கை ஷேக் கின் சர்க்காருக்கு, மிதவாதிகள், புரட்சிக்கு விரோதிகள் என்ற பெய ரிட்டனர்.

1927ம் வருஷம் ஏப்ரல் மாதம் சியாங் கை ஷேக் சர்க்கார், தன்னு டைய அடக்கு முறையைக் கடுமை யாக அமுலுக்குக் கொண்டு வந்தது. நான்கிங், ஷாங்காய், கான்டன் இந்த நகரங்களில் ஆயிரக் கணக்கான பொதுவுடமை வாதிகள் கொன்று குவிக்கப் பட்டனர். தொழிலாளர் சங்கங்கள் அழிக்கப்பட்டன. இது. வூ ஹானில் ஐக்கிய முன்னணி நிலை பெற்றிருந்த காலம்.

ஐந்தாவது மகா நாடு

1927ம் வருஷம் மே மாதத்தில் வூ ஹானில் பொதுவுடமை மகா நாடு கூடியது. இந்தக் காலத்தில் சென்-டு-ஹ்ஸியோவுக்கு கட்சியில் பலமான செல்வாக்கிருந்தது. சியாங் கை ஷேக் சர்க்கார் பலமான அடக்கு முறையை ஆரம்பித்து ஆயிரக் கணக்கில் பொது வுடமை வாதிகளைக் கொன்று குவித் துக் கொண்டிருந்த இந்தக் காலத்தி லுங் கூட, நாம் மிகவும் சாவதான மாகக் காரியங்கள் செய்ய வேண்டும், மிதவாதிகளுக்கு அடங்கி யிருக்க வேண்டும் என்ற அபிப்பிராயமுடைய வராய் இந்த சென்-டு-ஹ்ஸியோ இருந் தார். மற்ற தலைவர்கள் இந்த நடை முறையை எவ்வளவோ கண்டிப்பாக எதிர்த்தார்கள். ஆயினும் மென்ன? சென் டு ஹ்ஸியோ இவற்றைச் சட் டை செய்யவில்லை. மித வாதிக ளோடு ஒரு ஒப்பந்தத்திற்கு வருவ தற்கு அவர் துடித்துக் கொண்டிருந் தார். ஒப்பந்தமும் ஆயிற்று.

சீன விவசாயிகள் சங்கம்

பொதுவுடமை மகா நாட்டின் மேற் கண்ட முடிவு மாவோ-த்ஸே-துங்குக் கும் அவருடைய தோழர்களுக்கும் மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. அவர்கள், அந்த மகா நாட்டுக்குப் பிறகு, 'விவசாயிகள் சங்கம்' ஒன் றை ஸ்தாபித்தனர். இந்தச் சங்கத் துக்கு மாவோ-த்ஸே-துங் தலைவ ரானார்.

பொதுவுடமை வாதிகள் இந்த விவ சாயிகள் சங்கத்தைப் பொருட் படுத் தாததோடு ஒரு ஏளனமாகவும் பார்க் கத் தொடங்கினர். அப்படி யிருந் தும், ஹூபே, கியாங்ஸி, பூகியன் முதலிய இடங்களில் விவசாயிகளின் கிளர்ச்சி மிக வேகமாகப் பரவியது.

இதைப் பார்த்து கோமின்டாங் சர்க்கார் நடுக்கங் கொண்டனர். இந்தக் கூட்டத்தை முளையிலேயே கிள்ளியெறிந்து விட வேண்டும் என்று எண்ணினார்கள் இவர்கள். இதற்கான நடை முறை யோசிக்கப்பட்டது. 1927ம் வருஷம் மே மாதம், 21ந் தேதி ஹூனான் நகரத்திலே கலகம் கிளம்பியது. அநேக விவசாயிகளும் தொழிலாளிகளும் வதைக்கப்பட்டனர்.

ஐக்கிய முன்னணியின் முறிவு

மேற் கண்ட நிகழ்ச்சிகளுக்குச் சிறிது காலத்திற்குப் பின், அதாவது அதே 1927ம் வருஷம், பொதுவுடமை வாதிகளுக்கும், ஆஹான் கோமின்டாங் கட்சிக்கும் ஏற்பட்டிருந்த உடன்படிக்கை சிதைவுண்டு போயிற்று. இந்த நிகழ்ச்சியால் சீனப் பொதுவுடமை வாதிகளின் வாழ்க்கையிலேயே ஒரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. சீனப் பொதுவுடமை சர்க்காரின் தலைவராயிருந்த மாவோ-த்ஸே-துங்கிடம் மூன்று வருஷங்களுக்கு முன் இந்த நிகழ்ச்சியின் காரணத்தைக் கேட்ட போது அவர், ஆஹான் பொதுவுடமைச் சர்க்கார் முறிந்ததற்கு முக்கிய பொறுப்பாளி, சென்-டு-ஹ்ஸியோ தானென்றும், அவருடைய தான் தோன்றித் தனமான நடவடிக்கைகளாலேயே, பொதுவுடமைக் கட்சி ஒரு சரியான வழியைப் பின் பற்ற முடியாது போய் விட்டதென்றும் கூறினார்.

இந்தக் காலத்தில், பொதுவுடமை வாதிகள், தங்களுடைய வேலைத் திட்டத்தை ஒரு நிச்சயப் படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் அவர்கள், சென்-டு-ஹ்ஸியோவினுடைய தலைமையில் எந்த வழியையும் பின்பற்ற முடியாது போய் விட்டது. உண்மையிலேயே, சென்-டு-ஹ்ஸியோ ஆயுத பாணிகளான தொழிலாளர்களையும் விவசாயிகளையும் கண்டு பயந்து விட்டார். கோமிண்டாங் கட்சிக்கு எதிராக ஆயுத மேந்திப் போர் புரிய வேண்டிய தருணம் வரவே அவர் இன்னமும் நடுங்கி விட்டார். அவருக்கு ஒரு வழியும் புலனாக வில்லை. சந்தர்ப்பத்துக்காகத் தலைவன் காத்திருப்பதில்லை. ஏன்? அவன் சந்தர்ப்பத்தை சிருஷ்டிப்பவன். ஆனால் சென்-டு-ஹ்ஸியோவினுடைய நிலைமையோ, நேரிட்ட சந்தர்ப்பத்தையும் இழப்பதாய் முடிந்தது. அவர் என்ன செய்வார் பாவம்! அவருடைய வர்க்க சுய நலம் அவரைக் கவ்விக் கொண்டது. பரிதாபம். அவர் தோற்று விட்டார்! எப்படி? யுத்தத்திலல்ல. யுத்தமில்லாமலேயே அவர் தோற்று விட்டார்!

ஆனால் இந்த நிலைமை யேற்பட்டதற்கு சென்-டு-ஹ்ஸியோ மட்டும் காரணஸ்தராயில்லை. மாவோ-த்ஸே-துங் அபிப்பிராயப்படி போரோடின் என்பவரும் இதற்குப் பொறுப்பாளியாவர். இவர் சென்-டு-ஹ்ஸியோவைப் பார்க்கிலும் நல்ல தருணத்தில் அதிகமாக நடுங்கி விட்டார். முதலாளிகளுடைய சந்தோஷத்தைப் பெற வேண்டிய நிமித்தம் இவர், தொழிலாளிகளை நிராயுதபாணிகளாக்குவதற்கும் துணிந்து விட்டார். இருப்பினும் கடைசி தருணத்திலாவது தன்னுடைய போக்கை இவர் மாற்றிக் கொண்டு தொழிலாளிகளை ஆயுதம் ஏந்தும்படி உத்திரவு கொடுத்தது விசேஷந்தான்! இந்த போரோடின் என்பவர் ஆஹானிலிருந்த சர்க்காருக்கு முக்கிய யோசனையாளராக

(அட்வைசர்) ருஷ்யாவிலிருந்து வந்தவர்.

மேற் கண்ட இருவர்களைத் தவிர இந்த வேலையில், தோழர் எம். என். ராயும் முக்கியமானவர். மாவோ-த்ஸே-துங்குக்கு உதவியாக, 'தர்ட் இன்டர் நேஷனல்' மூலமாக அனுப்பப்பட்டு வந்தவர் இவர். இவரும் தக்க சந்தர்ப்பத்தில் ஒரு சரியான வழியைக் காட்டத் தவறி விட்டார். மற்றும், மாவோ-த்-ஸே துங்கினுடைய யோசனைப்படி கோமின்டர்னிலிருந்து போரோடின் பேருக்கு ஒரு தந்தி வந்தது. அதில் ஜமீன்தார்களிடமிருக்கும் நிலங்களை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கும் வேலையைக் கையாளும்படி குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தத் தந்தியின் நகலை, அந்தக் காலத்தில் வூஹான் சர்க்காருக்குத் தலைவராயிருந்தவரும் தற்பொழுது சீனாவில் ஜப்பானியரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பினாமி சர்க்காரின் தலைவராயிருப்பவருமான வாங்-சிங்-வாய் (Wang-Ching Wei) என்பவருக்கு எம். என். ராய் காண்பித்து விட்டார். இதனால் வூஹான் சர்க்கார் உடனே பொதுவுடமை வாதிகளை கோமிண்டாங் கூட்டுக் கட்சியிலிருந்து விலக்கி விட்டார்கள். இதனுடைய பலனாக வூஹான் சர்க்காரிருந்த பலவீனமாகி விட்டது. இந்த சந்தர்ப்பத்தை சியாங் கை ஷேக் வெகு அருமையாக உபயோகித்துக் கொண்டார். அவர் வூஹான் சர்க்காரை ஒரே அடியில் அழித்து விட்டார். கோமிண்டாங் கட்சியில், தீவிர வாதிகளும் மித வாதிகளும் ஒன்று சேர்ந்தார்கள். சியாங் கை ஷேக் பெரிய சர்வாதிகாரியாகி விட்டார். அடக்குமுறை ஆரம்பமாகியது. ஆயிரக் கணக்கான பொதுவுடமை வாதிகளும், இவர்களுக்கு உதவி புரியும் காரணத்திற்காக குற்ற மற்ற தொழிலாளிகளும் விவசாயிகளும் வேட்டையாடப் பட்டனர்.

சீனாவில் சோவியத் கிளர்ச்சி

வூஹான் சர்க்காரின் ஐக்கிய முன்னணி உடைந்து போன பிற்பாடு சீன தேசத்திலே பெரிய உள் நாட்டுக் கலகம் ஏற்பட்டது. கோமின்டாங் சர்க்கார் பொதுவுடமை வாதிகளின் உயிரைக் குடிக்க ஆரம்பித்து விட்டது. ஆயிரக் கணக்காக பொதுவுடமை வாதிகள் பீரங்கிக்கு இரையானார்கள். இது மட்டுமில்லை. தொழிலாளர்கள் பேரிலும் குண்டுமாரிகள் பொழிந்தன. பொதுவுடமை வாதிகளுக்கு இது ஒரு கடினமான காலமாகும். நான்கிங், கான்டன், ஹாங்கோ முதலிய நகரங்களில் பொதுவுடமை வாதிகள் தங்கியிருப்பதுங்கூட கடினமாகி விட்டது. ஆயினும் இவர்கள் சில பகுதிகளில் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்டி சோவியத் முறையை அமுலுக்குக் கொண்டு வர ஆரம்பித்தார்கள்.

1927ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் கட்சியின் மகா நாடு கூட்டப்பட்டது. இதில் சென்-டு-ஹ்ஸியோ பதவியிலிருந்து விலக்கப்பட்டதுடன், கட்சியின் நடை முறையும் திருத்தி அமைக்கப் பட்டு, கோமின்டாங் கட்சியிலிருந்து சம்பந்தம் பூராவை அறுத்துக் கொண்டு அரசியல் அதிகாரத்தைக் பற்றுவதற்காக போராட்டத்தை ஆரம்பிப்ப தென்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவுக்குப் பின், மாவோ-த்ஸே-துங் முழுப்பலத்தோடு வேலை செய்ய ஆரம்பித்தார்.

பின்னர், மாவோ-த்ஸி-துங்

ஹூனன் மாகாணத்திலுள்ள சாங்க்ஷா நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு இவர் ஒரு பெரிய கிளர்ச்சியை ஆரம்பித்தார். இந்தக் கிளர்ச்சி 'மாரி காலப் புரட்சி' என்று பிரசித்தம் அடைந்ததாகும். இந்தப் புரட்சிக்கு வகுத்துக் கொள்ளப் பட்ட திட்டம் ஐந்து பிரிவுகளை யுடையது. (1) மாகாண கட்சிக்கும், கோமின்டாங் கட்சிக்கும் உள்ள தொடர்பை அடியோடு அறுத்துக் கொள்வது. (2) விவசாயிகளையும், தொழிலாளர்களையும் கொண்ட படை திரட்டுவது. (3) சிறிய, பெரிய ஜமீன்தார்களுடைய நிலங்களை அவர்களிட மிருந்து பறித்து விடுவது. (4) கோமிண்டாங் கட்சியோடு யாதொரு தொடர்புமின்றி, ஹூனன் மாகாணத்தில் பொதுவுடைமைக் கட்சியின் அதிகாரத்தை ஸ்தாபிப்பது. (5) சோவியத் முறையை அமுலுக்குக் கொண்டு வருவது.

இவைகளே அந்தப்பிரிவுகள். மேற்கண்ட ஐந்தாவது பிரிவைப் பொறுத்த விஷயத்திற்கு, கோமின்டாங் ஒப்புக் கொள்ளவில்லை.

விவசாய சங்கத்தால் ஆரம்பிக்கப் பட்ட புரட்சியானது 1927ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் வெகு தூரம் முன்னேறியது. இந்த நிலைமையில் ஹூனன் மாகாணக் கட்சியின் அனுமதிப்படி, விவசாயிகள் தொழிலாளர்களைக் கொண்ட படை நிறுவப்பட்டது. இந்தப் படையில் விவசாயிகள், தொழிலாளிகள், கோமின்டாங் சர்க்காருக்கு விரோதமாகக் கிளம்பிய சேனைகள் கலந்திருந்தார்கள். இந்தப் படைக்கு மாவோ-த்-ஸேதுங் தலைவரானார்.

ஆனால் இவருடைய தீவிரப் போக்கு, மத்திய கமிட்டிக்குப் பிடிக்கவில்லை. கொஞ்சம் மெதுவாகவே செல்லும்படி இவருக்கு யோசனை கூறியது. ஆனால் இவர் அதைப் பொருட் படுத்தாது வெகு தீவிரமாகத் தன்னுடைய படையை ஹூனன் மாகாணத்திலிருந்து தெற்கே நடத்திச் சென்றார். இந்த வேலையிலே அவர் பல கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டியதிருந்தது. அப்படியும் தோல்வி யேற்பட்டது. மற்றும் இவர் கோமின்டாங் சர்க்காரின் சேனைகளிடம் ஒரு முறை அகப்பட்டுங் கொண்டார். ஆனால் தந்திரமாகத் தப்பித்து விட்டார். இந்தப் படை யெடுப்பில் இவர் தோற்றதிற்குப் பல காரணங்கள் உண்டு. இவருடைய சேனைக்கு ஆயுத தளவாடங்கள் மிகவும் குறைவு. நல்ல பயிற்சியும் போதிய கட்டுப் பாடும் இல்லை. இதோடு சரியான உறுதியில்லாத பேர் சிலர் சேனையிலிருந்து விலகி ஓடி விட்டார்கள். இந்தக் காரணங்களால் இந்த புரட்சிப் படையானது சின்கான்ஷன் என்ற மலையின் மீது தங்கி தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதேற்பட்டது. அந்தக் காலத்தில் இந்தப் படையில் 1000 பேரே மிஞ்சியிருந்தனர்.

மத்தியக் கமிட்டியின் கோபம்

இந்தத் தோல்வியானது மத்தியக் கமிட்டியின் கோபத்தை அதிகமாகத் தூண்டிவிட்டது. எனவே மாவோத்ஸே துங்கின் மீது குற்றஞ் சுமத்தி அவரை அரசியல் கமிட்டியிலிருந்தும் முன்னணிக் கமிட்டியிலிருந்தும் விலக்கிவிட்டது. ஹூனன் கமிட்டியும் இதேவிதமாக அவர்மீது குற்றம் சுமத்

தியது. ஆனால், மாவோத்ஸிதுங் இவற்றைப் பொருட்படுத்தினாரில்லை. அவர், தான் செய்ததே சரியென்ற உறுதி கொண்டிருந்தார். அவருக்கு ஆதரவும் அதிகரித்தது. அவருடைய சேனைக்கு தன்னையே சேனாதிபதியாகவும் ஆக்கிக்கொண்டார். அந்த மாரிக் காலம் வரை மேற்கண்ட சின்காங்ஷன் என்ற ஸ்தலத்தையே தன்னுடைய தளமாகக் கொண்டு புரட்சியைப் பரப்பிக் கொண்டிருந்தார்.

முதன் முதல் சோவியத் முறை

1927ம் வருஷம் நவம்பர் மாதம் ஹூனான் மாகாண எல்லைப்புறமான சயெலின் என்ற பகுதியில் சோவியத் முறையில் சர்க்கார் அமைக்கப்பட்டது. மாவோ தன்னுடைய வேலையில் கொஞ்சம் மெது மெதுவாகவே செல்லத் தொடங்கினார். ஆனால் இவர் இவ்வளவு மெதுவாகச் செல்வது பொதுவுடைமைக் கட்சிக்குப் பிடிக்கவில்லை. கொஞ்சம் வேகமாகக் காரியங்கள் நடத்துமாறு இவருக்கு யோசனை கூறப்பட்டது. ஆனால் இவர் அந்த யோசனையைப் பொருட்படுத்தாது, கொஞ்சங் கொஞ்சமாக, ஹூனான் மாகாண எல்லைப் புறமான, கியாங்ஸி, க்வாங்டுங் என்ற பகுதிகளில், சோவியத் முறையை அமுலுக்குக் கொண்டு வந்து கொண்டிருந்தார். சோவியத் முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பகுதிகளில் முற்றிலும் ஜனநாயக முறையில் காரியங்கள் நடைபெறலாயின. நிலங்களை, ஜமீன்தார்களிடமிருந்து பறித்து விவசாயிகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. பஞ்சாயத்து முறைகள்—அதாவது சோவியத் முறை—அமைக்கப்பட்டது. பொதுஜனங்கள் ராணுவத்தில் சேர்க்கப்பட்டார்கள்.

19.8ம் வருஷம் குளிர் காலத்தில் கட்சியின் ஆறாவது கூட்டம், அதாவது பொதுவுடைமை மகாநாடு ருஷ்யாவில் கூட்டப்பட்டதை அனுசரித்துக் கூட்டப்பட்டது. இந்த ஆறாவது கூட்டத்தின் அறிக்கையைப் பார்த்து இவர்கள் தங்களுக்குள்ளிருந்த விரோதங்களை விட்டொழித்து ஒன்று சேர்ந்தனர். ஏனெனில் இந்த ஆறாவது கூட்டத்தில் என்ன முடிவு செய்யப்பட்டதோ அதில் மாவோத்ஸி துங்கும் சூதேஹும் ஒன்று பட்ட மனதுடையவர்களாயிருந்தனர். இந்தக் கூட்டத்திற்குப் பின், விவசாயிகளது கிளர்ச்சியை அதி தீவிரமாக நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. பிறகு மேற்கண்ட பகுதிகளுக்கு மேற்கு கிழக்குப் பாகங்களில் புரட்சி யேற்பட்டு அதன் முடிவாக அந்த இடங்களில் சோவியத் முறை கொண்டு வரப்பட்டது.

காண்டனிலும் புரட்சி யேற்பட்டது. பொது வுடைமைக்காரர்கள் வெற்றியும் பெற்றார்கள். ஆனால் அது நிலைத்து நிற்கவில்லை.

1928ம் வருஷம் வசந்த காலத்தில், கியாங்க்ஸி பிராந்தியத்தில், விவசாயிகள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். இங்கும் சோவியத் முறை அமுலுக்கு வந்தது. இப்பால், சோவியத்துக்கு இது ஜில்லா தலைமை ஸ்தானமாக ஆகியது. இந்தக் காலத்தில் பூகியன்னுக்கு மேற்குப் பகுதியிலும் சோவியத் முறை பரவியது. மாவோ முதலிய படைகள் ஒன்று சேர்ந்ததாக மேலே குறிப்பிட்டோமல்லவா? இப்பால் அவர்களு

டைய சக்தியும் பெருகியது என்று கூறத் தேவையில்லை. சேனைகள் மேலும் மேலும் சேர்த்துப் பலப்படுத்தப்பட்டன. இந்தச் சேனையே பின்னால் 4-வது செம்படையாகப் பரிணமித்தது. இந்தச் செம்படை பிற்காலத்தில் அதிகப் பிரசித்தம் பெற்றதாகும். இந்தப் படைக்கு சூதேஹ் சேனாதிபதியாகவும் மாவோ அரசியல் ஆலோசனையாளராகவும் ஆயினர். இந்தச் சேனையில் கோமிண்டாங் சர்க்காரிலிருந்து பிரிந்த சேனைகளும் வந்து கலந்துகொண்டன. இப்பால் ஐந்தாவது செம்படையும் ஸ்தாபிக்கப்பட்டது.

சேனைகளின் நிலைமை

கியாங்ஷன் மலைப் பிரதேசத்தில் படைகள் தங்கி யிருந்ததாக மேலே குறிப்பிட்டோமல்லவா? இப்பால் ஜாஸ்தியான பேர் ராணுவத்தில் சேர்ந்ததால் அந்த இடம் தங்குவதற்கு வசதியற்றதாகி நிரம்பக் கஷ்டம் உண்டாயிற்று. பனியோ ஜாஸ்தி. இதைத் தாங்குவதற்குப் போதிய ஆடைகளோ கிடையாது. சாப்பாட்டுக் கஷ்டம் வேறே. இந்தக் காரணங்களால் ராணுவத்திடையே, முதலாளித்துவத்துக்கு விரோதமான எண்ணம் தீவிரமாகியது. இதனால், 1929ம் வருஷம் ஆரம்பத்தில் சேனைகள் கலகத்துக்குக் கிளம்பி விட்டன. எங்கும், 'முதலாளித்துவம் ஒழிக' என்ற சத்தம் தொனித்தது. பொதுவாக கியாங்ஸி தெற்குப் பாகம் பூராவும் பொதுவுடைமையாளர்களின் வசமாயிற்று.

மேற்கண்ட வெற்றியினால், ராணுவத்தில் புதிதுபுதிதாக அணிவகுத்துப் போர் புரியும்படியான ஒருவித ஆசை—ருசி—கிளம்பி விட்டதென்று சொல்லலாம். கொஞ்சங் கொஞ்சமாகப் பிடிப்பதும், பிடித்த இடங்களை ஸ்திரம் செய்து கொண்டு அப்பால் முன்னேறுவதும் இவர்களுக்குத் தாங்க முடியாததா யிருந்தது. அதாவது பெரியபோராட்டத்துக்குத் துடித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். இதனால் 1929ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் 4-வது செம்படையின் மகாநாடு கூட்டப்பட்டது. இதில் ராணுவத்தைச் சீர்திருத்தி யமைக்கவேண்டிய பல விஷயங்கள் யோசிக்கப்பட்டன.

இந்த ராணுவத்தில் ராணுவத் தளகர்த்தர்களாக வேண்டுமென்ற மோகம் சில பேரிடம் அதிகரித்தது. இந்தச் செம்படையில் சில தலைவர்கள், ட்ரோட்ஸ்கி யினுடைய எண்ணங்களைத் தழுவியவர்களா யிருந்தனர். இதனால் இந்தச் செல்வாக்கைத் தங்களுக்கு உபயோகித்துக் கொண்டு தங்கள் எண்ணங்களைப் பரப்ப ஆரம்பித்து விட்டனர். இதனால் இந்தச் சேனையில் உள்ளுக்குள்ளேயே பெரிய போராட்டம் பரவுவறகான நிலைமை ஏற்பட்டது. ஆனால் மேற்கண்ட மகாநாடு இந்த ஒழுங்கீனங்களையெல்லாம் ஒரு முடிவு கட்டி விட்டது. கலகத்திற்குக் காரணஸ்தர்களா யிருந்த தலைவர்கள் அவர்களுடைய பதவிகளி லிருந்து விலக்கப்பட்டார்கள். இந்த விதமாக ராணுவத்தில் உடனே நடவடிக்கை எடுக்கப் பட்டு சீர் திருத்தியதால், கொள்கையும் கட்டுப் பாடும் உறுதிப் பட்டதோடு, கியாங்ஸியில் அமைக்கப்பட்ட சோவியத் சர்க்கார் ஸ்திரப் பட்டு விட்டது. 1930ம் வருஷம் பிப்ரவரி மாதம் 7ந் தேதி, கியாங்ஸி

தென் பகுதியில் கட்சிக் கூட்டம் கூட்டப் பட்டது. இதில் கட்சிப் பிரதி நிதிகள், சோவியத் கவர்ன்மென்ட் பிரதி நிதிகள் யாவரும் ஆஜராயிருந்தனர். இந்தக் கூட்டத்தில், நிலங்களைச் சீக்கிரமாக விவசாயிகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதென முடிவு செய்யப் பட்டதோடு கியாங்க்ஸி மாகாண தலைமை சர்க்காரும் ஸ்தாபிக்கப்பட்டது. இதுவரை மேலே நாம் கூறி வந்தபடி சோவியத் முறை அமைக்கப்பட்டு வந்த இடங்களிலெல்லாம் துண்டு துண்டாக அங்கங்கு ஜில்லா ஜில்லாவாக இருந்த சர்க்கார்கள் இப்போது ஒரு மாகாண சோவியத் சர்க்காரின் அதிகாரத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

சியாங் கை ஷேக்கின் கோபம்

பொதுவுடமைக் கட்சி இவ்விதம் வளர்ந்தோங்கி வருவது சியாங்-கைஷேக் கால் சகிக்க முடியவில்லை. பொதுவுடமைக் கட்சியை அடியோடு வேரறுத்து விட வேண்டுமென முடிவு செய்த அவர் ஒரு லட்சம் துருப்புகளைப் போர்க்களத்தில் நிறுத்தி விட்டார். ஆனால் பொதுவுடமை வாதிகள், இவர்களை நேரே நின்று தாக்காமல் பின்வாங்கிக் கொண்டே சென்று, சியாங் கை-ஷேக்கினுடைய மேற் கண்ட துருப்புகள் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழிருக்கும் பகுதிகள் பூராவும் பரவி நிற்கும்படி செய்தனர். இந்த விதமாக சியாங் கை ஷேக்கினுடைய சேனைகள் பல பகுதியாகப் பிரியும்படி செய்து, ஒரே அடியாகப் பொதுவுடமை வாதிகள் அந்தச் சேனைகளை யெதிர்த்து அவைகளை அடியோடு ஒழித்து விட்டார்கள். இந்த யுத்தத்தில் இவர்களுக்கு அவர்களுடைய ஆயுதங்களும் கிடைத்து விட்டது ஒரு பெரிய வெற்றியாகி விட்டது.

இப்படித் தன்னுடைய எண்ணம் கைக்கூடாததினால் சியாங் கை ஷேக் மிகவும் ஆத்திரப் பட்டார். இதனால் 1933ம் வருஷத்தில் திரும்பவும் பொதுவுடமைக்கு எதிராக யுத்தம் துவக்கபபட்டது. இந்தத் தடவை பொதுவுடமை வாதிகளை அடியோடு ஒழித்து விடுவதென்ற திட்டத்தோடு சியாங் கை ஷேக், ஜெர்மன் ராணுவத் தலைவர்களுடைய யோசனைப்படி பொதுவுடமை வாதிகளை ஒரு மொத்தமாக வளைத்துக் கொள்வதற்காக சோவியத் சர்க்காருக்கு நாற்புறமும் இரும்பாலும் காங்கிரீட்டாலும் சுவர் எழுப்பி கோட்டைகள் கட்ட ஆரம்பித்தார். இந்த விதமாக கொஞ்சங் கொஞ்சமாக இந்தக் கோட்டையானது கட்டி பொதுவுடமை வாதிகளை வளைத்து நெருங்கி வந்து கொண்டிருந்தது. இந்தக் கோட்டை கட்டுவதற்காக எல்லைப் யற்ற பொருள் விரயமாகியது. ஆனால் சியாங் கை ஷேக் இதைப் பொருட்படுத்தவில்லை. இந்த நிலைமையைப் பற்றி யோசிப்பதற்காக 1934ம் வருஷம ஜனவரி மாதத்தில் சீன இரண்டாவது சோவியத் தலைமை சர்க்காரின் தேர்தல் நடை பெற்றது. மற்றும் சியாங் கை ஷேக்கினுடைய இந்த யுத்த முறைக்கு தப்பிப்பதற்கு யாதொரு உபாயமு மில்லாமையால், கியாங்ஸி,—பூகியன் இந்தப் பகுதிகளை விட்டு விட்டு செம்படையும் ஜனங்களும், மேற் கண்ட கோட்டைக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல் வெளியேறி விடுவதெனத் தீர்மானிக்கப் பட்டது. இந்த முடிவுப்படி

1934ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் செம்படையும் ஜனங்களும் சுமார் 6000 மைல் பிரயாணம் செய்யத் தொடங்கினர். இந்தப் பிரயாணம் சீன சரித்திரத்தில், 'வெகு தூரப் பயணம்' (Long Route March) என்ற பிரசித்தி பெற்றதாகும்.

இந்தப் பிரயாணத்தில் ஜனங்கள் அடைந்த இன்னல்கள் பல. இவ்வளவு பெரிய ஜனத்திரள், தங்களுடைய எல்லாச் சாமான்களோடு ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வது, அதுவும் ஏறக்குறைய ஆறாயிரம் மைல்கள், லேசான காரியமாகுமா? இவ்விதம் செல்லும் இவர்களை சியாங் கை ஷேக்கின் ராணுவம் வேறே தொடர்ந்து யுத்தம் செய்தது. இந்தச் சேனை யோடல்லாமல் அந்தந்த மாகாண சேனைகளையும் செம்படை சமாளிக்க வேண்டி நேர்ந்தது! நான்கிங் சர்க்காருடைய ஆகாய விமானங்கள் மேலேயிருந்து இவர்கள் மீது குண்டுகளைப் பொழிந்தன. இந்தப் பிரயாணத்தில் ஆயிரக் கணக்கான வீரர்கள் விண்ணுலகெய்தினர். இதில் பொதுவுடமை வாதிகளுக்குப் பெரும் நஷ்டம். ஆனல் புதிது புதிதாக இந்தச் செம்படையில் ஆட்கள் வந்து சேர்ந்து கொண்டேயிருந்தார்கள்! இந்த விதமாக இவர்கள், பெரிய பெரிய மலைகளையும், பயங்கரமான காடுகளையும், நதிகளையும் தாண்டிக் கொண்டும், விவசாயிகளுக்கு அவர்களுடைய நிலைமைகளை விளக்கியும் தங்களுடைய கொள்கையைப் பிரசாரம் செய்து புரட்சியைப் பரப்பிக் கொண்டும் முன்னேறிச் சென்று கொண்டிருந்தனர். செம்படையின் சேனதிபதிகளுடைய கெட்டிக்காரத்தனத்தால், இந்தப் படையில் இறந்தவர்கள் போக, பாக்கிப் பேர்களை ஒரு முகப்படுத்தி, கியாங்க்ஸி, ஹூனன், கிவிசோ, யுன்னன், ஷேஷ்வான் இந்த மாகாணங்களைக் கடந்து 193?ம் வருஷம் அக்டோபர்—அதாவது, இவர்கள் புறப்பட்ட ஒரு வருஷங் கழித்து—வட ஷென்ஸி மாகாணப் பிரதேசத்திற்கு அடைந்தனர். இங்கு ஏற்கனவே, சோவியத் சர்க்கார் நிறுவப்பட்டிருந்தது.

கான்சூ—ஷான்சியில் சோவியத்

இங்கு 1928ம் வருஷத்திலே புரட்சி ஆரம்பம். பின்னே 1934ம் வருஷத்தில் ஹோனன் சோவியத் படையும் இன்னும் மாகாண சோவியத் படைகளும் வந்து சேர்ந்தன. இப்பால் அதே 1935ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் மேற்கண்ட மாவோ-த்ஸே துங், சூ-தே படையும் வந்து இவர்களோடு கலந்து கொண்டதால் பலம் மிக மிக அதிகரித்தது. இதனல் இவர்கள் தங்களை ஒன்று படுத்தி மேலும் பலப்படுத்திக் கொண்டு தங்களுடைய காரியத்தில் பிரவேசிக்கலாயினர். பல கிளை ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டன. பள்ளிக் கூடங்கள் ஸ்தாபித்தார்கள். பிரசாரத்திற்காக ஒரு நாடக சபை அமைக்கப்பட்டது. இந்த நாடகக் கூட்டத்தினர் கிராமங்களுக்குச்சென்று ஜனங்களுக்குநாடக மூலமாக பிரசாரம் செய்து ஜப்பானுக்கு எதிராக யுத்தம் செய்வதற்கு ஜனங்களைத் தயார் செய்தார்கள். ராணுவப் பயிற்சியும், பொதுவுடமைப் பிரசாரமும் தகுந்த முறையில் செய்யப்பட்டு ஜனங்களைத் திரட்டலானர்கள்.

ஜப்பானுக்கு விரோதமாக ஐக்கிய முன்னணி

ஜப்பானியர்கள் 1932ம் வருஷத்

தில் மஞ்சூரியா மீது படையெடுத்த போது, மேற் கூறப்பட்ட சியாங்க்ஸி சோவியத் சர்க்கார், ஜப்பானுக்கு எதிராகப் போர் தொடுப்பதற்கு நிச்சயித்தது. ஆனால் சியாங்கை ஷேக்கினுடைய சேனைகள் தங்களை நான்கு புறமும் சூழ்ந்துகொள்ள ஆரம்பித்ததால், இவர்கள் ஜப்பானை யெதிர்க்க முடியவில்லை. ஆனால் இவர்கள் அப்பொழுதிருந்தே, சீன தேசத்துக்குப் புறம்பான பெரிய எதிரி சீன தேசத்தை நசுக்க ஆரம்பித்திருப்பதையும், இதனால் நாம் யாவரும் ஒன்று சேர்ந்து அந்த எதிரியை எதிர்க்க வேண்டுமென்றும் ஜனங்களிடையே பிரசாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் சியாங்கை ஷேக் இந்த பொதுவுடைமை வாதிகளையே கருவறுக்கத் துணிந்து அதிலேயே மூழ்கியிருந்தாரானதால் இதைக் கவனிக்கவேயில்லை. அங்கே, ஜப்பான் வட சீனவில் ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு மாகாணமாக விழுங்கிக் கொண்டிருந்தது. இப்படியாக ஜப்பானுடைய முன்னேற்றம் உள்ளூற மங்கோலியா வரை வளர்ந்து வந்தது.

1935ம் வருஷத்திற்குப் பின், அதாவது, ஷென்சி, கான்சூவை சேர்ந்த செம்படை தங்களைச் சரியான முறையில் பலப்படுத்திக்கொண்ட பிற்பாடு மறுபடியும் ஐக்கிய முன்னணியைப் பற்றி பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள். அவர்கள் ஜனங்களிடையே பிரசாரம் மட்டும் செய்யவில்லை; தங்களை யெதிர்த்து சியாங்கை ஷேக் படைகளாக வருபவர்களிடம்உடனே தங்களுடைய தூதரை அனுப்பி, ஜப்பானுக்கு எதிராக சீன ஜாதி யாவும் ஒன்று சேர்ந்து ஐக்கிய முன்னணியாக எதிர்க்கவேண்டிய அவசியத்தையும் அதற்கான காரணங்களையும் சொல்லச் செய்தனர். அதுமட்டுமில்லை; அந்தப் படையிலிருந்து யார் யாரை இவர்கள் கைது செய்திருர்களோ, அந்தச் சேனைகளிடையும் ராணுவ ஆபீசர்களிடையும் நிரம்பக் கண்ணியமான முறையில் நடந்து கொண்டு, இந்த ஐக்கிய முன்னணிப் பாடத்தைப் படித்தார்கள்.

பொதுவுடைமை வாதிகளுடைய இந்த நடவடிக்கையால் நல்ல பலன் விளைந்தென்றே சொல்ல வேண்டும். பொதுஜனங்கள், ஏற்கனவே, ஜப்பானை எதிர்த்துத் தங்கள் தேசத்திலிருந்து துரத்த வேண்டுமென்பதில் துடித்துக் கொண்டிருந்தனர். நிற்க, மேற்கு மாகாணங்களின் சேனைத் தலைவர், சியான் (Sian) நகருக்குப் பக்கத்திலிருந்த தன்னுடைய ஜாகையிலிருந்து இந்த ஐக்கிய முன்னணியைப் பற்றிய எண்ணத்தோடு இங்கு வந்து சேர்ந்தார். இந்த ஜெனரல்களில், மார்ஷல்-சாங்ஹஸுலியாங் என்பவர் மிகுந்த துடிப்பும் சிரத்தையும் கொண்டிருந்தார். இந்த மார்ஷல் சாங் என்பவர் மஞ்சூரியாவின் பழைய தலைவராயிருந்தவர்; ஜப்பானியர்கள் மஞ்சூரியா மீது படையெடுத்தபோது, சியாங்கை ஷேக்கின் உத்திரவுப்படி தன்னுடைய பூராச் சேனையோடு, ஜப்பானை எதிர்க்காமலேயே, மேற்குப் பாகமாக பின்வாங்கி வந்துவிட்டவர். இந்தச் சேனை துங்பாய் என்ற பேரால் பிரசித்தப்பட்டதாகும். இப்பால் 1935ம் வருஷத்தில் சியாங்கை ஷேக், ஜப்பானியர்களை எதிர்க்காமல், பொதுவுடைமை வாதிகளை எதிர்த்துப் போர் புரியும்படி இந்தச் சேனைக்கு

தாக்கீது பிறப்பித்தாரோ அப்பொழுது இவர்களுக்கு அருவருப்பாகப் பட்டது. அப்படியும் இந்த துங்பாய் ராணுவமானது, செம்படைக்கு எதிராக வந்துங்கூட போர் புரிய மனமில்லாமிருந்தனர்.

இதைத் தவிர, தென் சீனாவிலும், மேற்குச் சீனாவிலும், சியாங் கை ஷேக்கினுடைய நான்கிங் சர்க்கார், ஜப்பான் சம்பந்தமாகக் கையாளும் முறையில் அதிகக் கொதிப் பேற்பட்டிருந்தது. அங்குள்ள சேனைத் தலைவர்கள் ஏற்கனவே கலகம் செய்யத் தயாராயினர். ஆனால் பல உபாயங்களைக் கையாண்டு அவர்களை சமாதானப்படுத்தி வைக்கப்பட்டது.

பொதுவுடமை வாதிகள், இந்த நிலைமைகளைத் தங்களுக்கும், தேசத்திற்கும் சாதகமாக உபயோகிக்க எங்ஙனம் தவறுவார்கள்? அவர்கள் மார்ஷல் சாங் ஹுசூ லியாங்கிடம் தங்களுடைய தூதரை அனுப்பினர். மேற்படி சாங் உண்மையிலேயே ஒரு பெரிய வீரர். அவர் நிலைமையை உணர்ந்து தன்னுடைய ஆகாய விமான மூலமாக மேற்கண்ட பொதுவுடமை வாதிகள், அதாவது சோவியத் சர்க்காரிடம் வந்து கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்தார். பொதுவுடமை வாதிகள், இவரிடம், ஜப்பானியர்களை யெதிர்த்துப் போர் புரிய வேண்டிய நிமித்தம், தங்களுடைய சோவியத் கிளர்ச்சியைச் சிறிது காலத்திற்கு ஒத்தி வைப்பதாயும், தங்களுடைய சேனைகளையும், தங்கள் சோவியத் அதிகாரத்திற்குட்பட்ட மாகாணங்களையும் நான்கிங் சர்க்காரின் ஆதீனத்திற்கு உட்படுத்துவதாயும், சியாங்கை ஷேக் ஜப்பானியர்களை யெதிர்த்து யுத்த கோஷம் முழக்கினால் போதுமென்றும் பட்டவர்த்தனமாக உறுதி கொடுத்தனர்.

சியாங்கைஷேக் கைதியாதல்

இப்பால் மார்ஷல்-சாங் ஹுசூலியாங், சியாங்கை ஷேக்கிடம் லாயனு என்ற இடத்தில் சந்தித்து இந்த விருத்தாந்தங்களை யெல்லாம் கூறியதோடு சீன தேசம் பூராவும், சிறப்பாக மேற்குச் சீன ஜனங்கள் பூராவும் இந்த யோசனையை அங்கீகரிப்பதாகவும், சேனைத் தலைவர்கள், உள் நாட்டுப் போராட்டத்தை விட்டொழித்து ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்குத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் சாங் கோபாங்கமாகக் கூறினார். ஆனால் சியாங்கை ஷேக் இந்த யோசனையை அங்கீகரிக்க வில்லை. இதனால் சாங், மனமுடைந்து சியான் நகரம் திரும்பும்படியாயிற்று. ஆனால் வரும்போது, சியாங்கை ஷேக்கிடம், அவர் சியான் வந்து அங்குள்ள ஜனங்களின் எண்ணங்களையும் நிலைமையையும், சேனைகளின் துடிப்பையும் நேரில் பார்க்கும்படி கேட்டுக் கொண்டார். சியாங்கை ஷேக்கும் இந்தக் கோருதலுக்கு இணங்கினார்.

தன்னுடைய சேனைகளுக்கும், பொதுவுடைமை வாதிகளுக்கும் சிநேகம் வளர்ந்து வருவதைத் தடுக்கும் நோக்கோடு சியாங்கைஷேக், 1936ம் வருஷம் டிசம்பர் மாதம் 7ந் தேதி ஆகாய விமானத்தில் சியான் நகருக்கு வந்து சேர்ந்தார். அங்கு அவரை, எல்லா இடங்களிலும், ஜப்பானுக்கு விரோதமான சொற்களைக் கூறிக்கொண்டு வரவேற்கப்பட்டது. அங்கு, மார்ஷல் சாங் ஹுசூலியாங், பல விதங்களிலும் நிலைமைகளை சியாங்கை ஷேக்குக்கு வற்புறுத்திக்

கூடக் கூறினார். ஆனால் சியாங்கை ஷேக் தன்னுடைய பிடிவாதத்தில் உறுதியாயிருந்ததால் கேட்கவில்லை. இப்பால் மிகுந்த விசனம் அடைந்த மார்ஷல் சாங் ஹஸுலியாங், தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான சில ஆபீசர்களைக் கொண்டு 19 6ம் வருஷம் டிசம்பர் மாதம் 12ந் தேதியில் சியாங்கை ஷேக்கை கைது செய்துவிட்டார்.

இந்த விஷயம் சீனம் பூராவிலும் ஒரு பெரிய ஆச்சர்யத்தைக்கொடுத்து விட்டது. ஜப்பானுக்கு எதிராகப் போர் புரியத் துடித்து நின்ற சில மாகாணத்துச் சேனைத் தலைவர்கள் இவ்விதம் கைது செய்ததைப்பற்றி மனதுக்குள் சந்தோஷமுங் கொண்டார்கள். மற்றும் சந்தர்ப்பம் நேரிடின் நான்கிங் சர்க்காருக்கு எதிராக, அதாவது சியாங்கை ஷேக் சர்க்காருக்கு எதிராகப் போர் புரியவும் தயாரானார்கள்.

கைதியான நிலைமையிலுங் கூட சியாங்கை ஷேக் முதலில் சுமார் நாலைந்து தினங்கள் வரை யாருடைய வார்த்தைகளையும் அங்கீகரிக்க மறுத்துவிட்டார். பெரிய பெரிய தலைவர்களும், ஆபீசர்களும், நம்முடைய உள்நாட்டுக் கலகத்தை நிறுத்திவிட்டு ஜப்பானையெதிர்த்துப் போர் புரிய வேண்டுமாய் அவரிடம் கெஞ்சிக் கேட்டுத் தங்கள் கண்ணீரையும் உகுத்தனர். ஆனால் இந்தக் கண்ணீரும் கெஞ்சுதலும் அவரை அவருடைய பிடிவாதத்திலிருந்து திருப்பும் சக்தி பெற்றதாயில்லை. சாஊ என்லாயி முதலிய பொதுவுடைமைத் தலைவர்களும் அவரைப் பேட்டி கண்டனர். பலன் என்ன? அவ்வளவும் வியர்த்தம். இப்பால் ஆத்திரம் அடைந்த சிலர் சியாங்கை ஷேக்கைக் கொன்று விடுவதற்குக்கூட எண்ணியயதாய்த் தெரிகிறது. ஆனால் இந்த யோசனையைப்பொதுவுடைமை வாதிகள் கண்டிப்பாகத் தடுத்துவிட்டார்கள் என்று கேட்கும்போது பல பேர் ஆச்சர்யப்படக் கூடும்! பொதுவுடைமை வாதிகள் அவரைக் கொல்வதற்கு விரும்பவில்லை. அந்தச் செல்வாக்கு வாய்ந்த தலைவரின் கீழ் சீன தேசம் பூராவையும் ஒன்று சேர்த்து, ஜப்பானுக்கு விரோதமாக போர் புரிய வேண்டுமென்ற விருப்பம் உள்ளவர்கள் அவர்கள். கடைசியில், இவர்கள் யாவருடைய பிரார்த்தனையும் சியாங்கை ஷேக்கினுடைய இதயத்தை வசப்படுத்தி விட்டது. வருஷக் கணக்காக நடைபெற்று வந்த உள்நாட்டுச் சண்டை ஒரு நொடியில் மறைந்துவிட்டது. பொதுவுடைமை வாதிகளும், கோமிண்டாங் கட்சியும் சேர்ந்த மற்றொரு ஐக்கிய முன்னணி ஏற்படுத்தப் பட்டது. பொதுவுடைமை வாதிகள் தங்கள் ஆதீனத்திலிருந்த இலாக்காக்களின் பெயரை மாற்றி நான்கிங் சர்க்காரின் ஆதீனத்திற்கு உட்படுத்தினர். செம் படையின் பெயரையும் எட்டாவது முன்னணிப் படை என்று மாற்றப் பட்டது. இப்பால் சீனம் பூராவும் ஜப்பானியர்கள் மும்முரமாக எதிர்த்துப் போர் புரிவதற்குத் தயார் செய்யப்பட்டது. இந்த நிலைமைகளையெல்லாம் தெரிந்ததோடு, ஒரு விதமாகத் தன்னுடைய சாயலின் கீழிருந்த நான்கிங் சர்க்கார் தன்னை விட்டு வெகுதூரம் விலகிவிட்டதைக் கண்ட ஜப்பான், 1937ம் வருஷம் ஜூலை மாதம் சீன தேசத்தின் மீது படையெடுத்து விட்டது. இப்பொழுது சீன தேசம் பூராவும் ஜப்பானை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறது. (மொழி பெயர்ப்பு)

காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம்

1940ம் வருஷம் ஏப்ரல் மாதம் 15, 16, 17, 18ந் தேதிகளில் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் வார்தாவில் கூடியது. அப்பொழுது நிறைவேற்றப்பட்ட முக்கியமான தீர்மானம் வருமாறு:—

ராம்கார் காங்கிரஸுக்குப் பிறகு தேசத்தில் ஏற்பட்டிருக்கும் நிலைமையைப் பற்றியும், எதிர்காலத்தில் சத்தியாக்கிரகம் தொடங்குவது அவசியமென்று மேற்படி ராம்கார் காங்கிரஸ் தெரிவித்திருக்கிறபடியால் அதற்காகக் காங்கிரஸ் ஸ்தாபனங்களைத் தயார்ப்படுத்துவதன் அவசியத்தைப் பற்றியும் காரியக் கமிட்டி தீர்க்காலோசனை செய்தது.

மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகள் சத்தியாக்கிரகக் கமிட்டிகளாக வேலை செய்ய வேண்டுமென்றும், வேலை செய்யக்கூடிய சத்தியாக்கிரகிகளையும் அநுதாபங் காட்டக்கூடிய சத்தியாக்கிரகிகளையும் பதிவு செய்ய வேண்டுமென்றும் காந்தியடிகள் விடுத்த உத்திரவுப்படி மேற்படி மாகாணக் கமிட்டிகள் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளை இந்தக் கமிட்டி அங்கீகரிக்கிறது.

தேசத்திலுள்ள எல்லாக் காங்கிரஸ் கமிட்டிகளும் இந்த (நிர்மாண) வேலைத் திட்டத்தை சுறுசுறுப்புடனும் முழுப் பொறுப்புடனும் நடத்தி வைப்பதுடன், அவர்கள் என்னமாதிரியான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கூறப்படுகிறார்களோ அந்தக் காரியத்திற்குத் தயாரா யிருக்குமாறு தங்களுடைய காரியங்களை ஒழுங்குபடுத்திக் கொள்வார்களென்று இந்தக் கமிட்டி நம்புகிறது.

காங்கிரஸ் நிருவாகப் பதவிகளிலுள்ள அங்கத்தினர்கள் சத்தியாக்கிரகப் பிரதிக்ஞையை எடுத்துக்கொண்டு, காங்கிரஸின் கட்டுப்பாடான தலைமையின் கீழ் போராட்டத்தின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியாவிட்டால், அவர்கள் தங்களுடைய நிருவாக பதவிகளிலிருந்து விலகிவிட வேண்டுமென்று காரியக் கமிட்டி சிபார்சு செய்கிறது.

காந்தியடிகள் விதித்துள்ள நிபந்தனைகளை அப்படியே நிறைவேற்றி வைப்பது, சட்டமறுப்புக்கு இன்றியமையாததென்று கமிட்டி மீண்டும் வற்புறுத்துகிறது.

வேதாந்த ரகசியங்கள்

—ஸ்ரீ ஸதானந்த சுவாமிகள்

தன்னைத்தானறிதல்:— (ஆத்ம தரிசனம்)

கடவுளும் கண்ணாடியும்.

கண்ணானது உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் காண்கின்றது. ஆனால் தன்னை (கண்ணைக்) காண்பதற்குக் கண்ணினால் இயலுவதில்லை. இவ்விஷயத்தில் கண்ணிற்குக் குருட்டுத் தன்மையுண்டு. உதாரணமாக, ஒரு மனிதனுடைய கண்ணானது அவன் சபையில் உபந்நியாசஞ் செய்யும் பொழுது பதினாயிரம் ஜனங்களைப் பார்க்கின்றது. அங்ஙனம் பல்லாயிரக் கணக்கான மனிதர்களைப் பார்க்கும் கண் கண்ணை (தன்னைப்) பார்ப்பதற்கு விரும்புமானால் ஒரு கண்ணாடி தேவையுண்டு. அக்கண்ணாடியானது அழுக்கடைந்திருந்தாலும் அல்லது அசைந்து கொண்டிருந்தாலும் காண்பதற்கு இயலாது. ஆதலால், அழுக்கு நீங்கியதாயும் அசைவின்றியதாயு மிருக்கின்ற கண்ணாடியே வேண்டியதாய் வருகின்றது. ஆனால் ஆத்மாவை ஆத்மா கண்டு கொள்வதற்கு(த் தன்னைத் தானறிவதற்கு) அதனால் முடிவதில்லை.

ஆத்மாவை ஆத்மா காண விரும்புமிடத்து மனமாகிய ஒரு கண்ணாடி தேவையாகும். ஆனால் அக் கண்ணாடியும் ராகம், துவேஷம் முதலிய 13 அழுக்குகள் நீங்கியதாயும் (விசேஷமாகிய) அசைவின்றியதாயுமிருத்தல் வேண்டும். மனக் கண்ணாடியிலுள்ள இச்சிறிய குற்றங்களை நீக்கி விடுவோமாயின் நாமெல்லோரும் ஆத்மாவை (கடவுளை) வெகு எளிதாகக் கண்டு கொள்ளலாம்.

விவேகிகளைத் துன்பங்கள் பற்ற மாட்டா :—

காய்ந்த இரும்பும் குளிர்ந்த மனமும்.

நன்றாகப் பழுக்கக் காய்ச்சிய ஒரு இரும்பில் தண்ணீரை வார்த்தால் அது உடனே உறிஞ்சிவிடும். காய்ச்

சப்படாத இரும்பில் அவ்விதமல்ல. கோபமாகிய அக்கினியினால் பொசுக்கப்பட்ட ஒருவனுடைய மனம் காய்ந்த இரும்பிற்கு நிகராகும். இக்காய்ந்த இரும்பானது பிறவிப்பிணி மூதுமைப்பிணிகளாகிய சகல தோஷங்களையும் உறிஞ்சி இழுத்து விதைபோலும் தனக்குள் வைத்துக் கொண்டு விடும். பிரமாநந்த அநுபூதியினால் சாந்த மடைந்திருக்கின்ற மகாத்மாக்கள் காயாத இரும்பிற்குச் சமமாவர். முதலாமவர்க்குக் கோப முதலிய துர்க்குணங்கள் மனத்தைப் பிடிப்பதனால் அவர்கள் பிணி முதலிய சத்துருக்களுக்கு வசமாகி சதாகாலமும் துன்பத்தை அநுபவிப்பார்களென்பதும் சாந்தி (அமைதி) முதலான அரிய குணங்களாலலங்கரிக்கப் பட்டுக் குளிர்ந்திருக்கின்ற மனத்தினை யுடையவர்களாகிய இரண்டாமவர் மேற்கூறிய துன்பங்களினின்றும் நீங்கியவராய் சர்வஜீவ தயாபரமூர்த்தியாகிய கடவுளினது அழிவற்ற செல்வங்களை ஆனந்தமாய் அநுபவிப்பார்களெனவும உணரத்தக்கதாம்.

மனிதப்பிறவியின் உத்தேசம் :

பசுமரமும் பாமரனும்.

பூமியானது பலவகைக் பொருள் நியமங்களோடு கூடிய ஓர் சேர்க்கைப் பொருளாம். அப்பூமி யினின்றும் முளைத்த ஒரு விருக்ஷமானது வேர்களாகிய முகங்களினால் தன்னுடைய வளர்ச்சிக்கும் பிரயோஜனத்திற்கும் அநுகூலமாயிருக்கின்ற உணவுப் பொருள்களைமட்டும் அப்பூமியினின்று பிரித்தெடுத்து உட்கொண்டு தன்னிடம் வருவோர்க்குக் குளிர்ந்த நிழலையளித்து சகல பிராணிவர்க்கங்களுடைய பசி தாகங்களையும் தீர்க்கத் தக்கதாய் காய்கனி முதலிய ஆகாரப் பொருள்களை ஈன்று தனது ஒவ்வொரு அவயவத்தினாலும் செய்யத்தக்க சகல வுபகாரங்களையும் உலகத்திற்குக் கொடுத்துத் தான் விருக்ஷ ஜென்மமெடுத்ததன் பிரயோஜனத்தையும் அடைந்து விடுகின்றது. ஆனால் அம்மரத்தினின்றும் எவ்வளவோ உயர்ந்த நிலைமையில் வந்து சேர்ந்து பகுத்தறிவினையும் பெற்றுள்ள ஆறறிவுயிரான மனிதன் உலகத்திலுள்ள பொருள்களின் நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து தனது தேகத்திற்கு நன்மையளிக்கு முணவுகளையும், மனத்தினது பரிசுத்த எண்ணங்கட்கு வேண்டிய நன்மைகளையும் ஆத்மாவிற்கு இன்றியமையாத ஞான சாதனங்களையும் புறையே எடுத்து உட்கொண்டு அவற்றால் புஷ்டியடைந்து உண்மையான மனிதத் தன்மையின் பூரண வளர்ச்சியைப் பெற்றுக் கிருதார்த்தனாகி (அதாவது செய்து கொள்ள வேண்டிய கடமையைச் செய்து முடித்தவனாகி) உலகத்தினது நன்மைக்கும் வளர்ச்சிக்கும் தேவையான சகல வுதவிகளையும்—தனது எல்லா அங்கங்களைக் கொண்டும் புரிந்து—மனிதனது கடமையை—நிறைவேற்றாமல்—இதற்கு முழுதும் விரோதமாய் (அதாவது) தேகம், மனது, ஆத்மா எனும் மூன்றினுடைய வளர்ச்சிக்கும் பொருந்தாத பொருள்களை யுட்கொண்டு அம்மூன்றுகளையும் பிணி வாய்ப்படச் செய்து தனக்கும் பிறர்க்கும் உபயோகமற்று அதோகதியிற் செல்வதைக் காணுந்தோறும் நமக்கு இப்பாமர ஜென்மங்களெடுப்பதைக் காட்டிலும் அந்த மர (அப்பசு மர) ஜென்மங்களெடுப்பதே மேலெனத் தோன்றுகின்றது.

பெரியாரைப் பின்பற்றியொழுகல்:—

காலைச்சூரியனும் மாலைக்கதிரவனும்.

சூரியன் உதயமாகும் பொழுதும் அஸ்தமிக்கும் (மறையும்) பொழுதும் அதன் வர்ணம் சிவப்பாகக் காணப்படும். அது போல, சகல சராசரப் பொருள்களும் தனது ஆத்ம அனுபவத்திற்கு வேறல்ல வெனக் கருதித் திடமாய் நிச்சயித்துக் கொண்டிருக்கின்ற ஒரு மகாத்மாவானவர் தனக்குச் செல்வம் வந்த காலத்திலும் தரித்திரம் வந்த காலத்திலும் தனது சுபாவத்தைச் சிறிதும் மாற்றிக் கொள்ளாது, ஒரே விதமாயிருப்பார். இம் மகாத்மாவல்லவோ சூரியனை உண்மையாக உபாசிப்பவர்.

இதன் சாரம்.

ஒருவரை உண்மையாகச் சந்தோஷிப்பிக்க வேண்டுமானால் அவருடைய நடைகளைப் பின்பற்றித் தானும் அவ்வாறே நடைபெறுவதாம். அஃதன்றி மற்றை முறைகளைக் கைக் கொண்டு எவ்வளவு தான் ஒழுகிவந்தாலும் அவர்க்குக் களிப்புண்டாகாது. ஆகலின், மெய்யாகவே சூரியனைக் களிப்புறச் செய்யவேண்டு மேல் சூரிய விருதம் (ஞாயிற்றுக்கிழமை விருதம்) இருத்தல் வேண்டும். பலவாறு ஜப தபங்கள் புரிவதிலும் அவரது சுபாவ குணங்களைப் பின்பற்றி நடந்து வருதலே மேலானதாம்.

விதி விலக்குகள் பெரியோர்க்கில்லை:—

கருநாகமும் ஒரு மகாத்மாவும்.

ஒரு கருநாகத்திலுள்ள விஷம், அதன் சரீரத்தை நாசஞ் செய்து விடுவதில்லை. ஆனால் அவ்விஷமானது மற்ற ஜெந்துக்களின் மீது சம்பந்தப்படுமாயின் அச்செந்துக்கள் இறந்து போம்.

அதுபோல, சர்வ லோகங்களிலுமுள்ள எல்லாப் பொருள்களையும் பேதமாய் (தனக்கு வேறாக) நினையாது பிரம்மமாய் (தனது சொரூபமாய்) கண்டு சகல துவந்துவ விவகாரங்களையும் கடந்தவனாய் துரியாதீதமான மகா பதவியை யடைந்து அமைதியாயுள்ள ஒரு மகாத்மாவானவர் விதி நிஷேதம் (விலக்கு)களையும் புண்ணிய பாவங்களையும் லக்ஷியஞ் செய்யாது நடந்து வருகின்ற செயல்கள்—அம் மஹாத்மாவிற்குத் தீங்கு விளைப்பதில்லை. ஆனால் அறியாமை மலிந்த சம்சாரிகள் அம் மகாத்மா செய்து வருகின்ற காரியங்களைப்போல செய்து வருவார்களேயாகில் அவர்களின் நன்மைகள் யாவும் நசிக்கும். ஆதலால், உலகத் தொழில்கட்கெல்லாம் செய்வோரது பக்குவ வித்தியாசத்தினால்—பயன்களும்-வித்தியாசப்படுமென்பதை கருநாகம் தெரிவிக்கின்றது.

ஞான கர்ம அப்பியாசம்:—

பறவையும் இரண்டு இறக்கைகளும்.

ஒரு பக்ஷியானது பறந்து செல்ல வேண்டுமானால் அதற்கு இரண்டு இறக்கைகள் இன்றியமையாதனவாம். அவற்றில் ஒன்று ஒடிந்துவிடுமானால் அப்பறவை அப்பொழுதே பூமியில் விழுந்துவிடும். அதுபோல மானிட வாழ்க்கையின் பரம உத்தேசமாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பவைகளை அடைவதற்காக எவர்கள் முயலுகின்றார்களோ அவர்கள், கர்மத்தையும், ஞானத்தை

யும் சமமாகவே ஆதரித்து வரல் வேண்டும். அவற்றில் ஏதேனும் ஒன்றைத் தள்ளி விடுவார்களாகில், மேற்கூறிய பக்ஷியைப்போல் அதோகதியை யடைந்து விடுவார்கள். ஆதலால், நன்மையை விரும்பும் நரர் யாவரும், உலக நன்மைக்கு ஏற்ற புண்ணியத் தொழில்களையும், ஆத்மாவினது விஸ்தாரமான உத்தேசங்களை ஆராய்ந்தறிகின்ற ஞான நிஷ்டைகளையும் ஒன்றாகவே பழகுதல் வேண்டும். இவ்விரண்டும் ஒருங்கு சேர்ந்தால்மட்டுமே, உலகம் க்ஷேமமாய் வாழும். இவ்விரண்டினுள் ஒன்றையே முக்கியமெனச் சித்தாந்தஞ் செய்பவர்களை—உலகத்திற்கு நன்மை புரிந்து வருவோர்களின் வரிசையில் எண்ணச் சாத்தியமின்றாம்.

உள்வெளி மனித வுருவம்:—

வெள்ளிய ஆடையும் தெள்ளிய மனமும்

வேஷ்டியில் பட்டுள்ள அழுக்கானது அவ் வேஷ்டியைத் தின்றுவிடுவதுமட்டுமல்ல; அவ்வழுக்கு உடை உடுத்திருக்கின்ற மனிதர்களைத் தாழ்ந்த ஜாதியினராக நினைக்கும்படிக்குஞ் செய்கின்றது. ஆனால் வஸ்திரத்திலுள்ள வெண்மை (அழுக்கின்மை) யானது அவ்வஸ்திரத்திற்குபலத்தை யளித்து அதைப் போன்று வெள்ளியுடை தரிப்பவர்களை மேலான ஜாதிக்காரர்களென மதிக்கவுஞ் செய்கின்றது. இதுபோல ராகத்துவேஷ முதலானவை ஆசை கோப முதலானவை மனமெனும் வஸ்திரத்தைப் பிடித்துள்ள, அழுக்குகளாம் அவை அம்மனத்தினது ஏகாக்கிர நிலைமை (ஒரே நிலைமையாகிய) (அதன் சொரூபப்) பெருமைகளைத் தின்று விடுவதோடு—அவ்விதமான மனோ நிலைமையுடையவர்கள் எவர்களோ அவர்கள் (மனித வர்க்கத்தில்) மிகத் தாழ்ந்தவர்களினும் தாழ்ந்தவர்களென நினைக்கச் செய்கின்றது. அன்பு, சம்பாவனை, ஜீவகாருண்யம், பரோபகாரம் முதலிய உயர்ந்த குணங்களெனும் மனத்தினது வெண்மையேயெனில், அம்மனமாகிய வஸ்திரத்திற்கு—ஊக்கம், உற்சாகம் முதலியனவாகிய பலத்தை (உறுதியை)க் கொடுப்பதுடன் அத்தகைய மன வஸ்திரந் தரித்த மனிதர்களே, மானிடவர்க்கத்தில் உயர்ந்தவரென மதித்துப் பூஜிக்கும்படிக்கும் செய்து விடுகின்றது. ஆதலால், பூலோக வாசிகளை மனத்தின் சுத்தத் தன்மையினால் உயர்ந்த ஜாதியினரென்றும், அசுத்தத் தன்மையினால் ஈன ஜாதியினரென்றும் இரண்டு பிரிவினராக உணரலாம்.

சித்தத்தின் ஏகாக்ர சக்தி:—

கதிரவன் ஒளியும் கண்ணாடித் தீயும்.

சூரியனிடத்திலுள்ள ஒவ்வொரு கிரணங்களும் தனித்தனியே சென்று ஒவ்வொரு பொருள்களையும் எரிப்பதற்குச் சக்தி வாய்ந்தனவாய்க் காணப்படவில்லை. ஆனால் நாம், வட்டமாயும், வெளிப்பக்கம் வரவர உயர்ந்ததாயுமிருக்கின்ற ஒரு சூரியகாந்தக் கண்ணாடி———யின் வழியாக அச்சூரிய கிரணங்களை (கதிர்களை) ஒருங்கே சேர்ப்போமாயின், அவ்வண்ணம் ஒருங்கே திரட்டப்பட்ட கிரணங்களுக்குப் பஞ்சு முதலிய பொருள்களை எரிக்கும் பிரபாவ சக்தியிருப்பதைக் காண்போம். உதாரணம்:—வெயிலுள்ள நேரத்தில் அக்கண்ணாடியைச் சூரியனுக்கு எதிரே

காட்டுவதாய் வைத்துக்கொள்வோம். இப்பொழுது, அநேகங்களாய் சிதறுண்டு கிடக்கின்ற சூரிய கிரணங்கள் மேற்புகன்ற கண்ணாடியினுள் முறையே திரண்டு ஒருங்கே சேர்ந்து கடைசியில் ஒரு சிறு பிந்துவைப் போலாகும். அவ்விந்துவினை ஒரு பஞ்சிலாவது அல்லது காகிதம், தேங்காய்க் குடுமி முதலியவற்றிலாவது விழும்படி செய்வோமாயின் அப்பொருள்கள் யாவும் அக்கணமே தீப்பற்றிப் பொசுங்கிச் சாம்பலாய்விடும். ஆகவே, இதனால் ஒவ்வொரு கிரணங்களுக்கும் தனித்தனியே பொருள்களை யெரிக்கும் திறனில்லை யென்றும் அக்கிரணங்கள் ஒன்று கூடுவதனாலேயே அவ்விதச் சக்தி யுண்டாயிற்றெனவும் நாம் தெரிந்துகொண்டோமல்லவா?

அதுபோல் நம்முடைய மனமானது கண், காது, மூக்கு, நாக்கு, தொக்கு எனும் ஐம்புலன்களின் வழியே பலபல இடங்களிலும் நுழைந்து விரிந்து சதா காலமும் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றது. மனத்தினுடைய இத்தொழிலை 'பலவாறாய்' சிதறிப் பரந்திருக்கின்ற சூரிய கிரணங்களுக்கு ஒப்பிடலாம். இவ்விதமாகத் திரிந்து கொண்டிருக்கின்ற மனமுடையவர்களுக்கு இவ்வுலகினில் 'பெரும் பயனற்றதாகிய (சில) வயிற்றுப் பிழைப்பிற்குரிய தொழில் (களை) மட்டும் செய்ய முடியுமேயன்றி, அசாதாரணமாயும் புத்திக்கு எட்டாததாயுமிருக்கின்ற அரிய செயல்களைச் சாதிக்க வியலாது சூரிய கிரணங்கள் ஒன்று சேர்க்கப்பட்ட பொழுது பஞ்சு முதலிய பொருள்கள் சாம்பரானதுபோல் மனத்தின் எண்ணக் கதிர்கள் ஒருங்கே சேர்க்கப்பட்டால் அந்நிலைமை யமைந்த மனத்தினைக் கொண்டு அக்கணமே துன்பமிக்கதான இச்சம்சாரப் பஞ்சினை எரித்து அப்பால் ஜனன மரணங்களின்றி இவ்வுலக காரணமாம் மூலப் பிரகிருதியையும் வசஞ் செய்துகொண்டு உலக அனுக்கிரகத்தின் பொருட்டு அபாரமான காரியங்களை முடித்தற்குரிய மகா சாமர்த்தியங்களையும் வாய்க்கப்பெறலாம்.

அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் இரண்டாயிரம் தினசரிப் பத்திரிகைகளும், ஆயிரத்திருநூறு வாரப் பத்திரிகைகளும், இரண்டாயிரம் மாதப் பத்திரிகைகளும் இருக்கின்றன.

சிறு கதை

மலரும் வாழ்க்கையும்

—எஸ். கிருஷ்ணன்.

"நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது" என்று சொல்லிக்கொண்டு ஜயாவின் தந்தை வீட்டிற்குள் நுழைந்தார்.

அவருடைய மனைவி எல்லாவற்றையும் ஊகித்துக்கொண்டாள். அவள் கணவனுக்கு ஆறுதல் கூறினாள்— 'அம்மனுக்கு இஷ்டம் இல்லை. போகிறது. தாயும் தந்தையுமில்லாத பிள்ளைதானா நம் ஜயாவுக்கு வரனாய் வரணும்? ஒரு ராகவனுக்குப் பதிலா பதினாயிரம் ராகவன் வருவான். நல்லதுக்குத்தான் எல்லாம்.'

ஜயாவின் தந்தை மறுமொழி கூறாமல் கூடத்தில் நின்றுகொண்டிருந்த ஜயாவைப் பார்த்தார். பிறகு எழுந்து சென்றார்.

ராகவன் தன் மாமாவிடம் சொன்னான் —'மாமா, நான் பட்டணத்தில் பிரஸிடென்ஸி காலேஜில் சேர நினைக்கிறேன். எனக்கு வேண்டிய பணம் மாசா மாசம் அனுப்பித் தரவும்'.

இளமையிலேயே பெற்றோரை இழந்துவிட்டான் ராகவன். அவன் சொத்துக்கள் மாமா மேற்பார்வையில் இருந்தன. அவனும் மாமா வீட்டிலேயே வளர்ந்து வந்தான். மாமா ராகவனிடம் சொன்னார்— 'உனக்கு எங்கே படிக்க இஷ்டமோ அங்கே படி.'

°°° °°° °°°

காலம் சென்றது. ராகவன் பி. ஏ. முதன்மையாகத் தேறினான். சர்க்கார் உதவிச் சம்பளம் கொடுத்து மேல் நாட்டிற்கு அனுப்புவதாகக் கூறினர். ஆனால் ராகவன் அதற்கிஷ்டப்படவில்லை. ஒரு சிறு கிராமத்தில் குருகுலம் ஒன்றை ஆரம்பித்தான். தன்னுடைய நிலத்தையெல்லாம் விற்றுப் பணமாக்கி பாங்கியில் போட்டுவிட்டு அதன் வட்டியையும் இதர நண்பர்களுடைய உதவியையும் கொண்டு அவன் சிறப்பாக அந்த குருகுலத்தை நடத்தினான். அந்தக் குருகுலத்தின் முன்னேற்றத்திற்காகவே உழைத்தான்.

நண்பர்கள் கேட்டார்கள்— 'உழைத்துவிட்டுப் போனால் அன்புடன் அன்னமிட்டுப் பணிவிடை செய்ய ஒரு மனைவியிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? உங்களுக்கோ வயது அதிகமாகவில்லை. ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து மணம் செய்து கொள்வதுதானே.'

ராகவன் அதற்குப் புன்னகையுடன் மறுமொழி கூறுவான்—' என் மனைவி குழந்தை எல்லாம் இந்தக் குருகுலம் ஒன்றேதான். என் அன்பு அதற்கு உரித்தானது. உள்ளம் உடல் எல்லாம் அதற்கு அர்ப்பணம் செய்து விட்டேன். மனைவி ஒருத்தி வந்தால் அவளுக்கு என்ன கொடுப்பேன்?'....

ராகவனுடைய விடா முயற்சியால் ஐந்து வருஷங்களில் அந்தக் குருகுலம் வெகு முன்னேற்றம் அடைந்திருந்தது. கிராமக் கைத் தொழில் பயிற்சித் திறமைக்காக அந்தக் குருகுலத்துக்கு அனேக பதக்கங்கள் கிடைத்திருந்தன. எல்லா மதத்தினரும் தம் குழந்தைகளை அங்கே விட முன் வந்தார்கள். குழந்தைகள் ஜாதி மத பேதம் இல்லாமல் அன்புடன் பழகி வந்தார்கள். ராகவனை தங்கள் தந்தைபோல் நேசித்தனர். அவனைப் பார்த்தால் குழந்தைகளுக்கு அளவு கடந்த ஆனந்தம். அவர்களிடம் அவன் அடிக்கடி சொல்வான்—'நீங்கள் எல்லோரும் அன்புடன் இருப்பதைப் பார்த்து சந்தோஷம் அடைகிறான் ஆண்டவன். உங்கள் எல்லோருக்கும் இன்பம் அளிப்பதற்காக அவன் எண்ணற்ற விண் மீன்களைக் கொடுத்திருக்கிறான். ஆகாயத்தைக் கொடுத்திருக்கிறான். அவனுக்கு நீங்கள் எல்லோரும் குழந்தைகள். அவனிடம் நீங்கள் தந்தையிடம்போல் அன்பு செலுத்தவேண்டும். அப்படிச் செய்வீர்களானால் மேலும் உங்களுக்கு நலனை அளிப்பான்'.

குருகுலத்திலுள்ள குழந்தைகள் காலையில் 'காவல் வழி கடவும் காலத்தே கண் முளைத்தாற்போலே யெனதறிவிற் போந்தறிவாய் நில்லாயோ?' என்று ஆண்டவனை அழைக்கும்போது அவ்வினியகுரலைக் கேட்டு ஆண்டவனே வந்துவிடுவான் போல் தோன்றும்.

ஃ ஃ ஃ

குருகுலத்தின் வருஷாந்தக் கொண்டாட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் விமரிசையாக நடந்து கொண்டிருந்தது. சென்னை மாதர் தலைமை ஆசிரியை லக்ஷ்மி எம். ஏ. தலைமை வகிப்பதற்காக வருவதாக இசைந்து விட்டாள்.

காலை பத்து மணி சுமாருக்கு ஸ்ரீமதி லக்ஷ்மி வருவதாக எழுதியிருந்தாள். அவளை அழைத்து வரத் தன் அசிஸ்டெண்டு ஒருவரையும் குரு குலம் மோட்டாரையும் ஸ்டேஷனுக்கு அனுப்பியிருந்தான் ராகவன்.

ராகவன், ஊர்ப் பெரியோரை எல்லாம் அழைத்து விட்டுப் பதினொரு மணி சுமாருக்கு தன் அறைப்பக்கம் போனான். அதில் ஸ்ரீமதி லக்ஷ்மி இறங்குவதற்காக ஏற்பாடாயிருந்தது.

அறைவாசலில் நின்று கொண்டிருந்த வேலையாளிடம் கேட்டான்—'அம்மா இருக்கார்களா?'

சத்தத்தைக் கேட்டு ஸ்ரீமதி லக்ஷ்மியே வாசற்புறம் வந்தாள். அவளை ஒரு நிமிஷம் ராகவன் ஏற இறங்கப் பார்த்தான். ஆச்சரியத்துடன் அவளும் அவனைப்பார்த்துக் கொண்டு கேட்டாள்—'என்ன பார்க்கிறீர்கள்? நான்தான் பழைய ஜயா'.

சற்றுத்தயங்கி விட்டு அவள் சொன்னாள்—'வாருங்கள் வந்து உட்காருங்கள்.'

ராகவன் அறைக்குள் போய் நாற்காலியொன்றில் அமர்ந்தான்.

மெதுவாய்க் கேட்டான்—'உங்களுக்கு எங்கோ மணமாயிற்று என்று கேள்விப்பட்டேனே.'

ஸ்ரீமதி லக்ஷ்மி 'ஆம்' என்று தலையசைத்தாள்.

ஃ ஃ ஃ

ராகவன் மேல் ஒன்றும் கேட்கவில்லை. அவன் தன்னை ஒரு கணம் குரு குலத்திலிருந்து வெகு தூரத்தில் தாம்ரபரணி ஆற்றின் கரையில் நின்று கொண்டிருப்பதாகக் கண்டான். அவன் அன்று ஐந்தாம் பாரத்தில் படித்துக் கொண்டிருந்தான். அவனருகே ஜயாவும் நின்று கொண்டிருந்தாள். அவளும் அவனுடன் ஐந்தாம் பாரத்தில்தான் படித்துக் கொண்டிருந்தாள். அவள் ஆகாயத்திலோடிக் கொண்டிருந்த வெண் மேகங்களைப் பார்த்து நின்றாள். அடிவானம் அந்தியின் சிவப்பொளியில் தள தள வென்று பிரகாசித்தது. ஆற்றுநீர் வேகமாய் ஓடி அடிவானத்துக்குள் புகுந்து மறைந்தது. கதிரவன் பொற் கிரணங்களால் மூலாம் பூசப்பட்டது போல் தென்னைமட்டைகள் ஒளியுடன் ஆகாசத்தில் அசைந்தாடின. ஜயாவின் அழகிய முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்ற ராகவன் கேட்டான்—'என்ன யோசிக்கிறாய் ஜயா?'

அவள் சிரித்தாள். பிறகு கூறினாள்—இப்படியே எப்பொழுதும் அந்திப் பொழுதாகவே இருந்தால் நாமும் இங்கேயே நின்று விடலாம் அல்லவா?'

ராகவன் சிரித்தான். 'பைத்தியமே! அந்தி போகும். இருள் சூழும். பிறகு வெளிச்சம் தோன்றும். இதுதான் உலக வழக்கமாயிற்றே' என்று சொல்லி விட்டு ஆற்றைப்பார்த்தான்.

பசுக்கள் ஆற்றில் நீர்குடித்து விட்டு மேற்றிசையை நோக்கி நின்றன. பெண்கள் வந்து ஆற்றில் இறங்கி நீர் நிரப்பிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்கள். ஆகாயத்தில் ஆங்காங்கு ஆண்டவன் ஏற்றிய விளக்குகள் பிரகாசித்தன. அமைதி பரவியிருந்தது.

ஜயா கைகளைக் குவித்து பிரார்த்தனையில் ஆழ்ந்தாள்.

ராகவன் கேட்டான்—'ஏன் ஜயா எனக்காகவா பிரார்த்திக்கிறாய்?'

ஜயா கூறினாள்—'இல்லை.'

ராகவன் சிரித்தான். மறுபடியும் கேட்கிறான்—'ஜயா கடவுளிடம் என்ன கேட்கிறாய்?'

ஜயா மௌனமாயிருக்கிறாள்.

ராகவன் அவளுடைய கைகளை ஆட்டிக் கொண்டே கேட்கிறான்—'ஜயா, நான் இனி உன்னைப் பார்க்கக் கூடாதென்று பிரார்த்திக்கிறாய்?'

ஜயா மறுமொழி கூறவில்லை. கோயில் மணியோசை காற்றில் தவழ்ந்து கொண்டு வருகிறது. ஜயாவின் கண்களில் கண்ணீர் நிறைகிறது. கன்னங்கள் வழியாய் வழிகிறது.

'நான் சொன்னதுக்கு மன்னித்து விடு ஜயா. நீயும் நானும் என்றும்

இப்படியே இணை பிரியாது இருக்கும்படி ஆண்டவன் அருள் புரியட்டும்' என்கிறான் ராகவன்.

இருவரும் ஆண்டவனை வணங்குகிறார்கள். ஜயாவின் கண்ணீருக்கிடையே அவள் உதடுகளில் தவழ்ந்த புன்னகை நிழலித்தது போல் ஆகாயத்தில் திங்கள் தோன்றுகிறது.

வீட்டில் தேடுவா; போவோம்' என்று இருவரும் பிரிகின்றனர்........

ராகவன் லக்ஷ்மியைப் பார்த்துக் கேட்டான்—'நடந்த பின்பு?'

லக்ஷ்மி கண்களை ஒரு நிமிஷம் மூடிவிட்டு மௌனமாயிருந்தாள். பிறகு மெதுவாகச் சொன்னாள்—'அந்த ஜயா மணமாகி ஆறுமாதத்திலேயே விதவையானாள். பணம் இருந்தது. படித்தாள். பட்டம் பெற்றாள். மறுபிறப்பு லக்ஷ்மி என்ற பெயருடன் ஆரம்பமாயிற்று.'

ராகவன் ஒன்றும் பேசவில்லை. அவன் மனதில் பழைய நினைவுகள் ஒன்றொன்றாய்த் தோன்றி மறைந்தன.

அவனைப் பார்த்துக் கொண்டிருந்த லக்ஷ்மி மெதுவாய்ச் சொன்னாள்—'அன்று நல்ல பூ அகப்படவில்லை என்று கேட்டபோது மனம் புழுவாய்த் துடித்தது. வேறு விவாகமான போதிலும் உள்ளத்தை உனக்கே கொடுத்திருந்தேன். வாழ்க்கை, புதுப் பாதையை அடைந்தது. ஆயினும் நீ என் கூடவே இருக்கிறாய்.'

ராகவன் சொன்னான்—அதைப் பற்றி என் நினைக்க வேண்டும்? நீயும் வேறு விதத்தில் அமைதியைக் கண்டாய். நான் ஒருவிதம் மனதை சமாதானப்படுத்திக் கொண்டு விட்டேன். இதுவும் நல்லதுக்குத்தான். இனி சென்றதை எண்ணி சிவபூஜையில் கரடியைப் புக விடுவானேன் ஜயா? எங்காவது நீ சௌக்கியமாயிருந்தால் போதும்' என்றான்.

யாரோ வெளியே வந்து கூப்பிடவே அவன் எழுந்து சென்றான்.

வருஷாந்தக் கொண்டாட்டம் சிறப்பாக நடந்தது. ராகவனைப்பற்றி எல்லோரும் புகழ்ந்தார்கள். அவன் சமூகத்துக்குச் செய்யும் அரிய தொண்டைப் பற்றி அரிய சொற்பொழி வாற்றினார்கள். ஆனால் ராகவன் முகம் என்றும் போல் தெளிவுடனிருக்கவில்லை.

இரவு லக்ஷ்மியை ஸ்டேஷனுக்கு அழைத்துப் போய் ரயில் ஏற்றினான் ராகவன். வண்டி புறப்படு முன் லக்ஷ்மி சொன்னாள்—'எப்போதாவது சென்னைக்கு வர நேர்ந்தால் என் வீட்டுக்கு வந்து போகவும்.' கண்களில் நிறையும் நீரை மறைப்பதற்காக முகத்தைத் திருப்பிக் கொண்டாள். 'போய் வா ஜயம்' என்று சொல்லி முடிப்பதற்குள் வண்டி நகர்ந்தது.

லக்ஷ்மி 'ஸெகண்ட் கிளாசு' வண்டியில் படுத்திருந்தாள். அவள் கையில் ஒரு பூச்செண்டிருந்தது. அன்று ராகவன் அவளுக்குக் கொடுத்த செண்டு அது. அதன் பூக்கள் வாடத் தொடங்கியிருந்தன. இதழ்கள் ஒன்றொன்றாக உதிர்ந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்துக் கொண்டு அவள் படுத்திருந்தாள். அவள் கண்களில் நீர் நிறைந்து ஓடிற்று.

அடுத்த வண்டியில் ஒருவன் பாடினான்—.

க.க.

மாயக் குயவன் படைத்த பாண்டமிதை—
தூவென்று தள்ளி உதைத்திட்டீர்
கண்ணாலே காண்பதும் காதாலே கேட்பதும்
கற்றவர் சொல்வதும் பொய்யடா கேள்;

காயமிதும் பொய்யே வாழ்க்கையிலும்
பொய்யே உண்மை யொன்றே எனத் தேறிடுவாய்;
காலக்கிழவன் மிதிப்பட்டு மாய்ந்திடும்
பாதை மலர்கள் நாம் எல்லோரும் கேள்.

கற்பனை சக்தி

நா. லக்ஷ்மீ நரசிம்மம்

அற்புத மாதமடா—இங்கிது அமுதக் கோயிலடா
புற்புத வாழ்வினிலே—முளைத்திடும் புத்தமுதமேடா
சொற்பனம் போலழியா—திருக்தும் சோதிவடிவமடா
கற்பனை யென்பதுவே—புலவர் கண்டவுலகமடா.

சுவைமிகும் அமுத—என்பதோர் தூயபாற் கடலில்
நவையில் சிந்தனையாம்—மத்தினை நட்டுக் கயிறுக
உவமை யென்பதனல்—அதனை உண்மையிலே கடைந்தால்
கவிதை யென்றிடுபே—ரமுதைக் கண்டு மகிழ்ந்திடலாம்.

காலம் கடந்த தடா—இளமை காட்டி மகிழ்வதடா
மூலப்பழம் பொருளே—அதற்கு முற்றும் உவமையடா
வேலைத்திரை முகட்டில்—எழுந்து மின்னி மறையுமடா
ஞாலத்தி லெங்கணுமே—நின்று நடம் புரியுமடா.

அழகுச் செல்வம்

(டாக்டர் சண்டர்லண்ட் என்னும் பெரியாரைத் தழுவி யெழுதியது)

... நிர்வேத சைதன்யர்

கண்ணுக்குக் காட்சியாய்க் காண்பதெல்லாம் பேரழகாய் நிலவுகின்ற இப்பூவுலகின் கண் மக்களாகிய நாம் வாழப்பெற்றது பெரும் பாக்கியமேயாம். அல்லிலும் பகலிலும், கோடையிலும் மாரியிலும் அழகுச் செல்வம் சதா மிளிர்ந்துகொண்டிருக்கின்றது. நீலக்கடல், நீலவான், விண்மீன், செக்கர்வான் முதலியவற்றின் வனப்பு; விஸ்தரிக்க முடியாது பரந்துகிடக்குந் தாவர சங்கடத்தின் அழகு; சிற்றெறும்பு முதல் பிரம்மாண்டமான திமிங்கிலம் ஈறாகவுள்ள மிருக வர்க்கத்தின் அழகு; மனிதனின் மாண்பு அழகு; என அழகு பல திறப்பட்டது. இத்தகைய வனப்பு வாய்ந்த உலகத்தையும் அதனிடத்துப் பரந்து கிடக்கும் ஜீவராசிகளையும் அழகின்பம் நுகர்தல் பொருட்டே ஆண்டவன் சிருஷ்டித்திருக்கவேண்டும். அண்டர் நாயகனாகிய இறைவன் தானும் உவக்கும் வனப்பை மக்களாகிய நாம் எவ்வாறு போற்றல் வேண்டும்? அழகு அளிக்கும் அழியா இன்பத்தை நுகர்வதற்கே நமது இந்திரியங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

பலவகை வனப்பும் ஒரே மதிப்பினையுடையனவல்ல. வெண்ணிலா, நீலவான், விண்மீன், இந்திர தநு, அந்திமாலை, அருணோதயம் என்பன அளிக்கும் அழகு வியக்கற்பாலது; ஆயினும் மக்கட் சௌந்தரியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஏனைய அழகு அதற்கு நிகராகாது. ஆதலின் ஆடவர் மகளிர் அனைவரும் பெறற்கரிய அழகுச் செல்வத்தைப் பேணுதல் சால்புடைத்து. செயற்கை முறைகள் அழகை உண்டாக்குவதற்கோ அல்லது நிலைபெறச் செய்வதற்கோ சக்தி வாய்ந்தன வல்ல. தேக, மன, ஆத்மீக அப்பியாசங்களே அழகைப் பெருக்கும் சிறந்த இயற்கை முறைகளாம். இவைகளால் உடம்பில் உள்ள அங்கங்களெல்லாம் அழகு பெறும். திங்கள்போன்ற வதனம், பிறை நுதல், கருவிழி, குன்றனைய புயங்கள், புத்தி ஒளிரும் பார்வை, இனிய குரல், சாந்தம், அடக்கம், வலி முதலியவற்றைப் பெற விரும்பாதவர் யாவர்?

அழகு, அகத்தழகு புறத்தழகு என இருவகைப்படும். இருவித அழகுக்குமிடையேயுள்ள வித்தியாசத்தை ஒருவாறு விளக்குவாம். ஒரு பட்ட மரம் இருக்கின்றது. அதை அலங்கரிப்பதற்காக செயற்கை பூமாலை, பூங்கொத்து, இலை, கனி முதலியவற்றை அதில் தொங்க விடுகிறோம். அத் தருணம் அது பார்வைக்கு அழகாய்த் தோன்றினும் நாளடைவில் அதன் புதுமை நீங்கிவிடும். ஏனெனில் அதற்கு உண்மையான உயிர்ச் சக்தியில்லை. ஆகையால் அது மாறும்

இயல்புள்ள பொய்த் தோற்றமே யாகும். இதே அம்மரத்தின் புற அழகு எனலாம். மழை, வெயில், செழிப்பான தரை முதலிய இயற்கை ஆதாரங்களை உட்கொண்டு அதன் பயனாக வெளிப்படும் இலை, தழை, அரும்பு, மலர், கனி முதலியன அழகிய ஆடைபோன்று பச்சைமரத்தை அலங்கரிக்கின்றன. அந்த அழகு காலத்துக்குக் காலந் தோன்றி பசுமரத்துக்குப் புத்துயிர் அளிக்கின்றது. இதே அம்மரத்தின் அகத்தழகு அல்லது அந்தரங்க அழகு ஆகும். இத்தகைய அழகே மக்கள் போற்றற்குரியது.

மனிதனின் ரூபலாவண்ணியம் (சௌந்தரியம்) அவனுடைய தேக அமைப்பு, மனத் தூய்மை, ஒழுக்க நிறைவு என்பவற்றில் தங்கி யிருக்கின்றது. தேக அமைப்பை அழகு பெறச் செய்வதற்குத் தேகாப்பியாசம் அத்தியாவசியம். நடத்தல், நீந்துதல், குதிரைச் சவாரி, மலையேறுதல் போன்ற அப்பியாசங்கள் பெரும்பாலும் கையாளப்பட்டு வருகின்றன. சுத்த ஆகாயம், சூரிய வெளிச்சம், நல்லுணவு, ஓய்வு, முயற்சி, அமைதி, ஒழுங்கு முதலியன இயற்கை வாழ்வுக்குச் சாதனங்களாகும். இயற்கை வாழ்வே தேக அழகைச் செம்மைப் படுத்துகின்றது. உலகிலுள்ள எல்லா சாதியாருள்ளும் கிரேக்கரே தேக அமைப்பில் சிறந்தவர். அவர்கள் அழகுச் செல்வத்தில் ஆர்வமுற்றிருந்தாரென்பதை அவருடைய கலைகள் நன்கு விளக்குகின்றன. அவர்களே தேக அழகின் அந்தரங்க ரகசியங்களை முதன் முதல் உணர்ந்து உலகுக்களித்தவர். ஜீவ சக்தியினால் உடம்பை நிரப்புதலே அழகுக்கு அடிப்படை என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர்.

மனிதனின் அழகு உடல் அமைப்பில் மட்டுந் தங்கியிருக்கவில்லை. அப்படியிருப்பின் மனிதனுக்கும் மண்ணால் செய்த பொம்மைக்கும் வித்தியாச மிராது. நாகரிக மற்ற ஜாதியார் உடல் அழகு அமையப் பெற்றும் கண்ணைக் கவரத்தக்கவரல்லர். அதற்குக் காரணம் அவருடைய அறிவின்மையேயாம். மன அழகாகிய மதிநுட்பம், உடல் அழகைப் பிரகாசிக்கச் செய்கின்றது. ஆகையால் மனஅழகு இல்லாவிடத்து உடல் அழகு ஒளிபெறாது. மலர்ந்தமுகமும், கூரியபார்வையும்அழகுக்கு அணிகலன் போன்றவை. இதுபற்றியே நமது ஆன்றோரும் 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' எனக் கூறியுள்ளார். நாம் எண்ணும் எண்ணங்களெல்லாம் நமது முகத்தில் படங்களை வரைகின்றன. தூய சிந்தனை யுள்ளவர்களின் வதனத்தில் பூரிப்பு, முகமலர்ச்சி, கம்பீரப் பார்வை முதலிய படங்கள் வரையப்படுகின்றன. தீய சிந்தனை யுடையோரின் முகத்தில் காமம், குரோதம், கவலை, லோபம், உறக்கம் முதலிய படங்கள் வரையப்படுகின்றன. நமது சிந்தனையும் அதனுனுறுஞ் செயலும் நாள் தோறும் முகத்திலுள்ள மனப் படத்தை மேன் மேலும் வரைந்து அகத்திலுள்ள அழகையோ அல்லது விகாரத்தையோ வெளிப் படுத்துகின்றது. ஆகையால் நமது கோர எண்ணங்களை யாரு மறியாதபடி மறைப்பது அசாத்தியமான காரியமாகும். ஒரு மழைமானியானது மழை வீழ்ந்த

அதே சமயத்தே எத்தனை அங்குலம் மழை பெய்த தென்பதைப் பதிவு செய்கின்றதோ அதே போல நமது மனமானது நாம் சிந்தனைகளைச் சிந்திக்கும் பொழுதே முகத்தில் படம் வரைந்து விடுகின்றது. மனிதனுக்கு விகாரத்தை யுண்டாக்கும் நரைதிரையே இப்படங்களாகும். மேற்றிசைத் தத்துவ ஞானியாகிய ஷோபன் ஹோர் என்பார் 'மனிதன் எண்ணமுஞ் செயலும் அவன் முகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவனைப்பற்றி அறிய வேண்டிய விஷயங்களை அவனுடைய முகப்படத்திலிருந்து அறியலாம்' என்றும், தோறியோ என்னும் பிரபல ஞானியார் 'நாம் அனைவரும் சிற்பிகளாவோம். அத்தொழிலுக்கு உபயோகிக்கும் பொருள் நமது தசை, எலும்பு, இரத்தம் என்பனவாம். மனுஷத்வம் வன்மையையும், மிருகத்வம் விகாரத்தையும் முகத்துக்கு அளிக்கின்றது' என்றும் உவில்லியம் கனெற் என்பார் 'பாவமாகிய கலப்பை பூட்டி உழப்பட்ட விகார வதனம் நரகத்தின் வெளிப்படையான காட்சியாகும்' என்றும் கூறியிருக்கின்றனர்.

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவனுடைய முகமானது அவனுடைய உள்ளக் கிடக்கைகளை எங்ஙனந் தெரிவிக்கின்றதோ அதேபோல் அவனுடைய ஒழுக்கத்துக்கும் அறிகுறியாயிருக்கின்றது. வீரம், பெருமிதம், ஜெபம், அன்பு, உற்சாகம் போன்ற நற்குணங்கள் ஒருவித பிரபையை உண்டாக்குகின்றன. இடையறா முயற்சியும், பூரண ஆனந்தமும் சாதாரண மனிதனையும் சௌந்தரியம் அடையச் செய்யும். தூய சிந்தனையானது ஒருவனை நன்முயற்சிகளில் தூண்டுகின்றது. நன்முயற்சியின் பயனாக அவன் தயை, தாக்ஷண்யம், அன்பு என்னும் நற்குணங்களைப் பெற்று அதன் மூலம் ஆத்மீக அழகைப் பெறுகின்றான். தாய் குரூபியாயினும் பிள்ளைக்கு அவள் அழகுத் தெய்வமாகவே தோன்றுகின்றாள். அவள் அழகுக்கு அடிப்படையாயிருப்பது பிள்ளைமீதுள்ள பேரன்பேயாம். உலகப் பிரசித்தி பெற்ற எமர்ஸன் என்னும் பெரியார் 'ஆண்டவன் தர்மத்தின் மேலிடும் முத்திரையே அழகு' என்றும், பிரூவுன்ஸன் அல்கொட் என்பார், 'நாங்கள் புண்ணிய சீலர்களாயிருந்தால் அனைவரும் அழகாயிருப்போம்' என்றும் கூறியுள்ளனர்.

மனிதனுக்கு ஆத்மீக அழகை அளிப்பது சமயம். மெய்ச் சமயம் ஆத்மாவில் அன்பும் விசுவாசமும் உண்டாக்குவதால் முகத்தை அழகு பெறச் செய்கின்றது. பொய்ச் சமயம் ஆத்மாவில் பயத்தை ஏற்படுத்துவதால் முகத்தை விகாரப்படுத்துகின்றது. தயை, நன்றி, நம்பிக்கை, ஆர்வம், வீரம், வணக்கம், அடக்கம், முதலியன விகாரத்தைப் போக்கி முக மலர்ச்சியை அளிக்கின்றன. ஆகையால் நாம் எல்லோரும் இவ்வுலகில் அழகைப் பெற்று இன்பமடைய அழகுத் தெய்வம் அருள் புரியுமாக.

தன்னம்பிக்கை

"வில்வலன்"

இந்த உலகத்திலேயே பெரிய சக்தி யெது? பிரமிக்கத்தக்க காரியங்களை எந்தச் சக்தி செய்து முடித்திருக்கிறது? அதுதான் 'தன்னம்பிக்கை' என்னும் சக்தி. பெரிய பெரிய மலைகளையும் அசைக்கும் வல்லமை அதற்குண்டு. உலகத்திலே உள்ள எல்லாச் சக்திகளுக்கும் பிறப்பிடம் அந்தத் தன்னம்பிக்கைதான்.

நீ பிரவேசிக்கும் எந்த ஒரு வேலையும், அது எவ்வளவு பெரியதா யிருந்தாலுஞ் சரியே, உன்னுடைய சக்தியில் பூரணமான நம்பிக்கை வைத்து நீ அந்தக் காரியத்தில் பிரவேசிப்பாயானால் அது மிகவும் லேசாக கட்டாயம் பூர்த்தியாவதை நீ பார்க்கலாம். 'நான் இந்தக் காரியத்தைச் செய்தே முடிப்பேன். அது என்னால் முடியும்' என்ற உறுதி கொண்டு நீ பிரவேசிக்கும்போது, உலகத்திலுள்ள மற்ற எந்தச் சக்திகளும் அதைத் தடை செய்ய முடியாது. ஏன்? தன்னம்பிக்கை என்பதற்கு அவ்வளவு வல்லமை உண்டு. எந்த எல்லை வரை தன்னம்பிக்கை எனும் சக்தி உனக்கிருக்கிறதோ அதுவரை நீ எந்தக் காரியங்களையும் சாதிக்க முடியும். அதுதான் உண்மை. இந்தத் தன்னம்பிக்கையின் அளவு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக வளர்ந்து கொண்டு போகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பெரிய பெரிய காரியங்களையும் நீ சாதித்து வெற்றி காண முடியும். ஆனால், ஓ, இந்த வேலையா? இதை நான் எப்படிச் செய்து முடிப்பேன்? என்ற எண்ணத்தோடு நீ பிரவேசிப்பாயானால் அந்தக் காரியத்தில் உனக்கு எப்படி வெற்றி ஏற்படும்? அந்த வேலையின் முடிவில் நீ தோற்கவில்லை. ஆனால் அதை ஆரம்பிக்கும் போதே நீ தோற்றுவிட்டாயே. ஆதலால் எந்த ஒரு காரியத்திலும் பிரவேசிக்கும்போது பூரணமான தன்னம்பிக்கையோடு நீ அந்தக் காரியத்தில் இறங்கு. அப்பொழுது யாரேனும் வந்து உன்னிடம், 'ஐயோ, பயித்தியமே, இது உன்னால் சாத்தியமாகுமா? வீணான முயற்சி யல்லவா', என்று கூறுவார்களானால் அவர்களை நீ உன்னுடைய பரம விரோதியாகக் கருது. அப்படிப்பட்டவர்களின் சகவாசம்கூட உனக்கு வேண்டாம். ஏன்? அவர்கள் உனக்கு உற்சாகம் ஊட்ட வேண்டியதற்குப் பதிலாக உன்னைப் பலஹீனனாக்குகின்றனர். அதுமட்டுமில்லை; அவர்கள் உன்னுடைய வழியை மறிக்கின்றார்கள். இவ்வளவுதானா? அவர்கள் உன்னுடைய கால்களைப் பற்றி பின்னே இருந்து இழுக்கின்றார்கள்!

இந்த உலக மேடையிலே நீ உன்னுடைய கண்களின் பார்வையைக் கொஞ்சம் விட்டெறிந்து நோக்கு. மனித சமூகம் எத்தனையோ மாற்றங்களைத் தாண்டி இன்றைய உன்னத நிலைமையை அடைந்திருப்பது உனக்குத் தெரியும். இந்த நிலைமையை ஸ்தாபித்தவர்கள் யார்? இவைகளுக்குக் காரணஸ்தர்கள் யார்? தன்னம்பிக்கை நிறைந்த மகா புருஷர்களாலேயே இந்த உன்னத நிலையை மனித சமூகம் அடைந்திருக்கிறது. அவர்கள் இந்தக் காரியங்களில் பிரவேசித்த காலத்தில், அவர்களைக் கேலி செய்தவர் பலர். நிந்தித்தவர் பலர். அயோக்கியன் என்று பட்டம் சூட்டினார்கள் ஜனங்கள். ஆனால் இந்தக் கேலிக் கூத்தையெல்லாம் அந்த மகா புருஷர்கள் லட்சியம் செய்தார்களா? இதற்காக அவர்கள் வருந்தினார்களா? இல்லை இல்லை. தங்கள் மார்க்கத்திலேயே சென்று கொண்டிருந்தார்கள் அவர்கள். அவர்கள் தன்னம்பிக்கை உடையவர்கள். தன் சக்தியை அவர்கள் நன்றாக அறிந்தவர்கள். தாங்கள் காணும் கற்பனையை காரிய ரூபத்தில் ஆக்குவதற்கு அவர்கள் விடா முயற்சி செய்தார்கள். முடிவில் அவர்கள் வெற்றி பெற்றார்கள். அந்த மகா புருஷர்கள் இந்தக் காரியங்களில் பிரவேசித்திரா விட்டால் இன்றைய மனிதசமூகம் எந்த நிலையிலிருக்கும்? பழைய நிலையிலேயே, அதாவது காட்டு மிராண்டித்தனமான நிலையிலேயே காட்சி யளிக்குமல்லவா?

ஜனங்கள் உன்னைக் கேலி செய்யட்டும்; நன்றாகச் செய்து கொள்ளட்டும்; ஆகாயக் கோட்டை கட்டுபவன் என்று அவர்கள் உன்னைக் கூறட்டும். அதைப்பற்றி உனக்கென்ன கவலை? உன்னுடைய சக்தியை அவர்கள் உணராதது தான் அதற்குக் காரணம். தங்களுக்கு எவ்வளவு சக்தி யிருக்கிறது என்பதையே உணராதவர்களன்றோ அவர்கள். பூரணமான தன்னம்பிக்கையோடு நீ காரியத்தில் பிரவேசி. நீ ஆகாயத்தில் கோட்டையையும் கட்டி முடிப்பாய். உன்னைக் கேலி செய்த அவர்கள் வெட்கித் தலை குனிவார்கள். ஆனால் உன்னுடைய சக்தியையே நீ தெரிந்து கொள்ளவில்லையேல் நீ எந்தக் காரியத்தைத் சாதிக்க முடியும்? ஒன்றுமே முடியாது. அதாவது உன்னை நீயே இன்னான் என்று தெரிந்து கொள்ளாதது மட்டுமில்லை உன்னைப் பற்றியே நீ அவநம்பிக்கை கொள்கிறாய்! இதனால் நீ உனக் குள்ளிருக்கிற சக்தி பூராவையும் நாசமாக்கி விடுகிறாய். உன்னுடைய சம்பத்துக்கள் ஒழிந்து போனாலும் போகட்டும், உன்னுடைய சரீர ஆரோக்கியம் கெட்டாலும் கெடட்டும், உன்னையாரும் அவமதித்தால் தான் என்ன, இவற்றையெல்லாம் நீ பொருட் படுத்த வேண்டாம். ஏன்? உனக்கு தன்னம்பிக்கை இருக்குமானால் இந்த உலகத்திலே அரிய காரியங்களை நீ செய்து காட்ட முடியும். நீ உன்னையறிந்து நடக்க ஆரம்பித்தாயானால், உன்னைக் கேலி செய்தவர்களே பின்பற்றி வருவதை நீ காண்பாய்.

நெப்போலியனை நீ கேள்விப்பட்டிருக்கிறாயல்லவா? அவனிடத்தில் ஒரு கடிதத்தைச் சேர்ப்பிக்கும் பொருட்டு ஒரு ராணுவ வீரன் கனவேகமாக குதிரை மீது வந்தான். ஆனால் அவன் அந்தக் கடிதத்தை நெப்போலியனி

டம் சேர்ப்பிக்கும் முன்னேயே அவனுடைய குதிரை கீழே விழுந்து இறந்து விட்டது. கடிதத்தைப் பெற்றான் நெப்போலியன். படித்தான். அதற்குப் பதிலெழுதினன். பதில் கடிதத்தை அந்த ராணுவவீரனிடம் கொடுத்து, இதோ, என்னுடைய குதிரை மீது ஏறிப்போய் சீக்கிரம் சேர்ப்பித்து விடு என்றான் நெப்போலியன். நெப்போலியனுடைய குதிரையருகிற் சென்ற அந்த ராணுவ வீரன் கொஞ்சம் பின்வந்து, எங்கள் தலைவரே, இந்த அருமையான குதிரை மீது சவாரி செய்யத் தகுந்த யோக்கியன் நான் இல்லையே என்றான். இதைக் கேட்ட நெப்போலியன் உடனே என்ன கூறினன் தெரியுமா?

"எந்த ஒரு பிரெஞ்சு ராணுவ வீரனும் முடிக்க முடியாத காரியம் இந்த உலகத்திலே கிடையாது" என்று சொன்னன் நெப்போலியன். ஆனல் இது அதிசயமில்லை. அந்த பிரெஞ்சு ராணுவ வீரனைப் போன்றவர்கள்தான் உலகத்தில் ஏராளம். "இந்த உலகத்திலே எல்லோரும், எல்லாக் காரியங்களையுமே செய்ய முடியாது; அதற்குச் சில மகான்கள் அவதரிக்கிறார்கள்" என்று இவர்கள் நினைத்து ஆத்ம திருப்தி யடைகிறார்கள்! இந்தப் பெரும்பான்மையோடு நீ சேர வேண்டாம். ஒன்று கவனி. 'நான் அயோக்கியன், அந்தக் காரியத்தைச் செய்யத் தகுதியற்றவன்' என்று நீ ஏன் நினைக்க வேண்டும்? உன்னை நீயே ஏன் முட்டாளாக்கிக் கொள்ள வேண்டும்? இந்த உலகத்திலே மனிதர்களால் ஆகக் கூடாத காரியம் ஒன்றுமே கிடையாது. இது உண்மை. தன்னம்பிக்கை யுள்ள புருஷன் இதைக் கட்டாயம் அறிகிறான். எந்தக் காரியத்தையும் செய்து முடிக்கத் தகுதி வாய்ந்த சிலர், சில காரியங்களைத் தங்கள் சக்திக்கு மீறியது என்று தள்ளிவிட்டு சின்னக் காரியங்களில் பிரவேசித்து தங்கள் சக்தியை நஷ்டமாக்குகிறார்கள். ஐயோ, இவர்களுடைய அற்புத சக்தியை எப்படி உபயோகிக்கிறார்கள் பார்த்தாயா? ஏன்? இவர்கள் தங்கள் சக்தியின் எல்லையை உணராததுதான் காரணம். இன்னுங் கூறப் போனல், தங்களுக்கிருக்கும் சக்தியில் பாதியைக் கூட இவர்கள் தெரிந்து கொள்ளவில்லை என்று சொல்லலாம். தங்களுக்குத் தாங்களே கீழாக நினைப்பவர்கள், அற்பக் காரியங்களிலே ஈடு பட்டு விட்டு இந்த உலகத்திலிருந்து மறைந்து விடுகிறார்கள். ஆம், தன்னம்பிக்கை யற்ற இவர்கள், தங்களுக்கு மட்டுமில்லை; இந்த உலகத்துக்கே நஷ்டம் விளைத்தவர்களாவார்கள்.

உன்னுடைய மன உறுதி, சரீர பலம் இந்த சக்திகளுக்கெல்லாம் சேனை நாயகன் யார் தெரியுமா? அந்த 'தன்னம்பிக்கை' என்ற வீரன்தான். அந்தத் தன்னம்பிக்கை எனும் வீரன் தனக்குத் தானே வேலை செய்ய ஆரம்பித்து விட்டால் மன உறுதி, சரீர பலம் என்ற மற்ற சக்திகளும் துள்ளிக் குதிக்க ஆரம்பித்துவிடும். தன்னம்பிக்கை என்னும் அந்த சேனை நாயகன் முன்னே நிச்செல்லாதபோது மற்றச் சக்திகள் மௌனமாகத் தங்கள் தலைவனையே உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன. அந்தத் தலைவன் முன்னேறத் தொடங்கினல் உடனே மற்றச் சக்திகள் இரண்டு பங்கு பலத்தோடு உன்னை அவைகளே செலுத்திக்

கொண்டுபோய் வெற்றி என்னும் அந்த உயர்ந்த சிகரத்தில் ஏற்றுவிக்கின்றன.

மனிதர்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்து கொண்டு தானிருக்கிறார்கள். ஆனால் இவர்களில் மன உறுதிபடைத்தவர்கள் சிலராய்த் தானிருக்கிறார்கள். மனம் ஒடிந்து போயிருப்பவர்களே பெரும் பாலராய்த் தெரிகிறது. இதற்குக் காரணமென்ன? ஏன் இவர்கள் மனமொடிந்து கிடக்கின்றனர்? ஆம், அவர்களுடைய எண்ணத்திலே உறுதியில்லை. அப்படியானால் அவர்கள் எவ்விதம் எடுத்த காரியத்தில் வெற்றி பெறமுடியும்? 'எத்தனை இடைஞ்சல்கள் வந்தாலும் சரி, என்ன நேரினும் சரியே, வெற்றியை நிலை நாட்டாது நான் அமைதியடைய மாட்டேன்' என்று எவனொருவன் நினைத்து திடசித்தத்தோடு காரியத்தில் பிரவேசிக்கிறானோ, அவன், ஆம், அந்த மகா புருஷன் வெற்றிமாலை சூடியே வெளி வருகிறான். அவன் முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை. ஏன்? அவனுக்குப் பின் வைக்கத் தெரியாது. மன உறுதி, நம்பிக்கை இவைகள், மனிதனுடைய எத்தனையோ கஷ்டங்களையும் எதிர்த்து முன்னோக்கிச் செல்வதற்கு உதவி செய்கின்றன. ஆனால் அந்த உறுதியிலோ, நம்பிக்கையிலோ, கொஞ்சம் தளர்ந்தாலும் சரியே, எடுத்த எல்லாக்காரியமுமே சீரழிந்து மண்ணாகப் போகும். வெற்றி, தோல்வி என்பவைதான் என்ன? இரண்டும் இரண்டு நேர்மாறான மூலைகள். இவ்விதம் கூறுவது ரொம்பவும் லேசான விஷயந்தான். ஆனால் இவற்றின் முடிவு மிக மிக விசாலமானதல்லவா? மன உறுதியும், திட நம்பிக்கையும் உள்ளவன் அந்த வெற்றி யென்னும் மூலையை அடைகிறான். அஃதில்லாதவன் நேர்மாறான தோல்வி மூலையைத்தானே அடைவான்.

சந்தேகம், கோழைத்தனம், அவநம்பிக்கை, பயம் இவைகள் உன்னுடைய பரம விரோதிகள். இவைகள் வசிப்பதும் உன்னுடைய இதயத்திலேதான். நீ முதலில் இந்த எதிரிகளை அடியோடு ஒழித்து விடு. பூரணமான தன்னம்பிக்கையோடு காரியத்தில் பிரவேசி. அப்போது, வெற்றியென்பது, எவ்வளவு சுலபமாக தனக்குத்தானே வந்து உன்னை ஆலிங்கனம் செய்கிறது என்பதை நீ காண்பாய். அப்போது 'தன்னம்பிக்கை' என்ற சக்தியின் இந்தப் பலனைப் பார்த்து நீ ஆச்சர்யம் அடைவாய். 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி' என்பது அப்போது உனக்கு நன்கு புலப்பட்டு விடும்.

இவன் ஒரு பைத்தியக்காரன் என்று தான் ஸ்பெயின் பிரதம மந்திரி கொலம்பஸை ஆரம்பத்தில் கூறினான். கொலம்பஸினுடைய எண்ணங்கள் அவனுக்கு அந்த விதமாகப் பட்டது. இந்தக் கேலியினாலும், அநாதரவினாலும் கொலம்பஸ் மனம் ஒடிந்திருந்தானானால், இன்று அமெரிக்கா என்ற ஒரு கண்டத்தை நாம் படத்திலாவது பார்த்திருக்க முடியுமா? ஆனால் கொலம்பஸ், மனம் உடையவில்லை, எண்ணம் தளரவில்லை. அவன் விடா முயற்சி யுடையவனாயிருந்தான். தன்னம்பிக்கை அவனுக்கு நிறைய இருந்தது. 'நான் எதை நினைக்கிறேனோ, அது

சரியானதே; அதைச் செய்தே முடிப்பேன்' என்று உறுதி பூண்டிருந்தான் கொலம்பஸ். இந்த உறுதியினாலேயே, அவன், அந்த அலைகள் பொங்கும் சமுத்திரத்திலே, அதுவும் முன் பின் அறியாத பாதையிலே, சிறிய கப்பலிலே, சில எண்ணிக்கையுள்ள பேர்களோடு புறப்பட்டு விட்டான். வழியிலே அவனுடன் சென்றோர்கள் அவனை முன் செல்ல வேண்டாமெனத் தடுத்தார்கள். வீட்டிற்குத் திரும்பும்படி அவனுக்கு யோசனை கூறினார்கள். இந்த யோசனைகளெல்லாம் அவன் காதுகளையாவது அடைந்தனவா? அவைகளைப் பொருட்படுத்தினனா? ஆம், அவன் ஒரு அரிய காரியத்தைச் செய்து முடிப்பதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டிருக்கிறான். இந்தக் காரியத்தில் வெற்றி காண்பேன் என்ற அசைக்க முடியாத உறுதி பூண்டிருந்தான் அவன். வெற்றிகாணாது வீடு திரும்ப அவன் மனம் எப்படி இசையும்? அதோபார், அவனுடைய தோழர்கள் கட்டித் தூக்கி சமுத்திரத்தில் எறியப் போனதை. ஆனால் அவன் அதைச் சமாளித்துக் கொண்டு தன் நண்பர்களுக்குப் புத்திமதி கூறினன். இந்த நிலைமையிலே 'இன்று நாங்கள் மேற்குத் திசையில் முன்னேறியிருக்கிறோம்' என்று அவன் தன்னுடைய டைரியில் எழுதியிருக்கிறான். அவனுடைய அந்த அசைக்க முடியாத உறுதி, தன்னம்பிக்கை இவைகளால் விளைந்த பலன் யாது? இதைப் பற்றி நான் உனக்குக் கூறவேண்டுமா? நீயும் நானும் உலகம் பூராவுமே அதை அறியுமே. சிவப்பு இந்தியர்களுடைய சாம்பலின் மீது, செல்வத்திலே, நாகரிகத்திலே, கைத் தொழில் வளர்ச்சியிலே தலை நிமிர்ந்து நிற்கும் சுதந்திர அமெரிக்கா அதோ தெரிகிறது பார்!

நீ கொஞ்சம் கூர்ந்து நோக்குவாயானால் கொலம்பஸைப் போன்று நூற்றுக் கணக்கான மகான்களை நீ காண்பாய். அவர்கள், தங்கள் விடா முயற்சியிலும், மன உறுதியிலும் முடிக்க முடியாத காரியங்களை முடித்திருக்கிறார்கள். ஏன், தன்னம்பிக்கை என்னும் சக்திக்கு முன்னே, முடியாது என்ற ஒன்று இந்த உலகத்திலே ஜீவித்திருக்கவாவது முடியுமா? மன உறுதியும் தன்னம்பிக்கையும் இல்லாதவன் எப்படி மகா புருஷனாக முடியும்? ஒரு புதிய சரித்திரத்தை எவனொருவன் சிருஷ்டிக்கிறானோ அவனல்லவா சரித்திர புருஷன்.

ஆனால் பெரும்பாலான மனிதர்கள் ஏன் இந்த உலகத்திலே இவ்வளவு கீழான நிலையில் இருக்கின்றனர்? இதற்குரிய காரணத்தை நீ வெளியிற் சென்று தேட வேண்டியதில்லை. இதற்குப் பல காரணங்கள் கூற வேண்டிய அவசியமும் இல்லை. அவர்கள் தங்களை இன்னதென்று உணர்ந்து கொள்ளவில்லை. தங்களுடைய சக்திக்கும் அவர்களுக்கும் அறிமுகமே இல்லை. இதனால் அவர்கள் தங்களைத் தாங்களே மிகவும் கீழாக மதிக்கிறார்கள். இதற்கு உதாரணம் வேண்டுமா? 'தாசன், அடிமை' என்று கூறி தங்களுக்குத் தாங்களே பெருமை கொள்ளும் புத்திசாலிகளை நீ நம்முடைய தேசத்தில் பார்த்ததில்லையா? தனக்குத்தானே கீழானவனாக நினைக்கிறானே அதைப் பார்க்கிலும் முட்

டாள் தனமான செய்கை இந்த உலகத்திலே வேறு எதுவுமே இருக்க முடியாது.

ஆனால் எல்லா மனிதர்களுமே, உன்னதமான கீற்பனைகள் செய்வதோ, பெரிய எண்ணங்களை எண்ணுவதோ சாத்தியமானதில்லை தான். ஆனால் அவர்கள் உன்னதமான கற்பனைகளோ, உயர்ந்த எண்ணங்களோ இல்லாதவர்களானால், மன உறுதியற்றவர்களா யிருந்தால் அவர்கள் எப்படி மகா புருஷர்களாக முடியும்? உன்னதமான கற்பனைகளை எதுவரை ஒருவன் செய்ய வில்லையோ, அதைக் காரிய ரூபத்தில் கொண்டு வருவதற்கு மன உறுதியோடு பிரவேசிக்க வில்லையோ அதுவரை அந்த மனிதன் முன்னேறவே முடியாதே. ஆதலால் நீ, உன்னதமான கற்பனைகள் செய். உயர்ந்த எண்ணங்களையே நினை. நீ ஒரு மகா புருஷனாவதற்கு இவைகள் தான் முதற்படிகள். கூடவே, நான் நினைத்த காரியத்தை முடிப்பேன் என்ற திடசங்கல்பமும் தன்னம்பிக்கையும் இருக்கட்டும்; போதும். வெற்றி தான் உனது எல்லை. இந்த உலகத்திலே, உன்னதமான கற்பனைகளையும்எண்ணங்களையும்படைத்த கடவுள், கூடவே, அவற்றைப் பூர்த்தி செய்வதற்குச் சாதனங்களையும் படைத்திருக்கிறார். அவர் உன்னை இங்கும் அங்கும் அலைந்து உன் சக்தியை வீணாக்குவதற்காகப் படைக்கவில்லை. ஒரு முக்கியமான காரியத்தைச் செய்யும் பொருட்டாகவே உன்னை அவர் படைத்திருக்கிறார். அந்த முக்கிய லட்சியத்தை அடைந்து உன்னைப் படைத்தனுப்பிய கடவுளினுடைய எண்ணம் பூர்த்தியாகிறவரையும் உன்னுடைய ஜன்மம் புனிதமடையவுமான காரியத்தை நீ செய்.

மனிதன் எதை நினைக்கிறானோ அதைச் செய்து முடிக்கிறான். ஆனால் இதிலே சில மாற்றங்கள் உனக்குத் தெரியலாம். ஒருவன் ஒரு பெரிய காரியத்தைச் சாதித்துவிட்டான் என்றால் அவனுடைய கற்பனை பெரியதாயிருந்தது. அவனுடைய எண்ணம் விசாலமானது. அதைக் காரிய ரூபத்தில் சித்தியாக்குவதற்கு அவன் விடா முயற்சி செய்தான். வெற்றி பெற்றான். இதுதான் காரணமாகும். ஆனதால் உனக்கும் உன்னைப் போன்ற என் தேச சகோதர சகோதரிகளுக்கும் ஒரு யோசனை கூறுகிறேன். திரும்பவும் கூறுகிறேன். எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் உங்களைப்பற்றி அதிகமாக நினையுங்கள். தன்னம்பிக்கை கொள்ளுங்கள். அதாவது, இந்த உலகத்திலே உங்களுடைய சகல க்ஷேமலாபத்திற்கும் காரணஸ்தர்கள் நீங்கள் தான் என்பதை உணருங்கள். அபூர்வமான தெய்வீக சக்திகள் உங்களிடையே மலிந்து கிடக்கின்றன. அவற்றை நீங்கள் தூண்டிவிட வேண்டியதுதான் தாமதம். எத்தனையோ அரிய பெரிய காரியங்களை நீங்கள் செய்து முடிப்பீர்கள். மனிதர்களாகப் பிறந்ததின் பலனை அடைவீர்கள். இந்த உலகத்திலே நம்பிக்கை என்பது ஒரு பெரிய சக்தி வாய்ந்தது என்பதை மேலே உனக்குப் பல விதமாகத் துலக்கியிருக்கிறேன். நம்முடைய சுகம், க்ஷேமம், கலைஞானம், வெற்றி யாவற்றுக்கும் அதுதான் சாவி. அதன் மூலமாகத்தான் நம்மை எல்லாச் சக்திகளும் வந்தடைகின்றன. தன்னம்பிக்கை என்ற ஒன்றினால், தொட்ட மண்ணெல்லாம் பொன்னாவதை நீ காண்பாய்.

தன்னம்பிக்கை நிரம்பவுள்ள நீ ஒரு காரியத்தில் பிரவேசித்து வெற்றி பெற்ற பின்னும் சும்மாயிருப்பதில்லை. அதற்கு மேலும் ஒரு உன்னத காரியத்தில் பிரவேசிக்கிறாய். தன்னம்பிக்கை யுள்ள நீ ஓய்வு கொள்வது உன்னத வேலைகளிலே தான். அதாவது நீ உன்னுடைய மார்க்கத்தில் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டு செல்கிறாய் என்பதே இதன் பொருள். இதுதான் மனித வாழ்க்கையின் உண்மையான முன்னேற்ற மார்க்கம். ஒவ்வொரு மனிதரும் இதை உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டுவது அவசியமாகும். இந்த முன்னேற்றப் பாதையிலே மன உறுதியும் தன்னம்பிக்கையும் கொண்டு செல்லும் மகா புருஷர்கள், அதோ பார், அவர்கள் எத்தனை அற்புதமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். பெரிய பெரிய மலைகளைத் துளைத்து பாதை உண்டாக்கி யிருக்கிறார்கள். பயங்கரமான நதிகள் மீதும் பாலங்கட்டி யிருக்கிறார்கள். சமுத்திரங்களின் அடியிலே சுரங்கங்கள் தோண்டி யிருக்கிறார்கள். சாதாரணமாக பூமியில் செல்வதைப் போன்று, ஆகாயத்திலும் செல்லுவதற்கு வழி செய்திருக்கிறார்கள்!

'தன்னம்பிக்கை' யிருக்கிறதே இது எப்பொழுதும் உன்னை ஏமாற்றாது. அது ஒரு பெரிய சக்திவாய்ந்த பொருள். எந்த ஒரு தடையும் அதைக் கட்டுப்படுத்த முடியாது. முன்னேறிச் செல்வதற்கு அபூர்வமான சாதனம் அது. உன்னுடைய எல்லா க்ஷேம லாபங்களுக்கும் சிகரமானது. சதா அதைப்பற்றியே சிந்தி. அதைப் பெறுவதற்கு எந்த நேரமும் முயற்சி செய். உன்னுடைய இச்சைகள்யாவும் பூர்த்தியாகும். இந்த உலகம் மாத்திரமில்லை, பரலோகத்திலும் நீ யோக்கியனா யிருப்பாய். இந்த உலகத்திலே இந்த சக்தியைப் பார்க்கிலும் ஒரு மித்திரன் உனக்குக் கிடைக்க மாட்டான். ஆதலால் நீ தன்னம்பிக்கை நிரம்பியவனாய் இரு.

இந்தியாவில் எத்தனை ஜாதியினர், எத்தனை சமூகத்தினர் வசித்த போதிலும் அத்தனை பேருடையவும் பொதுப் படையான கலாசாரம் ஒன்றுதான். நம்வர்களுக்குள்ளே யிருக்கும் வேற்றுமையான அமிசங்களைக் காட்டிலும் ஒற்றுமையான அமிசங்கள் தான் அதிகமா யிருக்கின்றன. இந்த ஒற்றுமை அமிசத்தையே நாம் அரசியலில் வற்புறுத்த வேண்டும்.

—ஸர் ராதாகிருஷ்ணன்.

புறநானூறு.

—ச. முனிஸ்வாமி பிள்ளை

பண்டைத் தமிழ்ச் செய்யுட்களில் இப்பொழுது நமக்குக் கிடைப்பவை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என்பனவாம். இவற்றுள், பத்துப் பாட்டும், எட்டுத் தொகைச் செய்யுட்களுமே பண்டைத் தமிழகத்தின் சரித்திரத்திற்குப் பெரிதும் பயன் படுவன. ஆயினும், புறநானூறு என்னும் தொகை நூலே, சரித்திர ஆசிரியர்களுக்கு மிகுந்த பயனைத் தருவதென்பது எல்லாரும் அறிந்த தொன்றே. ஆதலின், இங்கு அந் நூலினின்று சில விஷயங்களைச் சுருக்கமாகத் தெரிவிக்கின்றேன்.

புறநானூறு என்பது, புறப்பொருளைப் பற்றிய நானூறு செய்யுட்களையுடையது. புறப் பொருளாவன, அறமும் பொருளும் ஆம். ஆகவே, இச் செய்யுட்கள் அறப் பகுதியையும், பொருட் பகுதியையும் அறிவிப்பனவாம். இந்நூற் செய்யுட்கள், புலவர் பலரால் பாடப்பட்டவை. பாடியவர்கள், அந்தணர் முதலான பல வகுப்பினர். அவர்களுள் பெண்பாலோருஞ் சிலர்.

முற் காலத்தில் நமது தமிழகமானது, சேர, சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர்களாலும், பல சிற்றரசர்களாலும் ஆளப்பட்டு வந்தது. அவர்கள் தம் நாட்டுக் குடிகளுக்கு ஆவன செய்தும் புலவர்களை ஆதரித்தும் வந்தனர். புலவர்கள் அரசர்களிடத்திற் சென்று குடிகளுக்குச் செய்ய வேண்டுவனவற்றைத் தெரிவித்து அவற்றைச் செய்யும் படித் தூண்டுவர். வீரர்கள் தம் அரசருக்கு உற்ற துணையா யிருந்து, தம் முயிரைப் பொருட் படுத்தாது முனைந்து பொருது நாட்டைக் காத்து வந்தனர். இவற்றை விளக்க இங்கே சில உதாரணங்கள் தருகின்றேன்.

பாண்டிய நாட்டு அரசனாகிய பூதப் பாண்டியன், பகையரசருடன் போர் புரியச் செல்லும் போது கூறிய வஞ்சின மொழிகளுள்,

அறனிலை திரியா அன்பின்
அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி
முறை திரிந்து
மெலிகோல் செய்தே னாகுக'

என்பது ஒன்று. இதனால், இவ்வரசன் குடிகளுக்கு நீதி செய்வதில் எவ்வளவு கவனித்து வந்தான் என்பது அறியலாகும்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியன்,

பொருந்திய என்னிழல் வாழ்நர்
சென்னிழற் காணாது
கொடியனெம் இறையெனக்
கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங்கோலே னாகுக

எனச் சூளுரைத் திருப்பதை யறியின் அவன் குடிகளைப் பாது காப்பதில் யாதொரு தவறும் நேராதபடி நாடோறும் நாடி வந்தானென்பது அறியப் படும்.

இவற்றால், பண்டைத் தமிழரசர்கள் குடிகளைப் பாதுகாத்து வருவதில் மிகுந்த ஜாக்கிரதையுடனிருந்தார்களென்பது சொல்லாமலே விளங்குமல்லவா?

குடபுலவியனா ரென்னும் புலவர்! பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனிடஞ் சென்று அவனை நோக்கி, 'வேந்தே, நீ மிகுந்த புகழையடைய விரும்புவாயாயின், நான் சொல்லுவதைக் கேட்பாயாக! மனிதர்களுக்கு, உணவு கொடுத்துக் காப்பாற்றுவதே மேலானது. ஆதலால், நீ நின் நாட்டில் குளங்கள் முதலிய நீர் நிலைகள் உண்டாக்கி உணவுப் பொருள்கள் மிகுதியாக விளையும்படிச் செய்ய வேண்டும். மேலும், பயிர் விளைவதற்கு மழையை எதிர் பார்க்கும் நாடு அரசனுக்குப் பயன் படாது. ஆதலால், நீ என் சொல்லை யிகழாது நீர் நிலைகள் விரைவில் உண்டாக்குவாய். அங்ஙனம் செய்தவர் புகழ்பெற்று என்றும் அழியாமலிருப்பர் என்பதையும் அறிவாய்' என்று அறிவித்துள்ளார். அது வருமாறு:-

மல்லன் மூதூர் வய வேந்தே
செல்லும் உலகத்துச் செல்வம்
வேண்டினும்
ஞாலங் காவலர் தோள்
வலி முருக்கி
ஒரு நீ யாகல் வேண்டினும்
சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினும்
மற்றதன்
தகுதி கேளினி மிகுதியாள
நீரின் றமையா யாக்கைக்
கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்
கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின்
பிண்டம்
உணவெனப் படுவது
நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரி யோரீண்
டுடம்பு முயிரும்
படைத்திசி னோரே
வித்திவா னோக்கும்
புன்புலம் கண்ணகன்
வைப்பிற்றாயினும்
நண்ணியாளும்
இறைவன் றாட்குத
வாதே அதனால்
அடுபோர்ச் செழிய
இகழாது வல்லே
நிலனெளி மருங்கி
னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவட்டட்
டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே

என்பது.

வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர், சோழன் குளமுற்றத் துஞ்சிய கிள்ளி வளவனிடஞ் சென்று 'அரசே, படைகளால் உண்டாகும் வெற்றியானது, உழவர்கள் விளைத்த நெல்லினாலுண்டாகிய பயனே; அன்றியும், நாட்டில் மழை பெய்யாவிடி

னும், நன்றாக விளையாவிடினும், வேறு எவையேனும் இடையூறு உண்டாயினும் குடிகள் அரசனைப் பழிப்பார்கள். ஆதலால், நீ பிறருடைய பொருளற்ற மொழிகளை ஏற்றுக் கொள்ளாமல் உழவர்களைப் பாது காக்கவேண்டும். அப்படிச் செய்வாயானால் நின் பகைவர் நின்னடியைப் போற்றுவர்' என்று அறிவித்திருக்கின்றார். அது வருமாறு:—

வருபடை தாங்கிப் பெயர்
புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங்
கொற்றமும் உழுபடை
யூன்று சான் மருங்கி
னீன்றதன் பயனே
மாரிபொய்ப்பினும்
வாரி குன்றினும்
இயற்கை யல்லன
செயற்கையிற் றோன்றினுங்
காவலர்ப் பழிக்குமிக்
கண்ணகன் ஞாலம்
அது நற் கறிந்தனை
யாயின் நீயும்
நொதும லாளர்
பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர்
பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை
யாயின் நின்
னடிபுறந் தருகுவர்
அடங்கா தோரே.

என்பதாம்.

இனி, வீரர்களின் மறத்தைப் பற்றி ஒரு சிறிது கவனிப்பாம். கோவூர் கிழார் என்னும் புலவர், சோழன் நலங்கிள்ளியை நோக்கி, 'அரசே, நீ, தம்மொடு பொருதற்கு வந்து விடுவாய் என்று அஞ்சி, வட நாட்டரசர்கள் உறக்கமுமில்லாமல் கவலையுடன் இருக்கிறார்கள்' என்று கூறுமிடத்து, 'போரெனிற் புகலும் புனைகழல் மறவர், காடிடைக் கிடந்த நாடு நனிசேய, செல்லேம் அல்லேம் என்றார்' என்று கூறியுள்ளார். இதை நோக்குமிடத்து, மஹா அலக்ஸாந்தருடன் வந்த வீரர்கள், 'இனியும் நெடுந்தூரம் சென்று பொருவதற்கு எங்களால் முடியாது?' என்று சொன்னதுபோல, இவன் வீரர்கள் சொல்ல மாட்டார்கள் என்பதும், எத்துணை நெடுந்தூரத்துக்காயினும் மனந் தளராது சென்று பொருவார்கள் என்பதும் அறியப்படுவனவாம்.

முற்காலத்தில் வீரத் தாய்மார்கள் எவ்வாறு கருதி வந்தனர் என்பதை,

'ஈன்று புறந் தருதல்
என் தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல்
தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே
தண்ணடை நல்கல்
வேந்தற்குக் கடனே
ஒளிவாள் வெஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே'

என்னுஞ்செய்யுளால் அறியலாம்.

இனி, அக்காலத்து மறத் தாய்மார்களின் வீரம், மகளிர் ஒழுக்கம், வள்ளல்களின் வண்மை, நட்பாளுந்திறன், புலவர்களின் வறுமை, புலவர்களின் மதிப்பு முதலான பல விஷயங்கள் இத்தொகைச் செய்யுட்களினின்று தனித் தனி ஆராயத் தக்கனவாம். அவற்றைச் சமயம் வாய்க்கும்போது ஆராய்ந்து எழுதி வெளியிட எண்ணி,

இப்பொழுது இவற்றோடு இக்கட்டுரையை முடிக்கின்றேன். இதைப் பூர்த்தி செய்வதன் முன் இரண்டொரு செய்யுட்களை இங்கே தருவது மிகையாகாது என்றெண்ணி அவற்றைக் குறிக்கின்றேன்.

நெல்லும் உயிரன்றே
    நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே
    மலர்தலை உலகம்
அதனால் யான் உயிர் .
    என்பதறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக்
    கடனே'—புறம் 186.

பல் சான்றீரே! பல் சான்றீரே !
கயல்முள் அன்ன நரை
    முதிர் திரைகவுள்
பயன்இல் மூப்பின்
    பல்சான்றீரே !
கணிச்சிக் கூர்ம் படைக்
    கடுந்திறல் ஒருவன்
பிணிக்குங் காலை
    இரங்குவிர் மாதோ
நல்லது செய்தல்
    ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்பு மின் !
    அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார்
    அதுவே'—புறம் 195.

'நண்பர் கூடாவிடில்'

—பொ. திருகூடசுந்தரம் பிள்ளை
M. A., B. L.

(பிரபல நாவலாசிரியர் ஸர் வால்ட்டர் ஸ்காட்டின் மருமகன் லாக்ஹார்ட் இக்கவிகளை 'செல்லி சீரியர்' என்று உலகப் பிரசித்தி பெற்ற அறிஞர் கார்லைலுக்கு அனுப்பினார். வாழ்க்கைத் துணையிழந்து வருந்தி நின்ற கார்லைல் இவற்றை அடிக்கடி நினைந்து ஆறுதல் அடைந்தார்)

1. துக்கத்தின் கடலுக் கப்பால்
    தொலையில் ஒரு கரையில்
பிரிந்த நண்பர் மீண்டுங் கூடுவதாக
    ஒரு பழைய நம்பிக்கை.

2. பொய்யோ மெய்யோ
    அதைக் கைவிடேன்
அந்த நம்பிக்கையை இழவேன்
அங்ஙனம் விழிப்பதற் கின்றேல்
    ஊழிகால உறக்கமாய் ஒழியட்டும்.

சுதந்திரத்தின் தேவைகள் யாவை?

ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்

வெ. சா.

பிரசங்கம்-8

சுதந்திரத்தின் பொருள் யாது?

பிற நாட்டறிஞர்கள், ஜனநாயகத்தோடு சுதந்திரத்தையும் சேர்த்தே பேசுகிறார்கள். அப்படியே நூல்கள் பலவும் வெளியாயிருக்கின்றன. ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் சுதந்திரத்திற்காகவே போராடியிருக்கிறார்கள். இதன் பயனாக இப்பொழுதுதான்; ஜனநாயகம் என்பது துளிர்க்க ஆரம்பித்திருக்கிறது. நமது புரட்சிக்கு அடிப்படையாக ஜனங்களின் தேசியம், ஜனங்களின் ஆதிக்கம், ஜனங்களின் வாழ்க்கை என்று சொல்லப்பட்ட மின்ட்—ஸு, மின் ஷுவான், மின்-ஷெங்க் என்னும் வாசகங்கள் எப்படி அடிப்படையாயிருக்கின்றனவோ, அப்படியே பிரெஞ்சுப் புரட்சிக்கும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும் அடிப் படையாயிருந்தன. ஜனாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான், இந்த சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும் இருக்கின்றன. அல்லது இந்த சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய மூன்றிலிருந்தும் ஜனாதிக்கம் பிறக்கிறதென்று சொல்லலாம். எனவே, ஜன நாயகத்தைப் பற்றி நாம் வாதிக்கிற போது, இந்த வாசகத்தை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் நடைபெற்றிருக்கிற போராட்டமெல்லாம் இந்தச் சுதந்திரத்திற்காகத்தான். இதனால்தான் மேனாட்டு அறிஞர்கள் இந்தச் சுதந்திரத்தை ஒரு முக்கிய விஷயமாகக் கருதுகிறார்கள். இதைப் பற்றி ஆராய்ச்சியும் செய்கிறார்கள். ஆனால் இந்தப் பிரயோகம், சீனாவுக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு, ஒரு சில அறிஞர்கள்தான் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். சாதாரண சீன ஜனங்களைப் போய்க் கேட்டால், அவர்களுக்குச் சுதந்திரம் என்றால் என்ன வென்பதே தெரியாது. மேனாடுகளுக்குச் சென்று கல்வி பயின்று வந்த இளைஞர்களுக்குக்கூட சுதந்திரத்தைப் பற்றிச் சரியாக ஒன்றுந் தெரியாது. இதனால், அந்நியர்கள் சீன நாகரிகம் மிகவும் மட்டமானதென்றும், அவர்களுக்குச் சரியான சிந்தனா சக்தி கிடையாதென்றும் குறை கூறுவதோடு, சீனர்கள்

மணல் மூட்டை மாதிரி என்றுஞ் சொல்லி விடுகிறார்கள்.

சீனர்கள் மணல் மூட்டை மாதிரி ஒற்றுமையில்லாமலிருக்கிறார்கள் என்று அந்நியர்கள் கூறுவதின் அர்த்தமென்ன? ஒவ்வொருவரும் அவரவர் இஷ்டப்படி காரியங்களைச் செய்வதினாலும், வாழ்க்கையின் எல்லா அமிசங்களிலும் சுதந்திரமாயிருப்பதனாலும், சீனாவை ஒரு மணல் மூட்டையென்று சொல்லி விடுவதா? கையிலே ஒரு பிடி மணலை எடுத்துக் கொள்ளுங்கள். அவை ஒன்று சேராதபடி உதிர்ந்து போய் விடுகின்றன. ஆனால் அதனுடன் கொஞ்சம் சிமிட்டியைச் சேர்த்து விடுங்கள். அப்பொழுது கற்பாறைமாதிரி கெட்டியாகப் போய் விடுகிறது. ஆனால் அதில் மணலுக்கு எவ்வித சுதந்திரமுமில்லை. மணலையும் கற்பாறையையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, மணலின் சேர்க்கைதான் பாறை என்பது நன்கு தெரிய வரும். ஆனால் மணலே கற்பாறையாகக் கெட்டிப்பட்டு விட்ட பிறகு, மணலானது அப்படியும் இப்படியும் அசைய முடிகிறதில்லை. இப்படியே சுதந்திரம் என்றால் என்னவென்று நாம் பார்க்கிறபோது, ஒழுங்குபட்ட ஒரு வரம்புக்குள் தன்னிஷ்டப்படி நடந்து கொள்ளும் உரிமைக்குத்தான் சுதந்திரம் என்று பெயர். சீன பாஷையில் இந்தக் கருத்தைத் தெரிவிக்கக்கூடிய ஒரு பதம் இல்லையாதலினால், சீனர்களுக்கு இந்தச் சுதந்திரத்தைப்பற்றி ஒன்றுந் தெரியாதென்று அந்நியர்கள் அபிப்பிராயப்பட்டு விட்டார்கள். ஆனால், சீனர்கள் மணல் மூட்டை என்று சொல்வதனால் அவர்களுக்கு அதிகமான சுதந்திரம் இருக்கிறதென்று அர்த்தப்படவில்லையா? மேனாட்டார் கருத்துப்படி நாம் ஒற்றுமையாயில்லாவிட்டால், நாம் மணல் மூட்டை மாதிரி எப்படி இருக்க முடியும்? இந்த வாதமே ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது.

மேனாட்டார் இந்தச் சுதந்திரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்துப் பேசியிருக்கிறார்கள். 'சுதந்திரத்தைக் கொடு; அல்லது மரணத்தைக் கொடு' என்பதுதான் அவர்களுடைய வாசகம். இந்தச் சுதந்திரத்திற்காக ஏராளமான ரத்தம் செலவழிக்கப்பட்டது. இந்தச் சுதந்திரப் போராட்டத்தின் விளைவுதான் ஜனநாயகம். இதுவே அறிஞர்களுடைய அபிப்பிராயம். ரோம ஏகாதிபத்தியமும், கிரேக்க ஏகாதிபத்தியமும் செழித்திருந்த காலத்திலேயே இந்த ஜனநாயகம் உதயமாகிவிட்டது. மேற்படி இரண்டு ஏகாதிபத்தியங்களும் விழுந்துபட்ட பிறகு, இந்த வார்த்தையும் வழக்கொழிந்து விட்டது. சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளாகத்தான் மீண்டும் இந்த வாசகம் பிரயோகத்தில் வந்திருக்கிறது. சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் நடைபெற்றிருக்கிற போராட்டமெல்லாம், ஜனநாயகத்தை லட்சியமாகக் கொள்ளாமல் சுதந்திரத்தையே லட்சியமாகக் கொண்டிருக்கின்றன. 'பணஞ் சம்பாதிக்கப் புறப்படு' என்று சொன்னால் சீனர்கள் எப்படி சுலபமாக அர்த்தம் புரிந்து கொள்கிறார்களோ, அப்படியே ஐரோப்பியர்களும் சுதந்திரம் என்றால் உடனே அர்த்தம் புரிந்து கொள்கிறார்கள்.

சீனர்களைப் பார்த்து 'சுதந்திரத்திற்காக யுத்தஞ் செய்யுங்கள்' என்று சொன்னால் அவர்களுக்கு அர்த்தம் புரியாது. ஆனால் 'பணஞ் சம்பாதிக்கப் புறப்படுங்கள்' என்று சொன்னால் ஏராளமான கூட்டம் உங்களைப் பின் தொடர்ந்து வரும். இதேமாதிரிதான் மேனாட்டிலும் சுதந்திர தேவதையை எல்லாரும் தொழுகிறார்கள். இங்ஙனம் ஐரோப்பியர்கள் சுதந்திரத்தை தெய்வமாகக் கொண்டாடுவதற்கும், சீனர்கள் பணத்தைத் தெய்வமாகக் கொண்டாடுவதற்கும் காரணமென்ன? சீனர்கள் பரம ஏழைகளாயிருப்பதனாலேயே அவர்கள் பணத்தைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். வறுமையினின்று விடுதலையடையப் பார்க்கிறார்கள். வறுமையினின்று விடுதலையடைவதென்பது துன்பத்தினின்று விடுதலை பெறுவதாகுமல்லவா? ஏழ்மைத்தனத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் ஜனங்கள், பணக்காரர்களாகும் விஷயத்தைப்பற்றி யாராவது பேசக் கேட்டுக்கொண்டிருப்பார்களானால், உடனே அவர்கள் உயிரைக்கூட பொருட்படுத்தாமல் பணஞ் சம்பாதிக்கும் மார்க்கத்தில் இறங்கி விடுவார்களல்லவா?

இங்ஙனமே, மேனாடுகளில் சுயேச்சாதிகாரம் மிகவும் வலுத்திருக்கிறபடியால் அங்கு, ஜனங்கள் சுதந்திரப் போராட்டத்தில் இறங்கினார்கள். ரோம ஏகாதிபத்தியம், முதலில் ஒரு குடியரசாக இருந்தது. பின்னர் ஒரு முடியரசாக மாறியது. இதற்குப்பிறகு வீழ்ந்துபட்டது. இதிலிருந்து சிறுசிறு ராஜ்யங்கள் பல முளைத்தன. இதன் பிறகு நிலச்சுவான்தார்கள் ஆட்சி ஏற்பட்டது. பலமுள்ளவர்கள் அரசர்களானார்கள். இவர்களெல்லாரும் யதேச்சாதிகாரிகளாகவே இருந்தார்கள். இவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். இதனால்தான், போராடி சுதந்திரம் பெற வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

சீனாவில் மன்னராதிக்கம் வலுத்திருந்த போதிலும், அவர்களுடைய சுயேச்சாதிகாரமானது, ஜனங்களை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. தங்களுடைய சிங்காதனத்திற்கு எவ்வித ஆட்டமும் ஏற்படாதிருக்கிற வரையில், ஜனங்கள் எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளலாமென்கிற மாதிரியாக இருந்தார்கள். ஜனங்களுடைய நலனைப் பற்றி இவர்கள் சிறிது கூடக் கவலை கொள்ளவில்லை.

இப்பொழுது சீனாவில் குடியரசு ஏற்பட்டு ஏறக்குறைய பதின் மூன்று வருஷங்களாகின்றன. இன்னும், அரசாங்கத்திற்கும் ஜனங்களுக்கும் எவ்வித தொடர்பு இருக்க வேண்டுமென்பதைப் பற்றி சரியாக நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால், 1911ம் வருஷத்திற்கு முன்னர், மஞ்சூ மன்னர் பரம்பரையினர் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் சீனாவின் நிலைமை என்னவாயிருந்தது? இதைப் பற்றிச் சிறிது கவனிப்போம். தேசம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு கவர்னர். இந்த கவர்னருக்குக் கீழ் 'டாவோடை' என்ற அதிகாரி. இந்த அதிகாரிகளின் கீழ் மாஜிஸ்ட்ரேட்டுகள் முதலிய சில்லரை உத்தியோகஸ்தர்கள். மன்னருக்கும் பிரஜைகளுக்கும் எவ்வித நேரான

தொடர்பும் இல்லை. ஜனங்கள் தானியங்கள் மூலமாக வரி செலுத்துவதோடு திருப்தியடைந்து விட்டார்கள். இதனால் ஜனங்களுக்கு அரசியல் உணர்ச்சியே இல்லாமலிருந்தது. யார் சக்ரவர்த்தியாயிருக்கின்றனர் என்பதைப் பற்றி அவர்கள் கவலையே கொள்ள வில்லை. தங்களுடைய வரியைச் செலுத்தியவுடன், தங்களுடைய கடமை முடிந்து விட்டதாகவே கருதினார்கள். மன்னர்களும், ஜனங்கள் ஒழுங்காக வரியைச் செலுத்துகிறார்களா வென்பதோடு தான் திருப்தியடைந்தார்களே தவிர, அவர்களிஷ்டப்படி வாழவும் இறந்து போகவும் விட்டு விட்டார்கள். இதனால், சீனாவில் ஜனங்கள், யதேச்சாதிகாரத்தினால் நேர் முகமாகப் பாதிக்கப்பட வில்லையென்பது நன்கு தெரிய வரும்.

நமது ராஜ்யம் இப்பொழுது பலவீன மடைந்து விட்டது. அந்நிய நாடுகளின் அரசியல், பொருளாதார ஆதிக்கத்தின் கீழ் வந்து விட்டோம். இந்த ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட நம்மால் முடிய வில்லை. இப்பொழுது நமது செல்வம் குன்றி விட்டது. ஜனங்கள் வறுமையினால் துன்பப்படுகிறார்கள். இதனால்தான், பணத்தைச் சேகரிக்க வேண்டுமென்பதிலே சீனர்களுக்கு அதிக ஆசை.

மேனாடுகளில், ஜனங்கள் சுதந்திரமின்மையால் நேரடியாகப் பாதிக்கப்பட்டார்கள். சுதந்திர மில்லாமலிருப்பது என்றால் என்ன வென்பதை சீனர்கள் கொஞ்சம் அநுபவித்திருக்கிறார்கள். டச்சுக்காரர்க்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சொந்தமான குடியேற்ற நாடுகளில் சீனர்கள் சென்றால் அங்கு என்னென்ன விதமான நிர்ப்பந்தங்களுக்குட்படுத்தப்படுகிறார்களென்பது நமக்கு நன்கு தெரியும். உதாரணமாக ஜாவாவை எடுத்துக் கொள்ளுங்கள். இது ஒரு காலத்தில் சீனருக்குச் சொந்தமா யிருந்தது. இப்பொழுது டச்சுக்காரருக்குச் சொந்தமா யிருக்கிறது. இங்குச் செல்லும் ஒவ்வொரு சீன வியாபாரியும் அல்லது தொழிலாளியும், கப்பல், துறை முகத்தில் நின்றவுடன் டச்சு போலீஸாரால் பரிசோதிக்கப் படுகின்றனர். ஒரு தனியறையில் நிர்வாணமாகப் பரிசோதிக்கப்பட்டு, உயரம், பருமன் முதலியவைகளை அளவெடுத்துக் கொண்டு, கைவிரல் அடையாளங்களையும் எடுத்துக் கொள்கிறார்கள். பிறகுதான் கரையில் இறங்க முடியும். அப்படி இறங்கின பிறகு, பெயரைப் பதிவு செய்து கொள்வதோடு, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போக வேண்டுமானால் பாஸ் எடுத்துக் கொண்டு போக வேண்டும். இரவு ஒன்பதுமணிக்கு மேல் எங்கேயாவது வெளியே செல்வதென்றால் விசேஷ பாஸ் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும். கையில் விளக் கொன்று எடுத்துக் கொண்டு போக வேண்டும். தனி மனிதர்களுடைய சுதந்திரம் இங்ஙனம் கட்டுப் படுத்தப்படும் வழக்கம் ஐரோப்பாவில் நீண்டகாலமாக அநுஷ்டானத்தில் இருந்து வருகிறது. இந்த வழக்கத்தை இப்பொழுது டச்சுக்காரர்கள், சீனர்கள் விஷயத்தில் அநுஷ்டித்துக் காட்டுகிறார்கள். இந்த ஓர் உதாரணத்தைக் கொண்டு, ஐரோப்பாவில் பழைய காலத்துச் சுயேச்சாதிகாரம் எப்படி

இருந்திருக்குமென்பதை நீங்கள் ஊகித்துக் கொள்ளலாம். தனிமனிதர்களின் நடமாட்ட சுதந்திரம் இங்ஙனம் கட்டுப் படுத்தப்பட்டது போலவே, எண்ணத்தின் சுதந்திரம், மத நம்பிக்கையின் சுதந்திரம், வியாபார சுதந்திரம் முதலியவைகளும் கட்டுப் படுத்தப் பட்டன. உதாரணமாக, குறிப்பிட்ட பிரதேசத்தில் வசிக்கும் ஜனங்கள், இன்ன விதமான மதத்தைத்தான் அநுஷ்டிக்க வேண்டுமென்று கட்டுப்படுத்தப் பட்டால், அந்த ஜனங்களுடைய நிலைமை எவ்வளவு பரிதபிக்கத் தக்கதாயிருக்குமென்பதைச் சிறிது ஊகித்துப் பாருங்கள். இந்த விதமான சங்கடங்கள் பலவற்றை ஐரோப்பிய ஜனங்கள் அநுபவித்திருக்கிறார்கள். இதனால்தான், சுதந்திரப் போராட்டமென்றால் அதில் அவர்கள் உடனே துள்ளிக் குதிக்கிறார்கள். ஐரோப்பாவில் புரட்சி எண்ணங்கள், இந்த விதமாகவே ஆரம்பமாயின.

ஆனால் சீனாவில் ஜனங்கள் இந்த மாதிரியான கொடுமைகளுக்கு ஆளாகவில்லை. இதனால்தான் அவர்களுக்குச் சுதந்திரம் என்றால் இன்னதென்பதை அவர்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. சுதந்திரக் கட்டுப்பாடு அவர்களுக்கு இருக்கவில்லை. சீனர்கள் மணல் மூட்டை; ஒற்றுமையின்றி இருக்கிறார்களென்று சொன்னால் அவர்கள் எவ்வளவு சுதந்திரமுள்ளவர்களாயிருந்தார்களென்பதை நாம் நன்கு உணர்கிறோம். இந்தச் சுதந்திரம் நமக்கு மிகவும் அதிகமாயிருந்ததினாலேயே, நாம் இதைப்பற்றி அதிக கவனஞ் செலுத்தவில்லை. ஏன் அப்படி? இதை ஒரு சிறிய உதாரணத்தினால் விளக்குகிறேன். நமது அன்றாடத் தேவைகளில் மிகவும் முக்கியமானவை உணவும் உடையுமாகும். தினம் இரண்டு வேளை ஆகாரமும், சரீரத்திற்கு இரண்டு ஜதை சட்டையும் அவசியம் தேவையாயிருக்கின்றன. ஆனால் இந்த இரண்டையும் விட முக்கியமானதொன்று இருக்கிறது. ஆனால் மனிதன் இதைப்பற்றி அவ்வளவு விசேஷ சிரத்தை கொள்வதில்லை. தினம் இரண்டு வேளை ஆகாரம் கிடைக்காவிட்டால் இறந்துவிடப் போகிறோமேயென்று தான் இவன் கருதுகிறானே தவிர, மற்றொரு முக்கியமான அமிசத்தைப் பற்றி இவன் கவலை கொள்வதேயில்லை. ஆனால், உணவை விட மற்றொரு விஷயம் பதினாயிரம் மடங்கு முக்கியமானது. இதுதான் நல்ல காற்றைச் சுவாசிப்பது. இதனை நேரடியாக அறியவில்லையாதலால், இதன் முக்கியத்துவத்தை நாம் உணரவில்லை. தினத்திற்கு இரண்டு வேளை ஆகாரம் சாப்பிடாமல், ஒரு வேளை ஆகாரம் சாப்பிட்டாலும் நமதுஉயிர் போகாது. ஆனால் ஒரு நிமிடத்திற்குப் பதினாறு தடவை மூச்சு விடாவிட்டால், நமது பிராணன் போய்விடும். எனவே, ஒரு நாளைக்கு ஒரு மனிதன் 23,040 தடவை மூச்சு விடவேண்டியிருக்கிறது. அப்படி மூச்சு விட்டுக்கொண்டிருந்தால்தான் அவன் பிழைத்திருக்க முடியும். ஆகையால், உணவைக் காட்டிலும் மூச்சு விடுவதுதான் முக்கியமென்று நான் சொல்வேன். ஆனால் இந்த முக்கியத்துவத்தை நாம் அறிவதில்லை. ஏனென்றால், சுத்தமான காற்று ஏராளமாக நம்மைச் சுற்றியிருக்கிறது. நமது உழைப்

பின்றியும், பணச் செலவின்றியும் தினந்தோறும் சுத்தமான காற்றை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். சுலபமாக இது கிடைத்து விடுகிறபடியால், இதனுடைய அருமையை நாம் அறிவதில்லை. ஆனால் ஆகாரத்திற்காக உழைக்கிறோம்; பணச் செலவிடுகிறோம். இதனால் ஆகாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். இதைப்போல, சீனர்கள் அதிகமான சுதந்திரத்தைப் பெற்றிருந்தபடியால், அவர்கள் அதைப்பற்றி பெரிதாகக் கவனிக்கவில்லை. ஐரோப்பியர்களுக்கு, இந்தச் சுதந்திரம் இல்லாதபடியால், இதற்காக அவர்கள் அதிகமான போராட்டத்தை நடத்தினார்கள்.

சீனர்கள் எவ்வளவு சுதந்திரமுள்ளவர்களாக முற்காலத்தில் இருந்தார்கள் என்பதற்கு, புராதன காலத்துச் சீன சுதந்திர கீதமே சிறந்த சாட்சியாகும்.

சூரியோதயமானதும் நான் வேலை செய்கிறேன்;

சூரியாஸ்தமனமானதும் நான் ஓய்வு கொள்கிறேன்;

குடி நீருக்காகக் கிணறு தோண்டுகிறேன்;

உணவுக்காக நிலம் பயிரிடுகின்றேன்;

மன்னர் பிரானின் அதிகாரம் என்னை என்ன செய்ய முடியும்?

இந்த ஒரு பாட்டைக் கொண்டு, சீனர்கள் நூற்றாண்டுகள் கணக்காகச் சுதந்திரத்தை அநுபவித்து வந்தார்களென்பது நன்கு புலப்படும்.

ஜனநாயகமானது, சுதந்திரத்தினின்றுமே பிறப்பதால், அந்தச் சுதந்திரப் போராட்டத்தில் தலையிடுவதை முக்கிய லட்சியமாகக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது இந்த உற்சாகம் குறைந்திருக்கிறது. இதனால் சுதந்திரத்திற்கு, நல்ல அம்சங்களும் கெட்ட அம்சங்களும் உண்டு என்பது நன்கு தெரிகிறது. அந்நியர்கள், சீனர்களை ஒரு மணல் மூட்டை என்று சொன்னால் அஃது உண்மையென்பதை நாம் ஏற்றுக் கொள்வோம். ஆனால் இந்த ஓர் ஆதாரத்தை வைத்துக் கொண்டு, சீனர்களுக்குச் சுதந்திரம் என்றால் என்னவென்பது தெரியாது; அவர்களுக்கு அரசியல் உணர்ச்சியே கிடையாது என்று சொன்னால் அதை நாம் ஏற்றுக் கொள்ளவே முடியாது. ஏன் சீனா, ஒரு மணல் மூட்டை மாதிரி ஆகிவிட்டது? ஏனென்றால் தனி மனிதர்களின் சுதந்திரம் அதிகப்பட்டிருந்தபடியால். இதனால், சீனப் புரட்சிக்கும், அந்நியப் புரட்சிகளுக்கும் அடிப்படையிலேயே வித்தியாசம் உண்டு. இதனால் நாம் அநுஷ்டிக்கிற முறைகளும் வித்தியாசப்பட வேண்டும்.

ஏன் சீனாவிலே புரட்சி ஏற்பட வேண்டுமென்று சிலர் கேட்கலாம். இதற்குச் சுருக்கமாக விடை கூற வேண்டுமானால், ஐரோப்பியப் புரட்சிகள் எந்த லட்சியத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டனவோ அதற்கு நேர்மாறான லட்சியத்தையே சீனப் புரட்சி கொண்டிருக்கிறது. சீனாவில்,

தனிப்பட்ட மனிதர்களுடைய சுதந்திரம் அதிகமாயிருக்கிறபடியால், சுதந்திரத்தின் தீய அமிசங்களெல்லாம் நன்கு வெளியாகின்றன. நமது நாட்டுப் பள்ளிக்கூடங்களில் மட்டுமல்ல, நமது புரட்சிக் கட்சியில்கூட இந்தத் தீய அமிசங்கள் தலையெடுத்திருக்கின்றன. மஞ்சு அரச பரம்பரையை வீழ்த்தி விட்ட பிறகு, நாளது வரையில் நாம் நிலையான தோர் அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாமலிருப்பதற்கு இந்தச் சுதந்திரத்தின் துஷ் பிரயோகந்தான் காரணம். யுவான்-ஷி-காய் என்பவரால், நமது கட்சி தோல்வியுற்றுப் போனதற்கும் இதுதான் காரணம். குடியரசு ஆரம்பித்த இரண்டாவது வருஷம் யுவான்—ஷி—காய் என்பவர் பார்லிமெண்டின் அங்கீகாரமில்லாமலே அந்நிய நாடுகளிலிருந்து ஏராளமான கடன் வாங்கி விட்டார். பார்லிமெண்டின் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த ஸூங்—ஜியோ-ஜென் என்பவரைக் கொல்வித்தார். குடியரசுக்கு என்னென்ன விதத்தில் கெடுதல் உண்டுபண்ணலாமோ அவையெல்லாவற்றையும் உண்டுபண்ணினார். நான், எல்லா மாகாணங்களையும் புரட்சி செய்யும்படி தூண்டினேன். யுவானைத் தண்டிக்க வேண்டுமென்று சொன்னேன். ஆனால் நமது கட்சியிலுள்ள எல்லாரும் சுதந்திரத்தைப் பற்றி அதிகமாகப் பேசினார்கள். ஒற்றுமை என்பது இல்லாமலே போய்விட்டது. தென்மேற்கு மாகாணங்களில் ராணுவத்தைச் சேர்ந்த படைத் தலைவர்கள் முதல் சாதாரண போர் வீரர்கள் வரையில் எல்லாரும் தனி மனிதர்களின் சுதந்திரத்தைப் பற்றி அதிகமாகப் பேசினார்கள். யாரும் ஒற்றுமையுடன் வேலை செய்யவில்லை. தனி மனிதர்களின் சுதந்திர தத்துவமானது, மாகாணங்களுக்குப் பரவியது. ஒவ்வொரு மாகாணமும் தன்னுடைய சுதந்திரத்தை வற்புறுத்தியதே தவிர, மற்ற மாகாணங்களுடன் ஒத்துழைக்க முன் வரவில்லை. 1911ம் வருஷத்துப் புரட்சிக்குப் பிறகு, தெற்குப் பிரதேசத்திலுள்ள மாகாணங்கள் சிறிதளவு உற்சாகத்தைக் காட்டின. ஆனால் இந்த உற்சாகம் மேலெழுந்த வாரியான உற்சாகந்தான். கட்சிக்குள் பல பிளவுகள் ஏற்பட்டிருந்தன. யுவான்-ஷி-காயைப் பொறுத்தமட்டில் ஆறு படைகள் அவர் வசம் இருந்தன. இதனைக் கொண்டு அவர் புரட்சிக் கட்சியைத் தோல்வியடையச் செய்ய முடிந்தது. இதனால் என்ன தெரிகிறதென்றால், மற்றத் தேசங்களுக்குப் பொருந்துகிற ஒரு தத்துவம், சீனாவுக்குப் பொருந்தாது என்பதுதான்.

சீனா, ஏன் விடுதலை பெற வேண்டுமென்று விழைகிறது? மற்ற வல்லரசுகளின் ஆதிக்கத்தினால், சீனா, தனது தேசிய அந்தஸ்தை இழந்துவிட்டது. பர்மா, அன்னாம், கொரியா முதலிய நாடுகளைவிடத் தாழ்ந்த அந்தஸ்தே இதற்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த நாடுகள், ஏதோ ஒரு எஜமானனுக்கு கட்டுப்பட்டவையா யிருக்கின்றன. ஆனால் சீனாவோ எல்லாருக்கும் அடிமையாயிருக்கிறது. உண்மையில் நாம் பத்து எஜமானர்களுக்கு அடிமைகளா யிருக்கிறோம். நமது தேசிய சுதந்திரம், மிகவும் பயங்கரமாகக் கட்டுப் படுத்தப் பட்டிருக்கிறது. சீனாவின் சுதந்திரத்தை நாம் மீண்டும்

புதுப்பிக்க வேண்டுமானால், நாம் ஒன்றுபட்டவர்களாக வேண்டும். புரட்சிகரமான கொள்கைகள் இல்லாமற் போனால் நாம் வெற்றி பெறமுடியாது. இந்தப் புரட்சிகரமான கொள்கைகள் தான், நம்மை ஒன்று சேர்க்கும் சிமெண்ட் மாதிரி. நமது நாற்பது கோடி ஜனங்களையும் ஒன்று சேர்ப்பித்து ஜனங்களிடம் ஒற்றுமையை நாம் நாட்ட வேண்டும். அப்பொழுதுதான் சீன விடுதலை பெற்றதாகும். பிரெஞ்சுப் புரட்சியின் அடிப்படையான தத்துவங்களில் ஒன்றான 'சுதந்திரம்' என்ற வாசகத்திற்குச் சமமான நமது புரட்சியின் வாசகம் 'ஜனங்களின் தேசியம்' என்பதாகும். இந்தத் தேசியக் கொள்கைதான், நமது தேச விமோசனத்திற்கு வழி காட்டிக் கொடுப்பது. 'சமத்துவம்' என்பது, 'ஜனாதிக்க'மாகும். இந்த ஜனாதிக்கமானது, சுயேச்சாதிகாரத்தைத் தகர்த்தெறிந்து, எல்லா ஜனங்களுக்கும் சம அந்தஸ்தை அளிக்கிறது. 'சகோதரத்துவம்' என்பது 'ஜனங்களின் ஜீவனோபாயம்' என்பதற்குச் சமமாகும். இந்த ஜீவனோபாயத்துவமானது, நமது நாற்பது கோடி மக்களுக்கும், வயிறு நிறைய உணவை அளிக்கிறது. இதைப்பற்றி இன்னும் விரிவாகப் பின்னர் பேசுவோம்.

வெளி நாடுகளில் சீனர்கள்

சீனர்கள், உலகத்தின் பல பாகங்களுக்கும் சென்று குடியேறியிருக்கிறார்கள். இங்ஙனம் குடியேறியுள்ளவர்களின் விவரம் வருமாறு:—

ஹாங்காங்	—	1,057,500
இந்தோ-சைனா	—	418,000
போர்மோஸா	—	4,399,000
கொரியா	—	91,400
சையாம்	—	1,100,000
பிரிட்டிஷ் மலேயா	—	1,709,400
நெதர்லாண்ட்ஸ்	—	1,232,000
ஜப்பான்	—	23,900
ஆஸ்திரேலியா	—	13,100
நியூஜீலந்து	—	2,100
பிலிப்பைன் தீவுகள்	—	7,000
சைபீரியா	—	77,200

டாக்டர் மெக்நாத் சாஹா, D. Sc. F. R. S.

— து. கோ. கிருஷ்ணன் B. SC. (Hons)

'இயற்கையால் கொடுக்கப் பெற்ற அழகு, ஆர்வம், ஐஸ்வர்யம் முதலியவைகள் அனைத்தும் அதிகமாகப் பொலிவுற்று மோட்ச லோகம் போன்ற தேசம் உலக முற்றிலும் எது? என்று என்னைக் கேட்டால் இந்தியா வென்றே சொல்லுவேன். ஜீவியத்துவங்களைப் பற்றிய பிரச்னைகளுக்கு வழிகள் கண்டு பிடித்து மனதை உயர்வாக எத்தேசம் விருத்தி செய்கிறது? என்று என்னை வினவினால், இந்தியாவையே காட்டுவேன். கிரேக்கர்களுடையவும், ரோமர்களுடையவும் கருத்துக்களை விருத்தி செய்து வரும் நமக்கு நம் ஜீவியத்தைச் சரியாயும், ஒழுங்காயும், சம்பூரணமாயும் பண்படுத்தும்படியான இலக்கியங்கள் எத்தேசத்திலிருக்கின்றன வென்று என்னை விசாரித்தால், நான் மறுபடியும் இந்தியா வென்றே குறிப்பிடுவேன்' என்று பெரும் பண்டித மணி மாக்ஸ் முல்லர் கூறுகிறார். 'ஆசியாக் கண்டத்தின் மற்றப்பாகங்கள் மட்டு மல்ல; ஆனால் உலக முற்றுமே இந்தியாவிடமிருந்து அறிவை அடைந்திருக்கிறது' என்று அறிஞர் ஹீரன் எழுதுகிறார். இது போன்ற பெருமை வாய்ந்த கலை, ஞான, ஆத்மீக, அற இந்தியாவின் தற்கால அடிமை வாழ்க்கையிலும் சகல கலைகளிலும் அறிஞர் பலர் அவ்வப்போது அவதரித்து மேனாட்டுப் பேரறிஞர்களுடன் சரி சமான கீர்த்திப் பிரதாபங்களுடன் விளங்கி வருவதானது இந்தியாவின் கலையின் பெருமை குடத்திலிட்ட விளக்கே போலிருந்து வருவதை நன்கு உணர்த்தும். போதிய ஆதரவும், உரிமையும், ஊக்கமும் இருந்தால், இந்தியா ஆயிரக் கணக்கான அறிஞர்களை உலகுக்குண்டாக்கிக் கொடுத்து தன் பண்டைப் பெருமையை நிலை நாட்டும் என்பது திண்ணம். இத்துர் அதிர்ஷ்ட நிலைமையிலுங்கூட விஞ்ஞானப் பகுதியில் அனேக நிபுணர்களை இந்தியாவில் காண்கிறோம். அதிலும் லண்டன் 'ராயல் சொசைட்டி'யில் அங்கம் வகிக்கும் அவ்வளவு பெருமை வாய்ந்தவர்கள் இந்தியாவில் ஆறு பேர்கள். (ஸ்ரீ எஸ். ராமானுஜம், சர். J. C. போஸ், சர். C. V. ராமன் டாக்டர் சாஹா, டாக்டர் சாஹானி, டாக்டர் K. S கிருஷ்ணன்) இவர்களில் டாக்டர் மெக்நாத் சாஹா அவர்கள் வாழ்க்கைச் சரிதையைச் சுருக்கமாக ஆராய்வோம்.

பிறப்பும் படிப்பும்.

டாக்டர் சாஹா 1893ம் ஆண்டில் டாக்கா (வங்காளம்) ஜில்லாவில் சியோராடிலி என்ற குக்கிராமத்தில் பிறந்தார். இவர் தந்தை ஜகநாத் என்பவர் ஓர் சாதாரண வியாபாரி.

சாஹா தமது 10-வது பிராயம் வரை அவர் பிறந்த கிராமத்திலேயே பயின்று அதின் பிறகு சுமார் ஆறு மைல்களுக்கப்பாலுள்ள சுமூலியா என்ற கிராமத்தில் சென்று டாக்டர் ஆனந்த குமார்தாஸ் என்பவரிடம் கல்வி கற்றார். டாக்கா ஜில்லாவில் மத்தியவகுப்பில் முதன்மையாகத் தேறியதால் உபகாரச் சம்பளம் கிடைக்கப் பெற்று டாக்கா நகரில் சென்று படித்து 1909ல் பத்தாம் வகுப்புப் பரிக்ஷையில் கிழக்கு வங்காள மாணவர்களுக்கெல்லாம் முதன்மையாகவும், கணிதத்தில் மாத்திரம் எல்லா மாணவர்களுக்கும் முதன்மையாகவும் தேறினார். இதனால் மறு முறையும் உபகாரச் சம்பளம் கிடைத்தது.

1911—ல் கல்கத்தா சர்வகலாசாலையில் 'இண்டர் மீடியட்' என்னும் எப். ஏ வகுப்பில் மாகாணத்திலேயே மூன்றாவது பையனாகவும்; கணிதம், ரஸாயன சாஸ்திரங்களில் முதன்மையாகவும் தேறினார். பின்பு பிரெஸிடென்ஸி கல்லூரியில் சேர்ந்து கணித சாஸ்திரத்தில் பி. எஸ் ஸி (ஆனர்ஸ்), எம். எஸ் ஸி பரிக்ஷைகளில் முதல் வகுப்பில் இரண்டாவது பையனாகத் தேறினார். இவருடன் முதலாவதாகத் தேறியவர் பெயர் பெற்ற சத்யேந்திரநாத் போஸ் என்பவர்.

பின்னால் கீர்த்தியுடன் விளங்கும் மாணுக்கர்களை முன்னதாகவே அறிந்து ஆதரவளிப்பதில் பெரும் ஆற்றலுடையவரான சர் அசுடோஸ் முக்கர்ஜீ, சாஹாவின் அறிவைக் கண்டு வரவழைத்து 1916-ல் தமது சாஸ்திரக் கல்லூரியில் சேர்ந்து ஆராய்ச்சிகள் புரியும்படி ஆதரவு கொடுத்தார். இங்கு சாஹா, சர் தாரகாநாத் பாலிட் உபகாரச் சம்பளம் பெற்று ஆராய்ச்சியில் ஆர்வங் கொண்டார். வெகு சீக்கிரத்தில் இரண்டு புதிய ஆராய்ச்சிகள் (on "The Fundamental Law of Electric action deduced from the theory of Relativity" and on "The measure ment of Pressure of Radiation") கண்டுபிடித்து வெளியிட்டதால் கல்கத்தா சர்வகலாசாலை, சாஹாவுக்கு 1918-ல் டீ. எஸ்ஸி என்ற டாக்டர் பட்டம் அளித்தது.

அதே வருடத்தில் வானப் பிரகிருதி சாஸ்திர சம்பந்தமாகப் பல ஆராய்ச்சிகள் செய்ததினிமித்தம் பிரேம்சண்ட் ராய்சண்ட் உபகாரச் சம்பளம் (ரூ 4200) பெற்றார். 1920ல் 'உஷ்ணத்தால் வஸ்துக்களின் அணுக்கள் மின்சார மாறுதல்' களைப்பற்றிய உயர்ந்த ஆராய்ச்சிகள் செய்து இங்கிலாந்துக்கு அனுப்பி வெளியிட்டார்.

மேனாடு செல்லல்

இதே சமயத்தில் மேனாடு சென்று புத்தம் புதிய ஆராய்ச்சிகள் செய்து வர உபகாரச் சம்பளங்கள் பெற்று 1922 செப்டம்பர் மீ 19 தேதி இங்கிலாந்து புறப்பட்டுச் சென்றார். லண்டன் இம்பீரியல் சாஸ்திரக் கல்லூரியில் 1921 அக்டோபர் முதல் 1922 ஜனவரி வரை ஆராய்ச்சிகள் செய்தார். இச் சமயத்தில் வான சாஸ்திரத்தைப் பற்றிப் புதிய கோட்பாடுகளை வெளியிட்டு ஏனைய ஆராய்ச்சிகளுக்குப் புதிய மார்க்கங்களை யுண்டாக்கி சாஸ்திர நிபுணர்களை ஆச்சரியப்பட வைத்தார்.

கேம்பிரிட்ஜ் சர்வகலா சாலையில் மிகப் பிரபல சாஸ்திர நிபுணர்களான சர். ஜே. ஜே. தாம்சன், லார்டு ரதர்

போர்டு இவர்களின் ஆன்ற மதிப்பையும் பெற்ருர். டாக்டர் சாஹாவின் ஆராய்ச்சியின் சிறப்பைக் கண்டலார்டு ரதர் போர்டு சாஹாவுக்கு ஆராய்ச்சி உபகாரச் சம்பளம் அளிக்கும்படி இந்திய சர்க்காருக்குச் சிபார்சும் செய்தார்.

ஜெர்மன் தேசத்து 'நோபெல்' வெகுமதி பெற்ற புரொபஸர் நேர்ன்ஸ்ட் என்பவர் பெர்லின் நகரில் தனது ஆராய்ச்சி சாலைக்கு வந்து ஆராய்ச்சிகள் செய்யும்படி டாக்டர் சாஹாவை அழைத்தார். அதின் பிறகு பெயர் பெற்ற டாக்டர் சோம்மர்பெல்ட் என்ற மற்ருெரு நிபுணர் ம்யூனிச் நகருக்கு டாக்டர் சாஹாவை வரவழைத்து அங்கு நோபெல் சன்மானம் பெற்ற பல சாஸ்திர நிபுணர் முன் அவருடைய ஆராய்ச்சிகளை விளக்கிக் காட்டும்படி செய்தார். இவ்விதமாக தமது அரிய விடா முயற்சியால் வெகு சீக்கிரத்தில் கீழ்நாடும், மேனுடும் போற்றும் வண்ணம் சிறப்புற்று விளங்கி தாய்நாடு திரும்பினுர்.

உத்தியோகம்

இந்தியாவை யடைந்ததும் சர் அசுடோஷ் முக்கர்ஜீ அவர்களின் முயற்சியால் குமார் குருப்ரஸாத் ஜமீன்தாரின் மூலதனத்தில் கல்கத்தா சர்வ கலாசாலையில் புதியதோர் பேராசிரியர் ஸ்தானம் உண்டாக்கப்பட்டு டாக்டர் சாஹா நியமனம் பெற்ருர். ஆனுல் இந்த நியமனத்தில் சொந்தமாக ஓர் ஆராய்ச்சிசாலை ஏற்படுத்திக் கொள்ள இடந்தராமற் போயிற்று. இதே சமயத்தில் அலிகார், காசி, அலகாபாத் சர்வகலாசாலைகளில் பிரகிருதி சாஸ்திர தலைமை ஆசிரியர் பதவியை ஏற்கும்படி டாக்டர் சாஹாவை வேண்டினர். கடைசியாக டாக்டர் சாஹா அலகாபாத் சர்வ கலாசாலையில் பதவியை ஏற்கச் சம்மதித்தார். 1923ம் வருடத்திலிருந்து 1938 வரை அலகாபாத் சர்வகலாசாலையில் யாவரும் போற்றும்படி பேராசிரியர் பீடத்திலிருந்து விட்டுத் தற்சமயம் கல்கத்தா சர்வ கலாசாலையில் சர் சி. வி. இராமன் இருந்து வந்த பாலிட் புரோபசர் பதவியை ஏற்று நடத்தி வருகிருர்.

முக்கிய ஆராய்ச்சிகள்

முதலாவதாக 1917ம் வருஷத்திலிருந்து மின்சாரப் பகுதியில் ஆராய்ச்சியை ஆரம்பித்தார். 1918ல் கிரணங்கள் அமிழ்த்தும் சக்தியை அளவிடத் துணிந்தார். டாக்டர் சாஹாவுடைய முக்கிய ஆராய்ச்சி, சூரியனைப் பற்றிய தாகும். சாதாரண வெள்ளை வெளிச்சம் முக்கோணக் கண்ணுடி கொண்ட ஒளி பிரிக்கும் கருவியால் (ஸ்பெக்ட்ரோஸ் கோப்) பிரிக்கப்பட்டால் அஃது ஏழுவித நிறமாகத் தோன்றுவதோடு அந்நிறங்களின் குறுக்காக சுமார் 20,000 மெல்லிய கருப்புக் கோடுகளும் காணப்படுகின்றன. இவைகளை 'பிரான்ஹோபர்' (Fraunhofer) என்பார் கண்டு பிடித்தார். இக்கருப்புக் கோடுகள் சூரியன் பாலுள்ள நானுவித உலோக வஸ்துக்களைக் காட்டுகின்றன. பூமியில் இது வரை சுமார் 92 வித வஸ்துக்களுக்கு மேல் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. பூமி சூரியனில் ஒரு பகுதியானதால் சூரியனிலும் 92வித வஸ்துக்களுக்குக் குறையாமலிருக்க வேண்டுமல்லவா? ஆனுல் மேலே குறிப்பிட்ட

கருப்புக் கோடுகளில் சுமார் 12000 கோடுகளைக் கொண்டு 57 வஸ்துக்கள் மாத்திரம் சூரியனில் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் பூமியில் காணும் இதர வஸ்துக்கள் ஏன் சூரியனில் காண முடியவில்லை? அவைகள் எங்கே போய் ஒழிந்தன? இது வெகு காலமாக விளங்காமலிருந்து கடைசியாக டாக்டர் சாஹா தனது பேராராய்ச்சியால் விளக்கி வைத்தார்.

சூரிய கிரகணம் ஏற்படும் போது சூரியனின் மத்திய சுடர் பாகம் மறைக்கப் படுகிறது. அச்சமயம் அதனை ஒளிப் பிரிவுக்கருவி மூலம்பார்த்தால் முன்பு கருப்புக் கோடுகளாகத் தோன்றியவை யாவும் பிரகாசக் கோடுகளாகத் தோன்றும். ஆனால் இப்பொழுது அனேக பிரகாசக் கோடுகள் புதிதாகத் தோன்றுகின்றன. இப்புதிய கோடுகள் சூரியனிலுள்ள வஸ்துக்களின் தொகையை அதிகரித்துக் காட்டுகின்றன. முக்கியமாக கனமான வஸ்துக்கள்—கால்ஸியம், பேரியம் முதலியவை—கருப்புக் கோடுகளால் உணர்த்தாமல் சூரிய கிரகணத்தின்போது மாத்திரம் பிரகாசக் கோடுகளால் உணர்த்துகின்றன. மேலும், சூரியனில் இழுக்கும் சக்தி பூமியைவிட 28 பங்கு அதிகமாக யிருந்தும் கனமான வஸ்துக்கள் இழுக்கப் பட்டு சூரியனுக்குள்ளே காணமல் சூரியனுக்கு மேலே யிருப்பதாகவும், இலேசான வஸ்துக்கள் சூரியனுக்குள் இருப்பதாகவும் ஒளி பிரிக்கும் கருவி உணர்த்துவது கண்டு பலர் திகைத்து விட்டனர். இதனை டாக்டர் சாஹா 1920ல் வெகு சுலபமாக விளக்கி வைத்தார். கனமான உலோகங்கள் சூரிய கிரண சக்தியை அதிகமாகத் தங்கள் பால் சேர்த்துக் கொள்ளுவதால் இலேசாகி சூரியனின் இழுக்கும் சக்தியால் இழுப்புண்டு, கீழே வாராமல் மேலேயே யிருப்பதாகக் காண முடிகிறது என்று தகுந்த கோட்பாடுகளுடன் விளக்கிக் காட்டினார்.

சூரிய வெப்பம் அதிகரிப்பதால் ஒரு வஸ்துவின் அணுக்கள் மின்சார மயமாக மாறுபட்டுப் போக ஏற்படுகிறது. இதனால் சூரியனில் உண்மையாகவே யிருந்து வரும் சில வஸ்துக்களின் அணுக்கள் அதிக உஷ்ணத்தால் மின்சார மயமாக மாறுபடவும் வேறு சில அவ்வளவு சீக்கிரம் மாறுபடாமலும் போகின்றன. சீக்கிரமாக மாறுபடும் அணுக்களின் தோற்றம் ஒளிப் பிரிவுக் கருவியால் காண முடியாமல் போய்விடுகிறது. ஏனெனில் சீக்கிரம் மாறுபடும் அணுக்களின் வெளிச்சம் வாயு மண்டலத்தால் கிரகிக்கப்பட்டுப் போகவே நமக்கு அவைகள் தோன்றுவதில்லை. இதனால்தான் பூமியின் பால் உள்ள அனேக வித வஸ்துக்களில் சில சூரியனில் இருப்பதாக ஒளிப் பிரிவுக் கருவி உணர்த்த முடியவில்லை

டாக்டர் சாஹாவின் இவ்விளக்கத்தை அவருடைய மாணவர்களான D. S. கொத்தாரி, R. C. மஜூம்தார், S. சந்திரசேகரன் இவர்கள் விரிவாகவும், தெளிவாகவும் ஆராய்ச்சிகள் செய்து வலியுறுத்தினர். மேனாட்டில் E. A. மில்ன், R. H. பௌலர் முதலிய நிபுணர்கள் டாக்டர் சாஹாவின் கோட்பாட்டை விரிவுற ஆராய்ந்து ஆமோதித்தனர். டாக்டர் சாஹாவின் ஆராய்ச்சி மற்றும் பல கிரகங்களைப்பற்றிப் புதிய இரகசியங்கள் பலவற்றை வெளிப்படுத்தியது.

1930ல், கலந்த உப்புக்களின் நிறத் தோற்றத்தின் காரணத்தை விளக்கி வைத்தார். 1932ல் புதிய எக்ஸ்-ரே (கற்சமயம் உண்டாக்கப்படும் எக்ஸ்-ரே என்ற கண்ணுக்குப் புலனாகா வெளிச்சத்தின் அரை அலை-நீளத்தையுடைய) வெளிச்சக் கதிர் உற்பத்தியாக்குவதைப் பற்றிக் குறிகூறியிருக்கிறார். இது உண்டாக்கப்பட்டால் உலகத்திலேயே பெரும் புகழை யுண்டாக்குமென்பதில் ஐயமில்லை.

சாஸ்திர ஆராய்ச்சிக் கூடம்

டாக்டர் சாஹா தமது சொந்த ஆராய்ச்சி அபிவிருத்திக்காக ஐக்கிய மாகாண சர்க்காரிடமிருந்து வருடா வருடம் ரூ 5000 பெற்று வந்தார். 'ஐக்கிய மாகாண சாஸ்திர ஆராய்ச்சி சாலை' ஒன்றை 1930 ஜனவரி மாதம் இந்திய சாஸ்திர மகாநாடு அலகாபாத் நகரத்தில் கூடியபோது உண்டாக்கி வைத்தார். இந்த ஆராய்ச்சிக் கூடத்தில் கணிதம், பிரகிருதி, ரசாயனம், தாவரம், கட்டடம், வானம் முதலிய சாஸ்திர ஆராய்ச்சிகள் ஆராய்ந்து வெளியிடப்பட்டன. இந்த ஆராய்ச்சி சாலையின் தலைமைப் பீடத்திற்கு முதலாவதாக டாக்டர் சாஹாவே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

டாடா கம்பெனியாரின் ஆதரவில் பெங்களூரில் ஏற்பட்ட 'இந்திய சாஸ்திர சாலை'யின் அபிவிருத்தியை கண்காணிக்க வைசிராயால் டாக்டர் சாஹா ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டாக்டர் சாஹா மேற்படி சாஸ்திர சாலையின் செலவுகளை வெகுவாகக் குறைத்து நல்ல முறையில் நடைபெற வழி காட்டினார். 1933 ஏப்ரல் மாதம் சர். C. V. ராமன் இந்த சாஸ்திர சாலையின் டைரக்டர் பதவியை ஏற்றார். அவர் மீது பொறாமை கொண்ட பலரின் எதிர்ப்பின் காரணமாக 1937ல் அவர் ஸ்தானத்திற்கு டாக்டர் போஸ் என்பவர் கல்கத்தாவிலிருந்து நியமிக்கப் பட்டிருக்கிறார்.

குண குணங்கள்.

டாக்டர் சாஹா சாஸ்திர பிரமாண பாடுகளை விளக்கி வைப்பதில் சிறந்தவரா யிருப்பது போலவே அவைகளைத்தாமே பரிட்சித்து அத்தாட்சி காட்டுவதிலும் கைதேர்ந்தவர். அவர் மனதில் உதித்தது உதித்தவாறே எடுத்துரைப்பதில் பின் வாங்க மாட்டார். அதுபோலவே அவரும் தமது மாணவர்களின் அபிப்பிராயங்களை மறைக்காது எடுத்துக் கூற வற்புறுத்துவார். ஈகை, இரக்கம் இவைகளில் இணையற்றவர். எளிய வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டவர்.

டாக்டர் சாஹாவுக்கு ஜெர்மன், பிரெஞ்சு பாஷைகள் நன்றாய்த் தெரிவதால் ஐரோப்பியர் ஆராய்ந்து பல பாஷைகளில் வெளியிடும் சாஸ்திர முற்போக்குகளை அவ்வப் போது தெரிந்து கொள்ளுவார். அவருக்கு ஞாபக சக்தி அதிகம். தமது சொந்த அபிப்பிராயத்துக்கு முரணாக மற்றவர்களின் அபிப்பிராய மிருந்தாலும் அவற்றைச் சந்தோஷத்துடன் ஏற்கும் பெருந்தன்மை வாய்ந்தவர்.

அலகாபாத் சர்வ கலாசாலையின் பிரகிருதிப் பகுதிக்குத் தலைமை ஆசிரியரா யிருந்தபோது அவரின் பெரும் புகழைக் கேட்டு வருஷாந்

தரம் சுமார் 30, 40 மாணவர்கள் எம். எஸ்ஸி வகுப்புக்குப்பல மாகாணங்களிலிருந்து விண்ணப்பித்துக் கொள்ளுவதுவழக்கம். ஆனால் இடமின்மையால் ஒரு சிலரே அனுமதிக்கப் படுவார்கள். ஆராய்ச்சியில் தேர்ந்தவர்கள் போதனை முறையில் தேர்ச்சியற்றவரா யிருப்பர் என்று கூறுவது வழக்கம். ஆனால் டாக்டர் சாஹா கற்றுக் கொடுப்பதில் கைதேர்ந்தவர். இதனால் தான் பெரும்பாலும் அவருடைய மாணாக்கர்களே ஐ. சி. எஸ் பரிசைக்ஷயில் முதல் ஸ்தானம் பெறுவார்கள். ஒன்பது வருஷங்களில் சுமார் முப்பது மாணவர்கள் ஐ. சி. எஸ் பரிசைக்ஷயில் தேர்ந்தனர். டாக்டர் சாஹாவின் கீழ் பிரகிருதி சாஸ்திரத்தில் N. K. சுர், P. K. கிச்லு, R. N. கோஷ், K. மஜூம்தார், K. N.. மதூர் முதலியோர் டாக்டர் பட்டம் பெற்றனர். டாக்டர் சாஹா 'நவீன விஞ்ஞானம்' 'உஷ்ணம்' பாகம் 1 & 11 என்ற பெரிய இரு புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார். அவைகள் எல்லாச் சர்வ கலாசாலைகளிலும் உயர்தர வகுப்புப் பாட புத்தகங்களாக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

கீர்த்திகள்

1926-ல் பம்பாயில் அகில இந்திய சாஸ்திர மகாநாட்டின் பிரகிருதி— கணிதப் பகுதிக்குத் தலைவராய் டாக்டர் சாஹா தேர்ந் தெடுக்கப்பட்டார். இங்கிலாந்து தேசத்து பிரகிருதிசாலை, வான சாஸ்திரசாலை இவைகளின் உயரிய அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1927ல் 'ராயல் சொசைட்டி' யின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கும் பெருமையை அடைந்தார். இந்த சொசைட்டியில் உலகத்தில் உண்மையில் விஞ்ஞான சாஸ்திரத்தில் கீர்த்தி பெற்றவர்களே அங்கம் வகிக்கமுடியும். 1930ல் 'ஏசியாட்டிக் சங்க'த்தில் கௌரவ அங்கத்தினராகவும் தேர்ந் தெடுக்கப் பட்டார். அகில இந்தியா காங்கிரஸ், பண்டித ஜவகர்லால் அவர்களின் தலைமையில் ஏற்படுத்தியுள்ள சுதேசக் கைத் தொழில் அபிவிருத்திக் கமிட்டிக்கு டாக்டர் சாஹாவும் தேர்ந் தெடுக்கப் பட்டிருக்கிறார் என்றால் நாட்டில் அவருக்கு எவ்வளவு மதிப்பிருக்கிறதென்று கூறத் தேவையில்லை.

ஹகீம் அஜ்மல் கான்

ஜனனம் **1865**

மரணம் **1927**

—"ஒரு காங்கிரஸ் வாதி"

இந்திய தேசிய காங்கிரசின் 36வது வருஷக் கூட்டம் 1921ம் வருஷம் அஹமதாபாத்தில் ஹகீம் முகம்மது அஜ்மல்கான் அவர்களுடைய தலைமையில் கூடியது. தேசீய மனப்போக்குடைய முஸ்லீம்களில் இவருக்கு ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு. இவருடைய ஜீவிய சரித்திரத்தைச் சிறிது கவனிப்போம்.

அஜ்மல்கான், பரம்பரையான ஹகீம்களின் குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய பாட்டனாரான ஹகீம் ஷரீப் கானும்; தகப்பனாரான ஹகீம் முகம்மது கானும் பிரசித்த வைத்தியர்களாயிருந்தவர்கள். இவர்களுடைய புகழ், ஈரான் முதலிய மத்திய ஆசியப் பிரதேசங்களிலும் எகிப்திலும் பரவியிருந்தது. இவர்களிடம் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக, வெளி நாடுகளிலிருந்தும் பலர் வந்திருந்து சிகிச்சை பெற்றுப் போனார்கள். ஹகீம் ஷரீப் கானுடைய காலத்திலேயே, டில்லியில் யூனனி வைத்திய முறையில் பலருக்கும் சிட்சை சொல்லிக்கொடுக்க, ஒரு கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. இதுதான் பின்னர் அஜ்மல்கானுடைய காலத்தில் பெரியதொரு ஸ்தாபனமாக வளர்ச்சி யடைந்தது.

அஜ்மல்கான், பாலியத்தில் எந்தப் பள்ளிக்கூடத்திற்கும் சென்று படிக்கவில்லை. ஆனால் குடும்பப் பாதுகாப்பிலேயே பாரசீகம், அரபி முதலிய பாஷைகளில் பயிற்சி பெற்றார். குர்—ஆனில் நல்ல ஞானமடைந்தார். நியாயம், பௌதிகம், விஞ்ஞானம், சாஹித்யம், ஜோதிடம், கணிதம், இஸ்லாமியச் சட்டம் முதலிய விஷயங்களில் அதிக தேர்ச்சியடைந்தார். வயதான காலத்திலேயே ஆங்கில அறிவு பெற்றார். ஆனால் இந்தப் புத்தக அறிவையெல்லாம் இவர் முக்கியமாகக் கருதவில்லை. உலக யாத்திரை செய்து உலகியல் அறிவைப் பெற்றார். 1904ம் வருஷத்திலும், 1921ம் வருஷத்திலும் இவர் உலகத்தின் முக்கியமான நாடுகளையெல்லாம் சென்று பார்வையிட்டு வந்தார். முதல் யாத்திரையின்போது, மத்திய ஆசியாவி

லுள்ள முஸ்லீம் நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள புத்தகாலயங்களிலுள்ள இஸ்லாமிய கிரந்தங்களையும் வைத்திய நூல்களையும் பயின்றார். பிரசித்தி பெற்ற ஹகீம்களைச் சந்தித்து, அவர்களிடம் அநேக வைத்திய நுட்பங்களைத் தெரிந்துகொண்டார். இரண்டாவது யாத்திரையின் போது, லண்டன், பாரிஸ், பெர்லின், வியன்னா முதலிய நகரங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளையும் வைத்தியக் கல்லூரிகளையும் சென்று பார்வை யிட்டார். திப்பியா வைத்தியக் கல்லூரியை பிற்காலத்தில் ஒழுங்குபடுத்தி அமைப்பதற்கு இந்த இரண்டாவது யாத்திரை மிகவும் பிரயோஜனமுள்ளதா யிருந்தது. இந்த இரண்டாவது யாத்திரையின்போது, துருக்கியிலும், எகிப்திலும் நீண்ட காலம் தங்கினார். இதன் விளைவு என்னவென்றால், வைத்திய சாஸ்திரத்தைப்பற்றி இவர் ஒரு திறமையான நூலெழுதி வெளியிட்டார். இந்நூல் ஆசார பூர்வமான ஒரு நூலென்று அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

1918ம் வருஷம் வரையில் ஹகீம் அஜ்மல்கான், பொது வாழ்வில் அதிகமாக ஈடுபடவில்லை. ஆனால், அதற்கு முன்னரிருந்தே, முஸ்லீம் சமூக முன்னேற்ற சம்பந்தமாக அநேக தொண்டுகள் செய்து வந்தார். அலிகார் முஸ்லீம் காலேஜை ஒரு சர்வகலாசாலையாகச் செய்ய இவர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். முஸ்லீம் லீக்கின் உபதலைவராக இவர் தெரிந்தெடுக்கப்பட்டார். 1917ம் வருஷம் லட்சுமணபுரியில் ஏற்பட்ட ஹிந்து-முஸ்லீம் ஒப்பந்தத்திற்கு இவர் முக்கிய காரணஸ்தரா யிருந்தார். 1918ம் வருஷம் டெல்லியில் நடைபெற்ற காங்கிரஸுக்கு இவர் வரவேற்புக் கூட்டத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டு அரிய சேவை செய்தார். தம்முடைய காலத்தின் பெரும்பாகத்தை யூனானி திப்பி காலேஜ் வளர்ச்சியின் பொருட்டே செலவிட்டார்.

1919ம் வருஷம் ஏப்ரல் மாதம் பஞ்சாபில் நடைபெற்ற படுகொலையானது, இவரைப் பொது வாழ்விலே தீவிரமாக ஈடு படும்படி செய்தது. இந்தக் காலத்தில் டெல்லிமா நகரில், ஜனங்களின் ஆத்திரம் அத்து மீறிச் சென்று விடாதபடி பாதுகாத்துக் கொண்ட பொறுப்பு இவரையும் ஸ்வாமி சிரத்தானந்தரையும் சார்ந்ததாகும். மற்றும், ஜனங்கள் அரசாங்க நீதி ஸ்தலத்திற்கு, நீதி பரிகாரந்தேடிக் கொள்வதற்குச் செல்லாமல், பஞ்சாயத்துகளை ஏற்படுத்திக் கொண்டு அவைகளின் மூலமாக, நீண்டகால வழக்குகளெல்லாம் தீர்க்கப்பட்டன.

ஏற்கனவே, பஞ்சாப் சம்பவமானது, அதுகாறும் பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடம் பரம விசுவாசம் கொண்டிருந்தவர்களுடைய மனத்தைப் புண்படுத்தி விட்டது. இதற்குப் பிறகு, துருக்கியைப் பங்கு போட்டுக் கொள்வதன் சம்பந்தமாக ஏற்பட்ட செவர்ஸ் உடன்படிக்கையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கையெழுத்திட்டது மேற்படி புண்ணில் புளி பெய்தது போலாயிற்று. முஸ்லீம் பிரபலஸ்தர்கள் பலர், இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரமான பங்கெடுத்துக் கொண்டார்கள்; இத்தகையவர்களில் நமது அஜமல்கானும் ஒருவர்.

அலுமினியம்

—"வாதாலன்"

அலுமினியம் விலை குறைந்த ஒரு உலோகமானதா யிருப்பதனால் போலும் அதனைப் பொருட் படுத்தாது புறக்கணித்து வருகிறார்கள். எண்பது வருடங்களுக்கு முன்வரை அதனை ஒரு விலையுயர்ந்த லோகமாய்க் கருதி வந்தார்கள். ரஸாயனத்தின் முன்னேற்றம் காரணமாய் இதனால் பல காரியங்களையும் சாதிக்கலாமென்று அறிஞர்கள் கண்டுள்ளார்கள். இன்றைய யுத்தகளத்தில் கூட அது ஒரு முக்கிய ஸ்தானமடைந்திருக்கிறது. 'இது உருக்கினுடையவும் இரும்பினுடையவும் காலமல்ல. அலுமினியத்துடையதுதான்' என்று ஒரு காலத்தில் ஒரு ரசாயன சாஸ்திரி சொன்னதுண்டு.

பல்லாண்டுகளுக்கு முன், அலுமினியம், முதல் முதலாகக் கண்டு பிடிக்கப்பட்ட காலத்தில், அது விலையுயர்ந்த ஒரு உலோகமாயிருந்துவந்தது. நெப்போலியன் காலத்தில் பிரெஞ்சு மந்

1921ம் வருஷம் அஹமதாபாத்தில் 36 வது காங்கிரஸ் கூடியது. இதற்குத் தலைவராக தேசபந்து சித்தரஞ்சனதாஸர் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தார். ஆனால் காங்கிரஸ் கூடுவதற்குச் சில நாட்களுக்கு முன்னமே அவர் கைது செய்யப்பட்டு விட்டார். இதனால் ஹகீம் அஜ்மல்கான் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இந்தக் காலத்திலிருந்தே இவருக்கும் காந்தியடிகளுக்கும் அதிகமான தொடர்பு ஏற்பட்டது. சட்டமறுப்பியக்க சம்பந்தமாக காங்கிரஸினால் நியமிக்கப்பட்ட கமிட்டியில் இவர் ஓர் அங்கத்தினரா யிருந்து இந்தியா முழுவதும் சுற்றி வந்தார்.

ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமைப் பிரச்னையை எவ்விதச் சிக்கலுமின்றித் தீர்த்து வைக்க ஹகீம் அஜ்மல்கான் பெரும் பிரயாசைப் பட்டார். ஆனால் இவருடைய ஆயுட் காலத்தில் இந்தப் பிரச்னை சமரஸமாகத் தீர்ந்து போகாமலே இருந்து விட்டது.

தேக அசௌக்கியங் காரணமாக இவர் 1925ம் வருஷம் ஐரோப்பாவுக்குச் சென்றார். ஆனால் எதிர் பார்த்தபடி குணமடையவில்லை. கடைசியில் 1927ம் வருஷம் டிஸம்பர் மாதம் 28ந் தேதி தேக வியோகமானார்.

திரிமார் அவரது புதல்வனுக்கு ஒரு நல்ல வெகுமதி யளிப்பதற்கு பல பொருள்களையும் தேடிக் கடைசியில் அளித்தது அலுமினியத்தால் செய்த ஒரு பொருளாகும். அன்று ஒரு அவுன்ஸ் அலுமினியத்துக்கு பத்து பவுன் வீதம் விலை கொடுத்தே வாங்கி யுள்ளார்கள். சயாம் மன்னர்தான் முதல் முதலாகத் தன்னுடைய கைக் கடிகாரத்துக்குச் சங்கிலி செய்து கொண்டார். எண்பது வருடங்களுக்கு முன்வரை ஐரோப்பாவி லுள்ள பிரபல நகை வியாபார ஸ்தலங்களில் அலுமினிய ஆபரணங் களும் வைத்திருந்தார்களாம்.

இன்று அலுமினியப் பாத்திரங் களில்லாத வீடுகள் பார்ப்பதரிது. இது ஒவ்வொரு உலோகங்களோடு சேரும்போது ஒவ்வொரு பிரத்தியேக குணத்தை அடைகிறது. மிகவும் கனம் குறைந்த ஒரு உலோகமானதால் விமான நிர்மாணத்திற்கு அதிகமாய் உபயோகப்பட்டு வருகிறது. வெடி குண்டுகள் செய்வதற்கும் இதனை உப யோகிக்கிறார்கள். முதல் முதலாக ஸ்டீல்டாங்குகள் (சென்ற மகாயுத்தத் தில்) காட்சியளித்த காலத்தில் அவை களைத் தகர்ப்பதற்கு அக்காலங்களில் வெடி குண்டுகளிருக்கவில்லை. இன்று அலுமினியமும் க்ரோமியமும் சேர்த் துண்டாக்கும் குண்டுகளால் ஸ்டீல் டாங்குகளையும் வெகு எளிதில் தகர்க் கலாமென்று கண்டுள்ளார்கள். உருக் குக்கிருந்து வரும் பலம் மற்றொரு உலோகத்திற்குக் கிடையாதென்ற தப்பபிப் பிராயத்தை அலுமினியமும் 'ஜெர்மானிய'மும் சேர்ந்துண்டா கும் ஒரு உலோகம் இல்லாமல் செய்து விட்டது. மிகவும் கனம் குறைந்த தும் ஆனால் அதிக பல முள்ளதுமான இந்தப் புதிய உலோகத்தால் செய்யப் படும் கர்டர்கள் ஐரோப்பா வெங்கும் பிரசித்து பெற்று விட்டன. 'அலு மினிய ரத்னங்கள்' சுயம் ரத்தினங் களைக் காட்டிலும் பகட்டுள்ளவையா யுள்ளன.

சார்லஸ் ஹான் என்னு மொருவர் தான் அலுமினியம் கண்டு பிடித்தார். 'பேக்சைட்' என்னும் ஒரு விதக் களி மண்ணில் மின்சார சக்தி உப யோகப்படுத்தி இது உண்டாக்கப்படு கிறது. தற்கால உலகத்தில் அலுமினி யம் ஓர் முக்கியஸ்தானம் பெற்றுள் ளது. மோட்டார் ரேடியேற்றர், ஆகாய விமானங்களின் பக்கங்கள் ஆகியவை செய்வதற்கு இது பெரிதும் உபயோகப் பட்டு வருகிறது. ரசா யன முன்னேற்றத்தால் இதற்கு இன்னும் பல உபயோகங்கள் கண்டு பிடிக்கக் கூடுமென நம்ப இடமிருக் கிறது.

(மொழி பெயர்ப்பு)

அஹிம்சா தர்மத்தின் அந்தரங்கமென்ன?

சுவாமி பரமானந்தரைத் தழுவி யெழுதியது.

—"ஆசிரமவாசி"

போலி நாகரிகம் முதிர்ந்த நாட்டினரெல்லாரும் வெகு சீக்கிரமாக ஆயுதங்களைச் சேமிக்கின்றனர். அப்படி ஏன் செய்கிறார்களென்று அவர்களைக் கேட்டால் தற்பாதுகாப்புக்காகவும், தம் ஆதிக்கத்தைப் பெருக்குவதால் அப்பாதுகாபபை ஏற்படுத்தும் வண்ணமும் தாங்கள் அப்படிச் செய்வதாகச் சமாதானங் கூறுகின்றனர் நியாயம் எப்படி யிருப்பினும் ஆயுதப் பெருக்குத் துரிதமாக நடந்து கொண்டிருப்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும். பகலிர வென்னும் வித்தியாசமே யின்றி ஆயுதசாலைகள் வேலை செய்கின்றன. அவ்வேலை எப்போது முற்றுப் பெறு மென்று கூறுவதற்கில்லை.

தற்காப்புக்காக ஆயுதங்களையும், தளவாடங்களையுந் தடபுடலாகச் செய்யும் சத்தஞ் சந்தடிகளுக் கிடையே ஒரு மெல்லிய தொனியானது இடையறாது ஒலிக்கின்றது. 'மனிதன் கொலை செய்யா திருப்பானாக; ஒரு வனையாவது அல்லது ஒரு ஜீவப்பிராணியையாவது துன்பஞ் செய்யா திருப்பானாக' என்பதே அத்தொனியாகும். கொல்லாமை, தீங்கு செய்யாமை, பொல்லாங்கு நினையாமை என்னும் அங்கங்களை அடிப்படையாகக் கொண்டது அஹிம்சா தர்மம். உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியே இதைப் புதிதாகத் தொடங்கினாரென்பது பலர் அபிப்பிராயமாகும். உண்மையில் இக் கொள்கையானது மிகப் புராதனமானது. ஆனால் அதைத் தற்காலத்துக் கேற்றவாறு புத்துயிரளித்தது, இந்தியாவில் மட்டுமன்றி உலக மெங்கும் ஒரு புதிய சக்தியை நிலை நாட்டிய தனிப் பெரும் பெருமை அடிகளுக்கே உரியது. ஒரு மகானுபாவர் தமது சீடருக்குப் போதிக்கும் போது கூறிய மொழிகளை ஈண்டுத் தருவாம்:—'ஒரு குறட்பாவிலே கோடிக் கணக்கான சாஸ்திரங்கள் அறை கூவி மொழிந்தவற்றை உனக்குக் கூறி விடுகிறேன். 'தர்மம் என்பது பிறர் நலம் பேணுதல்; அவரை வருத்துதல் அதர்மமாகும்'.

நாம் எவ்வித உயர்ந்த நோக்கமும், நம்பிக்கையுமுடையரேனும், மக்களெல்லாருடைய உள்ளத்திலும் இக் கொள்கை படியுமென்று சொல்ல முடியாது. தற்கால மக்களின் பாரதமாகிய தினசரிப் பத்திரிகைகளைப் படிக்குந் தோறும், ஆகாய வசனியில் வருஞ் செய்திகளைச் செவியுறும் போதும், நாம் வாசிப்பதும் கேட்பதுமென்ன? அங்கு நாச வேலையைத்

துரிதமாகச் செய்யக் கூடிய துப்பாக்கி வெடி குண்டு கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது; இங்கு இயம தர்ம ராசாவின் கைங்கரியத்தை விரைவாகச் செய்வதற்கு நச்சுப்புகை கையாளப்படுகின்றது; மற்றோரிடத்தில் ஆகாய மார்க்கமாகப் பறந்து குண்டு சொரியும் விமானங்கள் செய்யப்படுகின்றன; சுரங்க வெடி காந்த வெடி முதலியன இயற்றப் படுகின்றன; என்பன போன்ற பல செய்திகள் சர்வ சாதாரணமாக வந்து கொண்டேயிருக்கின்றன.

இதற்கு நேர்மாறான செய்தி வேறொரு திக்கிலிருந்து வருகின்றது. 'மனம், மொழி, மெய்யினால் யான் ஒருவனுக்கும் பொல்லாங்கு செய்யாதிருப்பேனாக; கருணையங்கடலே! என் புன் செயல்களைப் போக்கி எனது சகோதர, சகோதரிகளுக்குப் பணி புரிவதற்குத் தகுதியுள்ளவனுக்குவாயாக'! நாச காரியங்களில் முபலும் மக்களைப் போருக் கழைக்குஞ் செய்தியல்லவா இது? இது எங்களுடைய ஒழுக்கத்தின் நிறைவையும் ஆத்மீக வீரத்தையும் சோதிப்பது போன்றல்லவா இருக்கின்றது? இக் கேள்விகளுக்குப் பதிலளிக்க ஒருவராலும் முடியாது. நம்மை ஒருவரும் நேசிக்கும் படியோ அல்லது பகைக்கும் படியோ வற்புறுத்த முடியாது. ஒவ்வொருவரும் தம் வாழ்வில் அன்பு நெறியைக் கடைப் பிடிப்பதோ அல்லது பகை நெறியைக் கைக் கொள்வதோ என்பதைத் தமக்குத் தாமே தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

மனு தர்மத்தின்படி நாங்கள் கொல்லாமையைக் கடைப் பிடித்தல் வேண்டும். அதன்படி திரும்பக் கொடுக்க முடியாத பொருளை எடுப்பது பாவமாகும். கிறிஸ்துவுக்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய புத்த பகவான் 'கொல்லாமையிற் சிறந்த தர்ம மொன்றில்லை; பகையைப் பகையினால் வெல்ல முடியாது; பகையை அன்பினால் வெல்லலாம்; இது கால நியதியற்ற நீதி; ஆகையால் பகைவரின் மத்தியில் பகை நீங்கி யிருப்போமாக' என்று கூறியுள்ளார். 'கொலை செய்யா திருப்பாயாக; உனது சந்ததியாரின் மக்கள் மீது பழி அல்லது பொல்லாங்கு நினையாதிருப்பது மட்டுமன்றி அவர்களை அயலார் போல் நேசிப்பாயாக' என்று பழைய ஏற்பாடு கூறுகின்றது, கிறிஸ்து நாதர் போதிக்கும் பொழுது, ஒருவன் உனது ஒரு கன்னத்தில் அறைந்தால் மற்றொரு கன்னத்தையும் திருப்பிக் கொடுப்பாயாக; ஒருவன் உன்னுடைய அங்கியை எடுத்தால் உனது போர்வையையும் அவனுக்குக் கொடுப்பாயாக; பகைவர்களை நேசி; உன்னைத் தூற்றுபவர்களை வாழ்த்து; உன்னைத் துன்புறுத்துபவர்களுக் கிரங்கிச் செபஞ் செய்' என்று அமுத மொழிகள் கூறியிருக்கிறார். தற்கால உலகில் காந்தியடிகள் தீபஸ்தம்பம் போன்று நிலை பெற்று நின்று அஹிம்சையை வழிபடுபவராகவும், அத்தர்மத்தின் போதகராகவும் விளங்குகின்றார்.

அஹிம்சா தர்மத்தை வழிபடுபவன் சரீரத்தினால் செய்யுந் தீங்கு மட்டுமன்றி மனதினால் விளைக்கும் கொடுமையையும் ஒழித்தல் வேண்டும். ஒரு வார்த்தையும் பேசாமல் அமைதியாய் உட்கார்ந்து கொண்டிருக்கும் போதும் பிறருக்குப் பொல்லாங்கு செய்யலாம். நாம் நினைக்குந் தீய எண்ணங்களெல்லாம், எவரைக் குறித்துச் சிந்

திக்கோமோ, அவரை யனுகித்துன் புறுக்குகின்றது. பிறருடைய குறைபாடுகளை எடுத்துப் பேசுவதால் அவர்கள் மனம் வருந்தும்படி செய்கின்றோம். அயலாருடைய வழுக்களை மேன் மேலும் கண்டிப்பதினால் அவர்களை இன்னும் பல பிழைகளைச் செய்யும்படி ஏவுகின்றோம். கடுஞ் சொல்லுங் குதர்க்க மொழியும் பெருந் தீமையை விளைவிக்கின்றன. எல்லோருக்கும் அரசு புரிய மனமாகிய ஒரு ராஜ்யம் உண்டு. கொடுங்கோல் அல்லது செங்கோல் செலுத்துவது நமது அறிவைப் பொறுத்திருக்கின்றது. நாம் எண்ணும் எண்ணங்களெல்லாம் உலக உணர்ச்சியை உயர்த்தவோ அல்லது தாழ்த்தவோ, ஆசீர்வதிக்கவோ அல்லது சபிக்கவோ, சக்தியுள்ளவை என்று உணர வேண்டும். மனிதனுக்குள் மறைந்து கிடக்குந் தெய்வத் தன்மையானது அவனுக்கு உறும் இன்னல்களை நீக்குவதற்கும் அவன் கருமங்களைச செய்வனே செய்வதற்கும், ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்தவும் உதவி புரியும்.

பல இன்னல்கள் நிறைந்த தற்கால உலகில் அஹிம்சையைக் கைக்கொள்ளலாமோ என்று சிலர் கேட்கலாம். இன்னுஞ்சிலர் அது இருடிகள் மலிந்த வேதகாலத்துக்கும், அல்லது கிறிஸ்து நாதர், புத்தபகவான் போல்வார் போதித்த காலங்களுக்குமே பொருத்தமானதென்றும், அவர்கள் காலத்துக்குப் பின், உலகம் மாறுதல் அடைந்திருக்கிறதென்றும் கூறுவர். காலபேதம் அவர்களின் போதனையின் மதிப்பைக் குறைத்திருக்கிறதென்பது பொருத்தமாகாது. ஏனெனில் அவர்கள் இப்பொழுது நம் முன் தோன்றினால் நாம் அவர்களை நோக்கி 'நீங்கள் எங்கள் காலத்தவரல்லீர்; உங்கள் போதனைகள் காலத்துக்கேற்றனவல்ல; ஆகையால் நாங்கள் உங்களை மனச் சாட்சியோடு பின்பற்றி நடக்கமுடியாது' என்று கூறலாமா?

நாங்கள் அப்படிச் சொல்ல முடியாது. ஏனெனில் எங்கள் கண்ணுக்கு முன் மலைமேலிட்ட விளக்குப் போன்று ஒருவர் அஹிம்சா மூர்த்தியாகத் திகழ்கின்றார். நாகரிக நாடுகளெல்லாம் வெகு துரிதமாகப் படைக்கலங்களையும், ஆயுதங்களையும், யுத்தத்துக்குத் தயார் செய்து கொண்டிருக்கும் வேளையில், அம்மஹானுபாவர் இந்தியாவில் ஒரு கோடியில் சிறிதளவேனுங் கலக்கமின்றி, உண்ணாவிரதம்பூண்டு தியானத்தில் அமர்ந்து, அஹிம்சாதர்மத்தைக் கைப்பற்றியொழுகுவது மட்டுமின்றி, கோடிக்கணக்கான இந்தியரையும் அதைக் கடைப்பிடித்தொழுகும்படி உற்சாகப்படுத்துகின்றார். அவரே மஹாத்மா காந்தியடிகள். மேற்றிசை ஞானியாகிய ரொமெயின் ரோலண்ட் என்னும் பெரியார் 'மஹாத்மா காந்தியையும் அவருடைய செயற் கருஞ் செயல்களையும் அறிந்து கொள்வதற்கு அவருடைய கொள்கையானது இரண்டு மாடிகள் பொருந்திய ஒரு மாளிகை போன்றது என்பதை முதலில் உணர வேண்டும். கீழிருக்கும் அஸ்திவாரம் சமயத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்த அசைக்க முடியாத அஸ்திவாரத்தின் மேல் அவருடைய சமுதாய, இராஜரீகப் போர் நிலை பெற்று நிற்கின்றது. அது எவ்வளவு சிறந்த மாளிகையாயில்லாத போதிலும், தற்போதைய நிலைமையில்

அதே சிறந்த கட்டடமாகும்' என்று கூறியிருக்கிறார்.

"அன்பு நெறியே எனது வாழ்க்கை நெறி. ஆனால் அந்த நெறியை எனது இராஜரீகக் கொள்கையின் மூலம் போதிக்க நான் விரும்பவில்லை. ஏனெனில் நான் அப்படிச் செய்யின், அது சித்தியாகாதென்பதை நான் அறிவேன். ஒரே முறையில் அன்பு நெறியை ஆண், பெண் என்னும் இருபாலாரையுங் கைக்கொள்ளப் பண்ண முயலுவது அந்நெறியின் அநுஷ்டான முறையை அறியாமையைக் காட்டும். நான் ஒரு பகற் கனவு காண்பவனல்லன்; ஒரு உயர்ந்த இலட்சியத்தைச் சீவியத்தில் கடைப்பிடித்தொழுகுபவன். இந்தியா, இம்சை வழியைக் கைக்கொள்ளுமாயின் நான் அங்கு உயிர் வாழ விரும்பேன். என்னுடைய தேசாபிமானம் சமயாபிமானத்துக்கும் கீழ்ப்படியாயுள்ளது. ஒரு குழந்தையானது தனது தாயை எப்படிப் பற்றித் தழுவுகின்றதோ, அதேபோன்று நானும் இந்தியாவைப்பற்றிக் கொண்டிருக்கிறேன். அவள் எனக்கு வேண்டிய ஆத்மீக உணவை ஊட்டுகின்றபடியால் நான் அப்படிச் செய்கின்றேன். அவள் என்னைக் கைவிடின் யான் உற்றொருவருமில்லாத அநாதையாவேன். அப்பொழுது நான் பனிப்படலம் நிறைந்த இமயமலைச் சிகரங்களுக்குப் போய் எனது இரத்தம் பாயும் இருதயத்துக்குப் பெறக்கூடிய ஆறுதலைத் தேடுவேன்" என்கிறார் காந்தியடிகள். இம்மொழிகள் மஹாத்மாவின் உயர்ந்த லட்சியத்தின் மீதுள்ள வாஞ்சையையும், தாம், எடுத்த முயற்சியை நிறைவேற்ற வேண்டுமென்னுஞ் சிரத்தையையுங் காட்டுகின்றன. இராஜரீகத் துறையில் அயல் நாட்டாரின் அநுதாபத்தைப் பெறுவதற்காக காந்தியடிகள் அஹிம்சா தர்மத்தைக் கைக்கொள்ளவில்லை. உண்மை நெறியினின்றுங் கொஞ்சமேனும் வழுவமுடியாதென்றும், உயர்ந்த ஆத்மீக நீதியோடு பொருத்தமில்லாதவை ஒரு கணப் பொழுதேனும் கவனிக்கத் தக்கனவல்லவென்றும் தெளிவாகக் காட்டுகின்றார்.

கவீந்திரனாகிய ரவீந்திர நாத் தாகூர் காந்தியடிகளைப் பற்றி 'எப்பொழுதும் மக்களின் உள்ளத்தில் உறைபவன்; அவர்கள் அன்பில் ஈடுபட்டவன்; அப்படிப் பட்டவனே மஹாத்மா. அவனை உள்ளபடி உணர்ந்தவன் அமிர்தத்துவத்தை அடைவான்' என்று சிறப்பாகப் பழைய உபநிடதங்களில் வரைய வேண்டுமெனக் கூறுகின்றார். உண்மையில் காந்தியடிகள் தன்னை ஆண்டவனுக்கு அர்ப்பணஞ் செய்து, தனது லௌகீக வாழ்வை மனித வர்க்கத்துக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குத் தியாகஞ் செய்த சந்நியாசியாவர்.

மஹாத்மா, பிறப்பில் சைன மதத்தைச் சேர்ந்தவர். புத்த சமயத்தைப் போன்று இம்மதமும் அஹிம்சையை வற்புறுத்துகின்றது. காந்தியின் சிஷ்யையான ஸ்ரீமதி சிலேட் என்னும் ஆங்கிலப் பெண்மணி அமெரிக்காவில் சில ஆண்டுகளுக்கு முன் பேசிய போது அஹிம்சையின் உட்பொருளை விளக்கி 'கொல்லாமை, தீங்கு செய்யாமை, அக்கிரமமில்லாமை என்னும்

நற்குணங்கள் மட்டுமின்றி, ஒருவனுக்கு இன்றியமையாது வேண்டப்படும் ஆதனம், பணம், உணவு, உடை முதலியவற்றுக்கு மேல் சேமிக்காமையையும் அஹிம்சை வற்புறுத்துகின்றது' எனக் கூறியுள்ளார். மிதமிஞ்சி பொருளைச் சம்பாதிப்பவன், பிறருக்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்களை அவர்கள் அடையாதவண்ணம் தடுக்கிறான் என்பது காந்திஜியின் கொள்கை. சேமிப்பும், பண்டங்களைப் பிறர் அடையாதவண்ணம் தடுப்பதும் உலகிலில்லாவிடின் வறுமைப் பிணிக்கு இடமிராது. ஏனெனில் பலருக்கும் அநுபவிப்பதற்குப் போதியவளவு பொருளிருக்கும். பசியாற்றுவதற்குப் போதிய உணவும், மானத்தைக் காப்பாற்றுவதற்குப் போதிய உடையும், தகுதியுள்ள வாசஸ்தலமும், மனோரம்மியமான சுற்றுப்புறமும் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்குமாயின் மக்கள் திருப்தியும் சாந்தமுமடைந்து, கேவலம் சோற்றுத் துருத்திக்காகமட்டும் பாடுபடுவதை ஒழித்து சிறிய நோக்கங்களில் ஈடுபடுவர். அஃதன்றியும் களவு கொலை முதலிய பாதகங்களுக்குக் காரணமாயிருக்கும் பேராசையினின்றும் நீங்குவர்.

'உன் அயலானை உன்னைப்போல் கருதி நேசிப்பாயாக!' என்பது கிறிஸ்துவின் திருவாக்கு. 'இலங்கு முயிரனைத்தும் உனது அயலான்' என்கிறார் மஹாத்மா காந்தி. 'தீங்கு செய்யாமை தீங்கு செய்வதைப் பார்க்கிலும் பன்மடங்கு சிறந்ததென்றும், மன்னிப்பு தண்டத்தைப் பார்க்கிலும் விசேஷமென்பதையும் நான் நம்புகின்றேன். தீங்கு செய்யாமையென்பது பொல்லாங்கு செய்பவனின் ஆதிக்கத்துக்குப்பயந்து தாழ்ந்து கீழ்ப்படிதலல்ல; கொடியோனுக்கு எதிராகத் தனது ஆத்மீக வலியை நிறுத்துவதாகும். வாழ்க்கையின் இயற்கை நீதிப்படி ஒழுகின் ஒருவன் ஒரு பெரிய அநீதியான ராச்சியத்தின் பலத்தையும் எதிர்த்து அதன் வீழ்ச்சிக்கோ அல்லது சீர்திருத்தத்துக்கோ அடிகோலலாம். கிரியாம்சத்தில் தீங்கு செய்யாமையென்பது உணர்ந்து வருந்துதல் ஆகும். புராதனக் கொள்கையாகிய தன்னல மறுப்பை—அதாவது வருந்தும் நெறியை—இந்தியாவில் நிலைநிறுத்த முயலுகின்றேன். இம்சை நிறைந்த உலகில் அஹிம்சையைப் பயின்ற இருடிகள் நியூட்டனைப் பார்க்கிலுஞ் சிறந்த நிபுணர்கள்; வெல்லிங்டனிலுஞ் சிறந்த வீரர்கள். ஆயுதங்களின் பிரயோசனத்தைத் தமது அநுபவத்தில் அறிந்தது மட்டுமன்றி அதன் பிரயோசன மின்மையையும் நன் குணர்ந்தவர். ஆதலினாலேதான் வாழ்வில் இளைத்து நலியும் மக்களுக்கு விமோசனம் தீங்கு செய்வதினாலன்றி அதைச் செய்யாமையினாலே தான் அடையலாமென்று கூறிப்போந்தனர்' என்பது அடிகளின் திருவாக்கு. இந்த அஹிம்சா தர்மமானது இருடிகள், முனிவர்களுக்கு மட்டுமேயன்றிச் சாதாரண மக்களுக்கும் உரியதென்பது எமது துணிபு.

'கோபத்தைப் பொறுமையினால் வெல்லலாம்; பகை, பெருமை என்பவற்றை அன்பால் வெல்லலாம்' என்று புத்தபகவான் தமது சீடருக்குக் கூறியிருக்கிறார். அந்தப் போதனையானது தற்கால உலகில்

வேறொன்றினை பெற்றிருக்கத் தவறியது மிகவும் வருந்தத்தக்க ககாரியம். நாம் அக்கொள்கையை நம்பி அதைக் கிரியாம்சத்தில் கொண்டு வர எத்தனிக்காவிடில் அது எங்ஙனம் சித்திபெறும்? கோழை, பலவீனன், முதுகெலும்பில்லாதவன் போல்வாருக்குச் சீரிய கொள்கைகள் பொருத்தமானவையல்ல. நன்னெறி, நல்லொழுக்கம், தீரம் என்னுந்துறைகளில் முயல்பவரே இந்த அஹிம்சா தர்மத்தில் சித்தியடைவர். சமயமும், ஆத்மீக ஞானமும் பலவீனர்களுக்கே உரியதென்றும், ஆக்கிரமமும் வலியும் மிருகபலம் படைத்தவருக்கே உரியதென்றும் பல முறை கூறக் கேள்விப்பட்டுள்ளோம். இவ்வகுப்பினரின் கூற்றின்படி மஹாத்மா காந்தி ஒரு சிறிய பலமற்ற மனிதன். ஆயினும் அவர் கோடிக் கணக்கான மனிதரின் எதிர்கால நலத்தைத் தன் கைவசம் வைத்திருக்கின்றார். ஏனெனில் மக்களெல்லாரும் அவரை ஒரு வாய்மையுள்ள வீரனாகவும், நம்பிக்கை வைக்கத் தகுந்தவராகவும் அவர்கள் கருதுகின்றனர்.

பகையானது தொத்து வியாதி போன்று பரவி நமது நல்லொழுக்கத்தை நாசமாக்குகின்றது. அது எப்பொழுது நமது சீரிய எண்ணங்களைத் தகர்த்தெறியப் போகின்றதென்பது நமக்குப் புலப்படுவதில்லை. ஆகையினால் அதை மனிதனுள்ளத்தில் பரவ இடங் கொடுக்கக் கூடாது. உள்ளதை உள்ளவாறு உணர்ந்து பார்க்கின், நாம் பெருமைப்படுந் தற்கால நாகரிகத்திலுள்ள பெருங் குறைகள் புலப்படும். அப்படிக் குறையொன்றுமில்லையேல் பெரிய பலம் படைத்த சாதியார் பலவீனராகிய சிறு சாதியாரை அடக்கித் தம் வசப்படுத்த மாட்டார்கள். நமது அரசாங்கமெல்லாம் சிறிய ஆத்மீகக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தால், பொறாமை பேராசை என்பவற்றுக்கு இடமிராது. இவ்வுலகம் வாஞ்சையோடு எதிர் பார்க்கும், சமாதானம், அமைதி, அச்சமின்மை சுகவாழ்வு முதலியவற்றைச் சீர் பெறச் செய்வது அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறு செய்யின் யுத்தம் என்பது பழைய சரித்திரம் போன்று மறைந்து போகும்.

சீவராசிகளுக்கு மட்டுமன்றி தாவரங்களுக்குந் தயை புரிய வேண்டும். நமக்குத் தீங்கு விளைக்காத பிற எந்தச் சீவனுக்கும் விரும்பித் தீங்கிழைக்க முடியாது ஆண்டவனுடன் நெருங்கிப் பழகும் அன்பர் பிறர் துன்பத்தைக் கூர்ந்து உணரும் ஆற்றலுள்ளவர். ஒரு நாள் ஒரு கொடியவன் எருதின் முதுகில் அடித்த பொழுது ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸர் அவ்வடித் தழும்பை தன் முதுகில் கண்டார். இன்னுமொரு முறை ஒருவன் மலர் பறிக்கும் பொழுது அவனைக் கண்டித்து ‘என் செய்கின்றனை என் அருமைக் குழந்தாய்! செடியை முறிக்கும் பொழுது நான் படும் வருத்தத்தை நீ பார்க்கவில்லையா’ என்று கூறினார். இளைஞனுக்கோ ஒன்றும் புரியவில்லை. ஏனெனில் எல்லாச் சீவராசிகளுள்ளும் இயங்குஞ் சீவ சக்தி ஒரே தெய்விக சக்திதானென்பதை ஸ்ரீ ராம கிருஷ்ணர் சொல்லும் வரை அவன் அறிந்திருக்கவில்லை. ஆத்மீக வாழ்வு உயருமாயின் நாம் அனைவரும் அங்ஙனம் பிறர் துன்பங்களை உணர்வோம்.

இயேசு கிறிஸ்து நாதர் ஜெருசலேம் நகரத்தின் உறுகதியை உணர்ந்து சகிக்காதவராய் 'ஆ ஜெருசலேமே! ஜெருசலேமே! குஞ்சுகளைத் தன் சிறகின் கீழ் அணைத்துக் காப்பாற்றுந் தாய்ப் பறவை போன்று உன்னையுங் காப்பாற்ற முயலுகின்றேன். ஆனால் அதை நீயோ வெறுக்கின்றனை' என்று அலறினார். கிறிஸ்து நாதர், புத்த பகவான், ஸ்ரீ ராம கிருஷ்ண பரஹம்ஸர் போல்வார் இன்றைய உலகைப் பார்த்து எவ்வளவு இரத்தக் கண்ணீர் சிந்துவர்? மனிதன் தன் சகோதரர்களை வேரறுப்பதற்குக் கண்டு பிடிக்குங் கொலைக் கருவிகளைக் கண்டு எவ்வளவு துயரமுறுவர்? அவர்கள் தற்சமயம் உயிரோடிருப்பின், யுத்த சன்னத்தரா யிருக்குந் தளபதிகள் அவர்கள் காலத்துக் கேற்ற 'வரல்லர் என்று தள்ளி விடுவார்கள். நமது தப்பபிப்பிராயங்களை நீக்குவதற்குத் தகுந்த அறிவாளிகள் தேவை. தற்காலத்தில் கிரியாம்சத்தில் கைக் கொள்ள முடியாத கொள்கை மற்றொரு காலத்தில் அநுபவ முறைக்குக் கொண்டு வரக் கூடியதா யிருக்கலாம்.

(தொடரும்.)

இந்தியாவிலுள்ள மதத்தினர்

ஹிந்துக்கள்	....	239,195,000
சீக்கியர்கள்	....	4,336,000
ஜைனர்கள்	....	1,252,000
பௌத்தர்கள்	....	12,787,000
பார்சிகள்	....	110,000
முகம்மதியர்கள்	....	77,678,000
கிறிஸ்தவர்கள்	....	6,297,000
பிற மதத்தினர்	....	8,280,000

மதமும் அரசாங்கமும்

—வ. அ. தியாகராஜன் M. A.

பழைய காலங்களில் மனிதன் காட்டில் மிருகங்களோடு ஒரு மிருகமாய் வசித்த போது அவனுடைய வாழ்க்கை எப்போதும் அபாயத்துக்குட் பட்டதாகவே இருந்தது. மனிதன் நாகரிகமடைய அடைய கிராமங்களிலும் பட்டணங்களிலும் வசிக்கத் தொடங்கினான். இவன் காட்டில் வசிக்கும் போது கரடிகளும் புலிகளும் இவனுடைய விரோதிகளாய் இருந்தன. கிராமங்களில் வசிக்கும் போது பாம்பும் தேளும் விரோதிகளாய் இருந்தன. பட்டணத்தில் வசிக்கும் மனிதனுக்குக் கிருமிகள் விரோதிகளாகின்றன. இவன் பெரிய ஜெந்துக்களுடன் சண்டை போட வேண்டி இராவிட்டாலும் ஈக்களுடனும், எலிகளுடனும் பைத்தியம் பிடித்த நாய்களுடனும் ஓயாமல் போர் புரிய வேண்டியிருக்கிறது. இவ்வளவு சிறிய ஜெந்துக்களுடன் போர் புரிவது தன்னுடைய கௌரவத்துக்கு இழிவானது என்று சும்மா இருந்து விட்டால் மனிதனுக்கு மரணமும் கிருமிக்கு வெற்றியும் கிடைக்கிறது. அரசாங்க விஷயங்களிலும் இது போலவே. சுதந்திரமுள்ள நாடுகள் காட்டு ஜெந்துக்களைப் போல் கர்ச்சித்து போர் புரிகின்றன. சுதந்திர மில்லாத நாடுகள் கிருமிகளால் பாதிக்கப் பட்ட மனிதனைப் போல் உள் நாட்டுச் சச்சரவினால் பாதிக்கப் பட்டு தங்களுடைய அழிவை தாங்களே தேடிக் கொள்கின்றன. மானிட சமூகத்தில் இப்படிப் பட்ட வியாதிகள் ஏன் பகிரங்கமாக உலவுகின்றனவென்பதையும், இவை நம்முடைய மனதை பாதிக்காமல் இருப்பதற்கு மருந்துண்டா என்பதையும் கவனிப்போம்.

சுதந்திரம் இழந்த நாடுகளிலேயே பொதுவாய் உள் நாட்டுச் சச்சரவுகள் அதிகமாய் இருக்கும் என்று சொல்லலாம். ரோம ஏகாதிபத்தியம் தன் கீழிருந்த தேசங்களை எப்படி ஆண்டு வந்தது என்பதைப் பற்றி எழுதும் போது டாஸிடர் என்னும் சரித்திரக்காரன் மூன்று விதிகளை நியமிக்கிறான். முதலாவது, ஜெயித்த தேசங்களிலிருக்கும் ஜனங்களை நிராயுதபாணிகளாக்கி விடுவது. பாம்பாட்டி எப்படி தான் பிடித்த பாம்பின் விஷப்பற்களைப் பிடுங்கி விடுகிறானோ அது போலவே ஒரு தேசம் மற்ற தேசத்தை ஜெயிக்குமானால் தோற்ற தேசம் மறுபடியும் தன்னுடன் சண்டை போடாமலிருக்கச் செய்வது முதல் தேவை. இரண்டாவது விதி என்னவென்றால், தோற்றுப் போன தேசங்களை தன் சுற்றுப் புறத்திலுள்ள

தேசங்களிலிருந்து பிரிப்பது. அவை எல்லா விஷயங்களுக்கும் ரோம நகரத்தையே எதிர்பார்க்கவேண்டுமே யொழிய பக்கத்திலிருக்கும் தேசங்களுடன் ஒரு விதமான உறவும் இல்லாமல் தடுத்து விட வேண்டும். எப்படி எல்லா ரஸ்தாக்களும் ரோம் நகரை நோக்கியே சென்றனவோ, அப்படியே தோற்றுப் போன தேசங்களுடைய மனதும் ரோம் நகருக்காகத் திருப்பப் பட்டது. இதன் பயனாக மனதும் மனதின் வணக்கமும் தேசத்தை ஆள்பவருக்கே அர்ப்பணம் செய்யப் பட்டது. டாஸிடர் விதித்த மூன்றாவது விதி பிரித்து ஆள்வது என்பது. ஒரு தேசத்தில் துவேஷத்தைக் கிளப்பி விட்டு, அங்கிருக்கும் ஜனங்களை சண்டைக்கும் சச்சரவுக்கும் உட்படுத்தினால், அவர்கள் எப்பொழுதும் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டு இருப்பதோடு கூட, இருதரத்தாரும் மூன்றாவது மனிதனை மத்தியஸ்தம் செய்யக் கூப்பிட வேண்டி ஆகிறது. இதன் பயனாக இரு தரத்தாரும் எதிர்க் கட்சியில் நம்பிக்கை இல்லாமல் இருப்பதுமன்றி தம்மை ஆளும் அயல் நாட்டார் நீடூழி வாழ்க என்பதில் மாத்திரம் ஒரு மனதுடன் பிரார்த்திக்கிறார்கள். இந்த பகிரங்கமான ராஜ தந்திர முறைகளை எவ்வளவு தூரம் ரோமர்களும் மற்றவர்களும் கையாண்டு வந்தனர் என்பதைப் பற்றியாவது, அதன் பலன் என்ன வென்பதைப் பற்றியாவது இப்பொழுது கவனிக்க வேண்டியது அவசியமில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் கூறலாம். பிறர் ஆளும் தேசங்களில் உள் நாட்டுச் சச்சரவுகள் எப்பொழுதுமே இருக்கும் என்றாலும், இந்தச் சச்சரவுகள் நமது தேசத்தில் பிறரால் இறக்குமதி செய்யப்பட்டன என்று சொல்ல முடியாது. ஆனால் எப்படி சூரிய வெளிச்சத்தில் கிருமிகள் செத்துப் போகின்றனவோ அப்படியே சுதந்திரத்தின் வெப்பத்தில் உள் நாட்டுச் சச்சரவு என்னும் கிருமி செத்துப் போகின்றது. ஆனால் எப்படி இருட்டும் அழுக்கும் இருக்கும் இடங்களில் கிருமிகள் நிமிஷத்துக்கு நிமிஷம் தற் பிரிவினால் ஏராளமாக வளர்கின்றனவோ அது போலவே சமூகத்திலும் ஏற்படுகிறது.

இந்தவிதமான பொது யோசனைகளிலிருந்து சரித்திர விஷயமான சில புள்ளி விவரங்களைக் கவனிப்போம். உள்நாட்டுச் சச்சரவு என்பது நமது தேசத்துக்கு மட்டும் பொருந்தியதல்ல; நன்மையும் தீமையும் மனிதத் தன்மையைப் பற்றியவையே யொழிய தேசங்களைப் பற்றியவை அல்ல. அதனால் மதவிஷயமான சச்சரவுகள் ஐரோப்பா தேசத்திலும் இருந்திருக்கின்றன. இதிலிருந்து ஐரோப்பா எப்படி தன்னை காப்பாற்றிக் கொண்டது என்பதை முதலில் கவனிப்போம். இதை ஒரு உதாரணத்தினால் விளக்குவோம். ஒரு மனிதனுக்கு அஜீரணமாய் இருந்தால், தன்னுடைய ஆகாரத்தை ஜீரணித்துக் கொள்வதற்கு மருந்து சாப்பிடலாம். அல்லது அஜீரணம் தட்டி இருக்கும் ஆகாரத்தை வாந்தி செய்யப் பிரயத்தனப் படலாம். அது போலவே ஒரு சமூகம் தன்னில் குடியேறி இருக்கும் ஜனங்களைத் தன்னுடன் ஒன்று படுத்த முயலலாம். அப்படி அவர்களை ஒன்று படுத்துவது அசாத்தியமாய் இருந்தால் அவர்களை

வெளியேற்ற முயலலாம். இவ்விரண்டு முறைகளும் ஐரோப்பாவில் கையாளப் பட்டு வந்திருக் கின்றன. ஜெர்மனியிலிருந்து யூதர்களை வெளியேற்றியது நமக்கெல்லாம் தெரிந்த விஷயமே. இது போலவே க்ரீஸ் தேசத்துக்கும் துருக்கிக்கும் அடிக்கடி சண்டைகள் உண்டான போது யார் ஜெயித்தாலும், தோற்றுப் போன மதத்தினர் ஜெயித்த தேசத்திலிருந்து விரட்டப் பட்டார்கள். இது போலவே துருக்கி அர்மீனியா தேசத்தை ஜெயித்தபோது அங்கிருந்த கிறிஸ்தவர்கள் விரட்டப் பட்டார்கள். இது ஒன்றும் புதிதல்ல. சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கும் போது சிலுவைக்கும் பிறைச்சந்திரனுக்கும், எப்படி கீரிப்பிள்ளைக்கும் பாம்புக்கும் காரணம் இல்லாமலே துவேஷம் நேரிடுகிறதோ, அது போலவே காரணம் இல்லாமலே பரம்பரையாகவே சண்டை ஏற்பட்டு வந்திருக்கிறது. முன்னொருகாலத்தில் ஸ்பெயின், ஸிஸிலி, ஐரோப்பாவில் வியன்னா நகரம்வரை, தெற்கு ருஷியா எல்லாம் முகமதிய நாடுகளாய் இருந்தன. இப்போது இவையெல்லாம் கிறிஸ்தவ நாடாய் இருக்கின்றன. இந்த மாறுட்டம் எப்படி நேர்ந்தது என்று கேட்கலாம். ஸ்பெயின் தேசத்திலிருந்து தோற்றுப் போன முகமதியர்கள் வட ஆப்பிரிக்காவிலுள்ள மொராக்கோ என்னும் தேசத்துக்கு விரட்டப்பட்டபோது, அங்கே மதவிஷயங்களை விசாரிக்க போப் ஆண்டவருடைய பார்வையில் தெய்விக நீதிஸ்தலம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்த நீதிஸ்தலத்தின்கீழ் யார் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் என்று சந்தேகிக்கப் பட்டார்களோ அவர்களெல்லோரும் கொண்டு வரப் பட்டார்கள். கோர்ட்டில் விசாரணை நடக்கும். அவர்கள் தங்களுடைய மதத்தை ஒப்புக் கொள்ளுமாறு பல விதமான கடின தண்டனைக்குள்ளாவார்கள். தம்முடைய மதத்தை ஒப்புக் கொள்ளுமாறு இவர்களை ஒரு மேஜையின் மேல் படுக்க வைத்து கையையும் காலையும்கட்டிவிடுவார்கள். பிறகு மேஜையின் கீழுள்ள ஒரு முறுக்கு ஆணியைத் திருப்புவார்கள். மேஜையின் இரண்டு பாகங்களும் அகல ஆரம்பிக்கும். மேலே இருக்கும் மனிதனுக்கு ஒவ்வொரு கணுவிலும் பொறுக்க முடியாத நோய் உண்டாகும். இதற்கும் ஒத்துக் கொள்ளா விட்டால் விரலில் ஒரு சிறிய யந்திரத்தை மாட்டுவார்கள். அதன் உள்ளே ஒரு சிறிய கத்தியும் மேலே ஒரு முறுக் காணியும் இருக்கும். மேலே ஆணியை திருப்பத் திருப்ப உள்ளிருக்கும் கருவி விரலுக்கும் நகத்துக்கும் இடையில் வெட்ட ஆரம்பிக்கும். இன்னும் பலவிதமான தண்டனைகள். கடைசியில் இவற்றைத் தடுக்க முடியாமல், தான் ஒரு யூதன் அல்லது வேறு மதத்தினன் என்று ஒப்புக் கொண்டால் அவன் மேல் கருணைக் கடலாயும் மனிதரை மரணத்திலிருந்து ரக்ஷிக்கவும் வந்த ஏசுவின் பக்தர்களினுடைய களிப்புக்காக, தாரைக் கொட்டி, ஊர்வலம் செய்வித்து தெருக் கோடிகளில் இரவில் உயிருடன் கொளுத்தி விடுவார்கள். இவ்வளவு அபிமானத்தை கிறிஸ்தவர்கள் வெளி மதத்தாருக்கு மட்டும் காட்டினதில்லை. தம்மதத்திலுண்டான சச்சரவுக்களும் இதே விதமாகத் தீர்க்கப்பட்டன. முதலிலிருந்தே கிறிஸ்தவ மதம், ரோமா

புரியில், இறந்தவரைப் புதைக்கும் குகைகளில் வளர்ந்தது. அப்பொழுதிருந்தே கடவுளின் பெருமைக்காக பிறரை வற்புறுத்துவதிலும் பிறரால் வற்புறுத்தப்படுவதிலும் இந்த மதத்தினருக்கு ஒரு பெருமையும் சந்தோஷமும் இருந்ததாகத் தோன்றுகிறது. "கிறிஸ்தவ மதம் அன்பின் மதமாய் இருக்கலாம். ஆனால் இதைத் தொழுபவர்கள் அளவில்லாமல் ஒருவரையொருவர் துவேஷிக்கிறார்கள்." என்று ஒரு ரோம சரித்திரக்காரன் எழுதுகிறான். ஐரோப்பாவில் மத விஷயங்களில் மாறுதல்கள் ஏற்பட்ட போது துவேஷம் மறுபடியும் கிளம்பிற்று. ஸ்பெயின் தேசத்துக் குடியேற்ற நாடுகளிலிருந்து வந்த பொருளைக் கொள்ளையடிக்க இங்கிலீஷ் 'கடல் நாய்கள்' என்று சொல்லப்பட்ட மாலுமிகள் ஸ்பெயின் தேசத்தாரிடம் அகப்பட்டுக் கொண்டால் இரண்டு செத்துப் போன நாய்களுக்கிடையில் கப்பல் கம்பத்திலிருந்து தலை கீழாகத் தொங்க விடப்பட்டார்கள். ஸ்பெயின் தேசத்தார் எங்கே போனாலும் அவர்களுடனே மதத் துவேஷமும் சென்றது. தென் அமெரிக்காவிலும் இந்திய கடற்கரை ஓரத்திலும் இவர்கள் கடவுள் பெயரால் செய்த தீமைக்கு அளவேயில்லை.

இந்திய கடற்கரையில் போர்த்துகல் தேசத்தார்கள் எப்படி வந்தார்கள்; என்ன செய்தார்கள் என்பதைக் கவனிப்போம். வாஸ்கோடிகாமா என்பவன் ஆப்பிரிக்காவிலுள்ள மொம்பாசா என்னும் பட்டணத்துக்கு வந்தான். அங்கே அராபியர் இந்தியாவுடன் வியாபாரம் செய்வதாகத் தெரிய வந்தது. உடனே சில அராபிய மாலுமிகளைப் பிடித்து அவர்களைக் கொடுமையாய் இம்சித்து இந்தியாவுக்குத் தன் கப்பலைச் செலுத்துமாறு செய்தான். மலையாளத்துக்கு வந்து சேர்ந்தான். ஜாமொரின் ராஜாவுடன், வியாபாரி போல் நடித்துக் கொண்டான். இரண்டாவது தரம் இவன் கள்ளிக் கோட்டை வந்த போது என்ன செய்தான்? மெக்காவிலிருந்து ஒரு யாத்திரைக் கப்பல் வந்து கொண்டு இருந்தது. இந்தக் கப்பலைப் பிடித்தான். இதிலிருப்பவர்கள் தம்முடைய பொருள்களைக்கொடுத்து விட்டால் விட்டு விடுவதாகச் சொன்னான். பிறகு அவர்களெல்லாரும் கிறிஸ்தவராக வேண்டும் என்றான். அவர்கள் மறுத்துவிட்டார்கள். அவர்களெல்லாரும் தூக்குப் போடப்பட்டார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் மதத்தின் பெயரால் மனிதன் கடவுளை வணங்குகிறானா, அல்லது தன்னிடமிருக்கும் மிருகத்தை வணங்குகிறானா என்று தெரியவில்லை என்பதே தான்.

மதத்தின் பெயரால் ஏன் இவ்வளவு கொடுமைகள் நடக்க வேண்டும் என்று கேட்கலாம். மதம் ஒரு சாக்கு. நிஜமான காரணங்கள் வேறே இருக்கின்றன. மதம் ஒரு விதமான அபினி. இது பொது ஜனங்களின் மனதைக் கவர்ந்து, மூடத்தனமாய், தம்மை ஆள்பவர் கையில் அகப்பட்டுக் கொள்ள ஒரு வழி. ஒரு மனிதன் ஆயிரக் கணக்கான மனிதர்களை அடக்கி ஆள வேண்டுமானால், எத்தனையோ பொய்கள் சொல்ல வேண்டியதாகிறது. தன் கீழிருப்பவர்கள் தம்முடைய முழு உயரத்

துக்கு வளர வொட்டாமல் செய்ய வேண்டியதாகிறது. பக்தியை உண்டு பண்ண வேண்டியதாகிறது. அரசன் தான் தெய்வத்தின் அமிசம் அல்ல என்றும் பிற மனிதரைப் போல் தானும் ஒரு எளிய மனிதன் என்றும் சொல்லிக் கொண்டால் யார் இவனை மதிப்பார்கள்? எப்படி அரசனைச் சுற்றி இருக்கும் பரிவாரங்களும், குதிரைப் படைகளும், யானைகளும் கண்ணைக் கவர்ந்து வணக்கத்தை உண்டு பண்ணுகின்றனவோ அப்படியே மதமும் மனதின் பணிந்து நிற்கும் தன்மையை அதிகரிக்கிறது. 'கடவுள் உண்டு. நீங்கள் உங்கள் வாழ்க்கையில் யாருக்கும் ஒரு விதமான தொந்தரவும் தராமல் எல்லோருக்கும் பணிந்து இருப்பீரானால் கடவுள் உங்களுக்கு சுவர்க்கத்தைக் கொடுப்பார்' என்று அரசாங்கம் நல்ல புத்தியைக் கற்பிக்கிறது. இதன் பொருள் என்ன? உலகத்திலுள்ள நல்ல வஸ்துக்களையெல்லாம் என்னிடம் கொடுத்துவிட்டு நீ அடிமையாய் இரு. சுவர்க்கத்தில் உனக்கு பலன் கிடைக்கும் என்பதே. அரசாங்கம், கடவுளிடமிருந்து வட்டியுடன் சுவர்க்கத்தில் வாங்கிக் கொள் என்று ஒருபாண்டு எழுதிக்கொடுத்து விடுகிறது. இதன்பயனுகமனிதர்கள் தங்களுடைய கஷ்டங்களிலிருந்து விடுதலை செய்துகொள்ள நியாயமான வழி தேடாமல் எல்லாம் தம்முடைய விதி என்று சும்மாவிருக்க நேரிடுகிறது. இப்படி மூடத்தனமாய் உலகத்தின் நல்ல பொருள்களைக் கொடுத்து விட்டு இருப்பவர்கள் கடவுளிடம் போனால், கடவுள் என்ன சொல்லலாம்? கடவுள் பின் வருமாறு சொல்லலாம்:— 'மூடர்களா! நான் உங்களை என்னுடைய சுவர்க்கத்தில் ஒன்றுகிய பூமிக்கு அனுப்பினேன். அங்கே நீங்கள் சுகப்படாமல் ஏமாந்து போய் திரும்பி வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு இங்கே சுவர்க்கம் ஏது' என்று விரட்டி விடலாம். நாம் கடவுளின் வலது கைப்பக்கத்தில் உடகார்ந்து கொண்டு இவற்றையெல்லாம் கண்டு பிடித்து விட்டோம் என்று சொல்லவில்லை. எல்லாருக்கும் தெரிந்த விஷயத்தையே சொல்லுகிறோம். மேனுடுகளில் ஜனங்களுக்கு அரசாங்கத்தில் உரிமை அதிகமாக அதிகமாக மதத்தில் பற்று குறைந்தற்கு இதுவே காரணம்.

இந்த விஷயத்தை வேறொரு விதமாய் கவனிப்போம். மனோ தத்துவ சாஸ்திரத்தை அறிந்தவர்கள் நமது மனதில் நான்கு அடுக்குகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். முதலாவது நமக் கெதிரே இருக்கும் வஸ்துக்களை நமது மனதில் பதிக்கும் உருவம். இவை சமுத்திரத்து அலைகளைப் போல் மேலேயே இருக்கின்றன. இதன் கீழ் நாம் படித்ததும், கண்டதும் கேட்டதும் இருக்கின்றன. இவை தேவையான போது நமது மனதுக்கு முன்னே வருகிறது, இதன் கீழே மூன்றுவதும் நான்காவது அடுக்குகளும் இருக்கின்றன. இங்கே நாம் மறந்து போனதும், எதை வேண்டாம் என்று மனதிலிருந்து தள்ளி விடுகிறோமோ, அவைகளெல்லாம் போய் அடைகின்றன. இந்த வேண்டாத எண்ணங்களும் விருப்பங்களும் விழித்திருக்கும் காலத்தில் வருவதில்லை. தூக்கத்தில் கனவு மூலமாய் வருகின்றன. இப்படி அடைபட்ட விருப்பங்கள் கனவு மூலமாய் வெளியேற்றப்பட்டு

மனதிற்கு அமைதி மறுபடியும் ஏற்படுகிறது. எப்படி தனி மனிதனுடைய வாழ்வில் வேண்டாத விருப்பங்கள் அழுத்தப்பட்டு முடிகட்டிக் கொள்கின்றனவோ அப்படியே ஒரு சமூக வாழ்க்கையில் எத்தனையோ விருப்பங்கள் அடைபட்டு விடுகின்றன. ஒரு சமூகத்தின் தலைவன் இந்த அடைபட்ட விருப்பங்களை எந்த வழியில் திருப்பி விட்டால் நல்லது என்று யோசிக்கிறான். எப்படி ரயில் வண்டியை ஓட்டுபவன், இயந்திரத்தில் அடைபட்டு இருக்கும் நீராவியை ரயிலை ஓட்டுவதற்கு உபயோகிக்கிறானோ அப்படியே சமூகத்தின் தலைவனும் ஜனங்களின் அடைக்கப்பட்ட விருப்பங்களையே உபயோகித்து அவற்றின் மூலமாய் தான் முன்னுக்கு வருகிறான். ஆனால் எப்படி ரயில் இஞ்சினில் நீராவி அதிகமாய்விட்டால், ரயிலை ஓட்டுபவன் அதிகமாயிருக்கும் நீராவியை இஞ்சின் உடைந்துபோகாமல் இருக்கும்பொருட்டு வெளியே விட்டுவிடுகிறானோ அதுபோலவே அரசாங்க விஷயங்களிலும் தலைவன் என்பவன் தன்னால் அடக்க முடியாத சக்தியை அயல் நாட்டாருடன் சண்டை போடுவதற்காகத் திருப்பி விடுகிறான். மனித சமூகத்திலும் தனி மனிதனில் இருப்பதை போலவே இரண்டு சக்திகள் இருக்கின்றன. ஒன்று தன் வணக்கம். மற்றொன்று பிறரை அடக்கியாள விருப்பம். தலைவனாயிருப்பவன், ஜனங்கள் தலை வணங்கி தன் முன் நிற்பதற்கு உதவியான வசதிகளை யெல்லாம் உபயோகித்துக் கொள்கிறான். ஜனங்கள், பிறரை அடக்கியாள வேண்டும் என்னும் விருப்பத்துக்குத் தகுந்த வழி காட்டா விட்டால், புகை வண்டியில் எப்படி ஆவிக்கு வெளியே போக வழியில்லா விட்டால் கேடு நேரிடுமோ, அப்படியே அரசாங்க விஷயத்திலும் கேடு நேரிடும். மனிதனுக்கும் நாய்க்கும் வேட்டையாடுவது என்றால் முதலிலிருந்தே விருப்பம் அதிகமல்லவா? சமூகத்தில் இருப்பவர்களுக்குள்ளே பிரிவு ஏற்பட்டால் சமூகம் தற்பிரிவினால் அழிந்து போகும். ஆனால் அரசன் தன் கீழிருப்பவர்களை 'சூ' என்று வெளிதேசத்தாருடன் சண்டை போடா விட்டால், உள் நாட்டில் கலகம் ஏற்படுவதற்கு அவகாசம் இல்லாமல் போகிறது. இதுபோலவே பிறரால் ஆளப்படும் நாடுகளில் பிறரை அடக்கியாள விருப்பம் வெளி வருவதற்கு வழியில்லாமல் இருப்பதால் இந்த விருப்பம் உள் நாட்டுச் சச்சரவுகளின் மூலமாய் வெளியே கிளம்புகிறது. ஒரு மனிதனுடைய உடம்பில் இருக்கும் வியாதிகள் எப்படி சரீரத்தின் மேல் கிளம்புகின்றனவோ அப்படியே சமூகத்திலுள்ள வியாதிகள் சச்சரவின் மூலமாய் வெளி வருகின்றன.

அரசாங்கத்துக்கும் மதத்துக்கும் என்ன ஒற்றுமை என்று கேட்கலாம். மதம் கடவுளின் முன் வணங்கி நிற்கும் தன்மையை அதிகரிக்கிறது. அரசாங்கம் மதத்தின் ஒத்தாசைக்கு வருவதைப் போல் வந்து, மனிதனுடைய வணங்கி நிற்கும் தன்மையை தனக்காக இழுத்துக்கொள்கிறது; மதத் துவேஷத்தைக் கிளப்பிவிட்டு, எண்ணெய் பாய்ப்பிய நீரில் மீன் பிடிப்பதைப் போல் இதனால் உண்டாகும் லாபங்களை

யெல்லாம் அடைய விரும்புகிறது. ஆனால் மதம் கெட்டதாவென்று கேட்கலாம். மதத்துக்கும் மதத்துக்கும் வித்தியாசம் உண்டு. ஒரு ஒற்றன் கபட சன்யாசி வேஷம் போட்டால், சன்யாசித்தனமே கெட்டது என்று சொல்ல முடியாது. மற்றொரு விஷயத்தையும் இங்கே கவனிக்கலாம். மதத்துக்கும் மது பானத்துக்கும் ஒரு சிலேடை உண்டு-கொஞ்சம் ஊக்கம்; அதிகம் மயக்கம். மதத்தைக் கெடுதி என்று நாம் சொல்ல வரவில்லை. ஆனால் அது ஒரு விதமான அபினிபோல் வழங்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ள வேண்டியதே.

கடைசியில் ஒரு வார்த்தை. மதத்துவேஷத்தினால் உண்டாகும் சச்சரவுகள் எப்போது முடியும் என்று கேட்கலாம். இயற்கை, பழைய கேள்விகளுக்கு பதில் பழையவற்றை அளிப்பதில்லை. புதிய கேள்விகளைக் கிளப்பிவிட்டு பதில் எழுதாத கடிதங்களைப்போல் பின்னுக்குத் தள்ளி விடுகிறது. நாளாவட்டத்தில் புதிய சச்சரவுகள் ஏற்படலாம். பொருளாதார விஷயங்களில் பணம் உள்ளவர்களுக்கும் பணம் இல்லாதவர்களுக்கும் உள்ள வித்தியாசமே சச்சரவுகளுக்குக் காரணமாகலாம். அப்போது மதத்தினால் உண்டாகும் சச்சரவுகள் மறக்கப்படும். நமது கண்ணுக் கெட்டினமட்டில் ஒரு மலைக்குப் பின்னால் இன்னொரு மலை தோன்றுகிறதேயொழிய, மைதானம் மட்டும் புலப்படவில்லை.

சுதேச சமஸ்தானங்களைத் தவிர்த்த பிரிட்டிஷ் இந்தியாவில் ஜனன மரண விகிதங்கள்

வருஷம்		ஜனனம்	மரணம்
1918	....	8,430,560	14,895,801
1919	....	7,212,415	8,554,178
1920	....	7,864,232	7,355,654
1921	....	7,774,776	7,385,112
1922	....	7,688,959	5,8[illegible]0,092
1923	....	8,4[illegible]6,085	6,036,931
1924	....	8,317,403	6,879,286
1925	....	8,125,408	5,967,918
1926	....	8,395,679	6,460,610
1927	....	8,516,706	6,009,729
1928	....	8,882,573	6,180,114
1929	....	8,565,341	6,267,391
1930	....	8,690,714	6,483,449
1931	....	9,135,890	6,515,099
1932	....	9,054,506	5,805,666
1933	....	9,678,876	6,096,787
1934	....	9,288,897	6,856,244
1935	....	9,698,794	6,578,711
1936	....	9,981,143	6,375,731



பேஸிஸ்ட் ஜடாமுனி

எழுதியவர்: ஸ்ரீ சொ. விருத்தாசலம் பி. ஏ; வெளியிட்டோர்; நவயுகப் பிரசுராலயம், ஜார்ஜ் டவுன், மதராஸ்; டபிள் கிரவுன் அளவு 1 x 16; 248 பக்கங்கள்; விலை ரூ. 1-8-0.

ஸ்ரீ சொ. விருத்தாசலம், முஸோலினியை ஒரு ஜடாமுனியாகச் சிருஷ்டிக்க முயல்கிறார்; ஆனால் அவன் மனிதனாகவே உருக்கொண்டு விடுகிறான். இதுதான் இந்தப் புத்தகத்தைப் படிப்பதாலேற்படுகிற சுவாரஸ்யம். முஸோலினிக்கு 'ஜடாமுனி' என்ற அடைமொழி எவ்வளவு தூரம் பொருந்தும் என்பது நமக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. ஏனென்றால் அவனுக்கு ஜடையுமில்லை; தாடி மீசையு மில்லை. உண்மையில் அவனுக்கு தாடி மீசை வைத்துக்கொண்டிருப்பவர்களைக் கண்டால் வெறுப்புக் கூட உண்டு. 'ஆழ்ந்த ஹம்பக்குகளை மறைக்கும் முகமூடி' என்று தாடிக்கு வியாக்கியானஞ் செய்வான்.

முஸோலினி, ஹிட்லர், ஸ்டாலின் முதலிய சர்வாதிகாரிகளை அந்தந்த நாட்டு ஜனங்கள் தெய்வமாகக்கொண்டாடுகிறார்கள்; மற்ற நாட்டார் அவர்களை ராட்சதர்களாகக் கருதுகிறார்கள். ஆனால் நடு நிலைமையோடு ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு அவர்கள் தெய்வமுமில்லை; ராட்சதர்களுமில்லை; மனிதர்கள் என்பது நன்றாகப் புலப்படும். இந்த நூலாசிரியர், புத்தகங்கள் எழுதுகிற போதாவது, பிரசார முறையைக் கைவிட்டு ஆராய்ச்சி முறையில் இறங்க வேண்டுமென்பது நமது கோரிக்கை.

முஸோலினி, அவ்வப்பொழுது செய்த பிரசங்கங்களிலிருந்து சில பாகங்களையும், மாஜிஸ்ட்ரேட்டின் முன்னர் கொடுத்த வாக்குமூலம் (பக். 73-74) முதலியவைகளையும், நூலின் இடையிடையே சந்தர்ப்பப் பொருத்தமாக ஆசிரியர் எடுத்துக் கொடுத்திருக்கிறார். முஸோலினியின் தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் இவை நன்றாக எடுத்துக் காட்டுகின்றன.

நூல்களில் கண்ணியமான பதப் பிரயோகங்களும் உவமைகளும் இருக்க வேண்டுமென்பது நமது பெரு விருப்பம். ஆனால் இந்த நூலை பொறுத்தமட்டில் நமது விருப்பம்

பூர்த்தி யடையவில்லை. சில உதாரணங்கள்:—

வயது, ஐம்பதுக்கு மேலாகியும் மார்க்கண்ட வாலிபம்—சிறிது அசுர மோஸ்தரில். பக். 3

வாலிபத்திலேயே பெண்கள் என்றால் அர்ஜுனை ரசனை. இப்பொழுது ரொம்ப ஜாக்கிரதையாக வாழ்கிறான். பக். 4

பாரத தேசத்திலே பிறந்த நாம் அர்ஜுனனுக்கு இந்த மதிப்புத்தானு கொடுத் திருக்கிறோம்! அட கடவுளே!

கார்ல் மார்க்ஸின் பொருளாதாரக் கொள்கைகளை வயிற்றுக்குள் செல்லும் ஒவ்வொரு உருண்டையும் தெளிவாக்குகிறது. பக். 4

கார்ல் மார்க்ஸின் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் முஸோலினியின் வயிற்றுப் பசிக்கும் என்ன சம்பந்தமோ?

பிரெஞ்சுச் சூழ்ச்சி, ஆளைத் திடீரென்று கவிழ்க்கும் 'கேப்மாறி' வேலை. பக். 22
அவன் நெருப்புக் கக்குவதுபோல வெளுத்து வாங்குவான். பக். 69

போன மச்சான். 4-வது அதிகாரத்தின் தலைப்பு.

இனி நாம் செய்ய வேண்டுவது யாது?

மூல நூலாசிரியர்: லியோ டால்ஸ்டாய்; தமிழில் மொழிபெயர்த்தவர்: ஸ்ரீ ரா. விசுவநாதன்; வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், 52, அரண்மனைக்காரத் தெரு, சென்னை; டபிள் கிரவுன் அளவு 1x16; 211 பக்கங்கள். விலை: 12 அணா.

வெகு காலமாக அடிமைகளாய வாழ்ந்து வருபவர்கள் அதன் பயனாகத் தங்கள் அடிமைத் தனத்தை உணருவதில்லை; சுதந்திரத்தை நினைப்பதுமில்லை. அடிமை வாழ்வின் இரண்டொரு இன்னல்கள் நீங்குவதையே பெரிய பாக்கியமாகக் கருதுகிறார்கள். பக். 83

டால்ஸ்டாயின் இந்தச் சிறிய வாசகம், இந்தியாவின் தற்போதைய நிலைமைக்கு எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது!

ஜனங்களின் சிந்தனை சக்தியைத் தூண்டிவிடக் கூடிய பல நூல்கள் தமிழில்வெளியாகவில்லை யென்பது நமது குறை. ஆனல், அந்தக் குறையை இந்த நூல் ஓரளவு பூர்த்தி செய்கிற தென்று சொல்ல வேண்டும். ஒவ்வொரு தமிழனும் இதனை வாங்கிப் படிக்க வேண்டுமென்று சொன்னல், அது வெறும் உபசாரமாகச் சொன்னதாகாது.

இந்நூலின் தலைப்பாகிய 'நாம் செய்ய வேண்டுவது யாது?' என்ற கேள்விக்குச் சுருக்கமாகப் பதில் தெரிந்து கொள்ள விரும்புவோர்களுக்கு முப்பத்தேழாவது அத்தியாயத்தைப் படிக்குமாறு சிபார்சு செய்கிறோம். இந்த அத்தியாயம் நம்மைப் பெரிதும் ஆகர்ஷித்து விட்டது.

ஸ்ரீ விசுவநாதனுடைய மொழிபெயர்ப்பு தெளிவாயிருக்கிறது. வெறும் கதைப்போக்காயில்லாமல் தத்துவங்கள் நிறைந்த ஒரு நூலை, அதிலும் மகா மேதாவியான டால்ஸ்டாயின் நூலை மொழி பெயர்ப்பதென்றால், அஃது எவ்வளவு கடினமான காரியம் என்பதை நாம் நன்கு உணர்வோம். இதனல், ஸ்ரீ விசுவநாதனை நாம் மனப் பூர்வமாகப் பாராட்டுகிறோம்.

எலிசபெத் பிரை பெருமாட்டி

ஆசிரியை: திருவாட்டி தி. நீலாம்பிகை யம்மையார்; வெளியிட்டோர்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், பவழக்காரத் தெரு, சென்னை; டபிள் கிரவுன் 1 x 16 அளவு; 94 பக்கங்கள்: விலை பத்து அணா.

மேனாட்டில் ஏழை மக்களின் துன்ப நிலைக்குப் பெரிதும் இரங்கி அவர்களைக் கை தூக்கிவிடும்பொருட்டு தங்கள் வாழ் நாட்களையே அர்ப்பணஞ் செய்த பெரியார் பலர். அடிமை வியாபாரத்தைப் பற்றி நாம் நினைக்கிறபோது, வில்பர்போர்ஸின் ஞாபகம் வருகிறது; சிறைச் சாலையில் கிடந்துழன்றவர்களைப் பற்றி உன்னும் போது, எலிஜபெத் பிரை என்ற சீமாட்டியின் புனித வாழ்க்கை நமது எண்ணத்தின் முன்னணியில் வந்து நிற்கிறது. இந்தமாதிரி பெரியார்களுடைய வரலாறுகளை நமது சிறுவர்களும் சிறுமிகளும் படித்தறிந்து கொள்ள வேண்டுமென்பது நமது ஆசை. இதற்காக, இந்தமாதிரியான புஸ்தகங்கள் மிகவும் சுலபமான பாஷையில் கவர்ச்சித் தரும் நடையில் எழுதப்பட வேண்டும். ஆனால், தற்போது நமது விமரிசனத்திற்கு வந்திருக்கிற இந்த நூல், தனித் தமிழிலேயே எழுதவேண்டுமென்ற நோக்கத்துடனில்லாமல், எல்லோருக்கும் புரிகிற மாதிரி எழுதவேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதப் பட்டிருந்தால் மிக உபயோகமா யிருக்கும்.

தேவதாஸ்

மூல நூலாசிரியர்: ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜி; தமிழில் மொழி பெயர்த்தவர்: ஸ்ரீ அ. கி. ஜெயராமன்; வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம்; ஜார்ஜ் டவுன், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1 x 16, 215 பக்கங்கள்; விலை: ஒரு ரூபாய்.

வாழ்க்கையைச் சித்திரிப்பதில் ஸ்ரீ சட்டர்ஜி மிகவும் சமர்த்தர். அந்தச் சாமர்த்தியம் இந்த நூலில் வெகு நன்றாகப் புலப்பட்டிருக்கிறது. தேவதாஸின் வாழ்க்கையின் முடிவு, உண்மையில் நமதை மனதை உருக்குகிறது. அதே சமயத்தில் பார்வதியிடமும் நமக்கு அநுதாபம் ஏற்படுகிறது.

ஸ்ரீ ஜெயராமன், மொழிபெயர்ப்புக் கலையில் புதியவரா யிருந்தாலும், தேவதாஸை நன்றாகவே மொழி பெயர்த்திருக்கிறார்.

புதுமைப் பித்தன் கதைகள்.

வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம், சென்னை; டெமி 1 x 8 அளவு: 280 பக்கங்கள்: விலை இரண்டு ரூபாய்,

இந்தப் புஸ்தகத்தைப் படித்து முடித்ததும், இதிலுள்ள கதைகளை எழுதியவர் திருநெல்வேலிச் சீமைக்காரர் என்பதை நாம் சுலபமாகத் தெரிந்துகொண்டு விட்டோம். இங்ஙனம் தெரிந்துகொண்ட பிறகு, ஸ்ரீ தேசிகனுடைய முகவுரையைப் படித்தோம். அவரும் 'பல இடங்களில் திருநெல்வேலி வேளாளர் வாழ்க்கைச் சித்திரம் அவர்களுடைய நடையுடை பாவனைகளோடு அப்படியே பிரத்தியட்சமாகிறது' என்று அபிப்பிராயப் பட்டிருக்கிறார். ஒரு பிரதேசத்தின் பழக்க வழக்கங்களையோ, அவ்விடம் வழங்கப்பெறும் சம்பிரதாயச் சொற்களையோ கையாளுவதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் அவை, அந்தப்

பாஷையை யறிந்தார் அனைவருக்கும் புரிகிறமாதிரியாக இருக்க வேண்டும். திருநெல்வேலிப் பக்கங்களில் சிறிது காலம் வாசஞ் செய்த அநுபவமும், கொஞ்சம் ஆங்கில ஞானமும் இருந்தால்தான், புதுமைப் பித்தனின் இந்த 29 கதைகளையும் அநுபவிக்க முடியும். அஃது எல்லோராலும் சாத்தியமா?

புதுமைப் பித்தனின் கற்பனைகள் உயர்ந்த ரகத்தில் இல்லை. இதனால் தான் இவருடைய கதைகளுக்கு அமையும் பாத்திரங்களும், இவர்களுக்கேற்பட்ட சூழல்களும் உண்மையான ரஸாநுபவத்திற்கு முரணாயிருக்கின்றன. 'கவந்தனும் காமனும்,' 'பொன்னகரம்' முதலிய கதைகள் நம்மால் சகிக்கவே முடியவில்லை. நவீன தமிழ் இலக்கியத்திற்கு, இந்த சிறு கதைத் தொகுதி சேவையைக் கொடுக்கும் என்று யாராவது கருதுவார்களானால், அவர்களைக் குறித்தும், தமிழ் இலக்கியத்தைக் குறித்தும் நாம் அநுதாபப் படுகிறோம்.

கம்பன் கவிதை

வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1x16; 280 பக்கங்கள்; விலை: ரூ 1-8-0

இது, நவயுகப் பிரசுராலயத்தின் ஒரு நல்ல முயற்சி. கம்ப ராமாயணத்தைப் பற்றிப் பல அறிஞர்கள் பல கோணங்களிலிருந்து செய்திருக்கிற ஆராய்ச்சிகளின் தொகுப்பு இந்த நூல். இதனால், இதனை, தமிழர்களுக்களிக்கப்பட்ட ஒரு நல்விருந்து என்று கூறுவோம்.

கம்பனும், வள்ளுவனும் தமிழ் நாட்டில் இன்னும் சரியாகப் பிரசாரம் செய்யப்பட வில்லை. இந்தக் குறையை நாம் நீண்ட நாட்களாக உணர்ந்து கொண்டு வருகிறோம். 'கம்பன் கவிதை' இந்தக் குறையை ஓரளவு தீர்த்திருக்கிறது.

பிரஸ்தாப நூலில் மொத்தம் பதினேழு கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன. இவற்றிற்கு முதன்மையாயிருப்பது வான வாசி ஸ்ரீ வ. வெ. ஸு. ஐயர் அவர்களுடைய 'கம்ப ராமாயண ரசனை' என்னும் கட்டுரையாகும். கட்டுரைகளுக்கு இது முதன்மையாயிருப்பதுபோலவே, ரசனையிலும் இது முதன்மையாயிருக்கிற தென்று நாம் கூறினால், அதுகாலஞ் சென்ற ஐயரவர்களிடம் நாம் கொண்ட மதிப்பின் காரணமாயெழுந்த அபிப்பிராய மென்பதாகவோ, மற்ற அறிஞர்களைக் குறைவு படுத்தியதாகவோ யாரும் கருத மாட்டார்களென்று நம்புகிறோம்.

ஸ்ரீ சொ. முருகப்பா அவர்கள் கூறுகிறபடி, கம்ப ராமாயண நல்ல பதிப்பு ஒன்று வெளி வர வேண்டும். இதே மாதிரி, நாடகக் கலையில் ஆர்வமுள்ளோர், கம்பனின் நாடகப் புலமையை நன்கு மதித்து அவன் காட்டியிருக்கிற வழிப்படியே, ராமாயணத்தை நாடகமாக நடிக்க வேண்டும். தமிழ் நாட்டினருக்கு நாம் செய்து கொள்ளும் விண்ணப்பங்கள் இவையிரண்டுமே.

'கம்பன் கவிதை' தமிழ் நாடு முழுவதும் பரவ வேண்டு மென்பது நமது பெரு விருப்பம்.

அச

யுத்தம் நடக்கிற பிரதேசங்களைப் பற்றி

ஸ்காண்டி நேவிய தீப கற்பம்

ஐரோப்பாவின் வட பாகத்திலுள்ள நார்வே, ஸ்வீடன் ஆகிய தீப கற்பப் பிரதேசத்திற்கு 'ஸ்காண்டி நேவிய தீப கற்பம்' என்று பெயர். ஆனால் இப்பொழுது டென்மார்க், ஐஸ்லண்ட் ஆகிய இரு நாடுகளையும் சேர்த்து, 'ஸ்காண்டி நேவிய தீப கற்பம்' என்று வழங்குகின்றனர்.

டென்மார்க்

ஜெர்மனிக்கு வடக்கேயுள்ள ஜட்லாண்ட் என்ற பூப்பிரதேசமும் இதைச் சுற்றியுள்ள சிறிய தீவுக் கூட்டங்களும் சேர்ந்து 'டென்மார்க்' என்று பெயர்.

விஸ்தீரணம் : 16,658 சதுர மைல்

ஜனத்தொகை : 3,656,000

அரசியல் : முடியாட்சி. மன்னரின் பெயர் கிறிஸ்தியன் X. மன்னரும், அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட மந்திரிகளும் சேர்ந்து அரசாங்க நிருவாகத்தை நடத்துகிறார்கள். 'ரிக்ஸ்டாக்' என்ற பார்லிமெண்டு சபையின் துணை கொண்டே சட்டங்கள் செய்யப் படுகின்றன. 'ரிக்ஸ்டாக்' என்னும் பார்லிமெண்டானது, மேற்சபை யென்றும் கீழ்ச்சபையென்றும் இரண்டு பிரிவினை யுடையது. மேற்சபைக்கு 'லாண்ட்ஸ்டிங்' (Landsting) என்றும் கீழ்ச்சபைக்கு 'போக்கேடிங்' (Folketing) என்றும்

குசேல வெண்பா

இயற்றியவர் : ஸ்ரீ கு. ஸ்ரீ சுந்தர தாஸ்; பதிப்பாளர்: நவீனகதா புத்தகசாலை, மங்கமாரி வீதி, இரங்கூன்; டெமி 1x8 அளவு; 32 பக்கங்கள்; விலை: எட்டு அணா.

குசேலருடைய சரித்திரத்தை ஸ்ரீ சுந்தரதாஸ் 239 வெண்பாக்களில் பாடியிருக்கிறார். வெண்பா பாடுவது சுலபமான காரியமா? இந்தப் புத்தகத்திற்கு எட்டணா விலை மிக அதிகம்.

பர்மா பாடப் பயிற்சி

ஆக்கியோர்: ஸ்ரீ கு. ஸ்ரீ. சுந்தர தாஸ்; வெளியிட்டோர்: நவீனகதா புத்தக சாலை, மங்கமாரி வீதி, இரங்கூன்; டெமி 1 x 8 அளவு; 34 பக்கங்கள்; விலை: நான்கு அணா.

பர்மா கற்க விரும்பும் தமிழர்களுக்கு உபயோகமா யிருக்கும் இந்தப் புஸ்தகம்.

ஸ்ரீ சுந்தர தாஸ் அவர்களால் இயற்றப்பட்ட கையான் ஸ்ரீ ஷண்முகப் பெருமான் மாசி மஹோற்சவ வழிநடைச் சிந்து பிரதியொன்று வரப் பெற்றோம்.

பெயர். 25 வயதடைந்த எல்லாருக்கும் ஓட்டுரிமை யுண்டு.

டென்மார்க், நூற்றுக் கணக்கான வருஷங்களாகச் சுதந்திர நாடாக இருந்தது. 1940ம் வருஷம் ஏப்ரல் மாதம், ஜெர்மனியின் பலவந்தமான ஆதிக்கத்துக் குட்பட்டிருக்கிறது.

நார்வே

ஸ்காண்டி நேவிய தீப கற்பத்தின் மேற்குப் பாகத்திலுள்ள தனி நாட்டுக்கு நார்வே யென்று பெயர்.

விஸ்தீரணம்: 124,495 சதுர மைல்.
ஜனத்தொகை: 2,184,194

அரசியல்: முடியாட்சி. மன்னரின் பெயர் ஹாக்கோன் VII. ஆறாவது ஜார்ஜ் மன்னருடைய அத்தை புருஷன் இவர். 1905ம் வருஷம் நார்வேயும் ஸ்வீடனும் ஒரே ஆட்சிக்குட்பட்டிருந்தது. பின்னரே, தனித் தனி முடியாட்சி நாடுகளாக ஏற்பட்டன. நார்வேயில் 1921ம் வருஷத்திலிருந்து 1927ம் வருஷம் மதுவிலக்கு சட்டம் அமுலில் இருந்ததென்பதையும் பின்னர் இது கைவிடப்பட்டதென்பதையும் நேயர்கள் கேட்க ஆச்சரியப்படுவார்கள்.

நார்வே தேசத்து பார்லிமெண்டுக்கு 'ஸ்டோர்டிங்' (Storting) என்று பெயர். இது இரண்டு சபைகளாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. கீழ்ச் சபைக்கு 'லாக்டிங்' (Lagting) என்றும் மேல் சபைக்கு 'ஓடெல்ஸ்டிங்' (Odelsting) என்றும் பெயர்.

ஸ்வீடன்

ஸ்காண்டிநேவிய தீப கற்பத்தின் கிழக்கும் பாகத்திற்கு ஸ்வீடன் என்று பெயர்.

விஸ்தீரணம்: 173, 347 சதுர மைல்.
ஜனத்தொகை: 6,211,600.

அரசியல்: முடியாட்சி. மன்னரின் பெயர் கஸ்டவஸ் V. 'ரிக்ஸ்டாக்' என்ற இரண்டு சபையுள்ள பார்லிமெண்டின் உதவியைக் கொண்டு மன்னர் அரசாங்கத்தை நடத்துகிறார்.

'கோமிண்டர்ன்' என்றால் என்ன? 'கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல்' (Communist International) என்ற சொற்றொடரின் சுருக்கம் இது. அதாவது ருஷ்யப் பொதுவுடைமை ஸ்தாபனத்தைக் குறிப்பது.

அன்றாட உலகம்



1940 மார்ச்

22 இன்று லாகூரில் ஜனாப் ஜின்னாவின் தலைமையில் அகில இந்திய முஸ்லீம் லீக் கூடியது. இவர் தமது தலைமையுரையில், இந்தியாவை ஹிந்து இந்தியா வென்றும் முஸ்லீம் இந்தியா வென்றும் பிரித்து விடுதல் நல்ல தென்று குறிப்பிட்டார்.

மகாத்மா காந்தி. தமது பரிவாரங்களுடன் இன்று வார்தா வந்து சேர்ந்தார்.

நேற்றும் இன்றும், ஆறு டென்மார்க் தேசத்துக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன,

காந்தியடிகள் காங்கிரஸ் கூட்டத்தில் பேசியபோது, தாம் உடனே சட்ட மறுப்பை ஆரம்பிக்கத் தயாரா யில்லையென்றும், தேசம் தயாராக வேண்டுமென்றும் சொன்னதானது, இங்கிலாந்தில் ஒரு திருப்தியை உண்டாக்கி யிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது.

23 அரேபியாவுக்கும் ஈராக்குக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது.

சென்னை அரசாங்கத்தின் மாஜி மந்திரியான மௌலானா யாகூப் ஹாஸன் இன்று காலமாகி விட்டார்.

லண்டனிலுள்ள டார்ட்மூர் சிறைச் சாலைக்கு இன்று நெருப்பு வைக்கப்பட்டது.

24 சீன—ஜப்பானிய யுத்தத்தில் இன்று ஜப்பானியர்களில் சுமார் 5000 பேர் மரணமடைந்ததாகச் சொல்லப் படுகிறது.

25 இன்று மத்திய மாகாண அரசாங்கத்து வரவு செலவுத் திட்டம் ஆஜர் படுத்தப் பட்டது. செலவை விட வருமானம் சுமார் இருபத்திரண்டாயிரம் அதிகம் கிடைக்கு மென்று எதிர் பார்க்கப்படுகிறது.

காந்தியடிகளும் லார்ட் லின்லித்கோவும் ஏப்ரல் மாதத்தில் சந்திக்கக் கூடு மென்று டெல்லியில் ஒரு வதந்தி பரவி யிருக்கிறது.

26 பிரிட்டிஷ் மந்திரிச் சபை மாற்றி யமைக்கப் படு மென்றும், எதிர்க் கட்சி அங்கத்தினர் சிலர், மந்திரிச் சபையில் சேர்த்துக் கொள்ளப் படுவார்களென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

பம்பாயில் நடை பெறுகிற தொழிலாளர் வேலை நிறுத்த சம்பந்தமாகச் சுமார் ஆயிரம் ஸ்திரீகள் உண்ணாவிரதம் அநுஷ்டிக்கிறார்கள்.

27 பின்லாந்தில் மந்திரிச் சபை கலைந்து விட்டது. கூட்டு மந்திரிச் சபை அமைக்கப் பட்டிருக்கிறது.

அகில இந்திய சோஷலிஸ்ட் கட்சிக் காரியதரிசியான ஜயப் பிரகாச நாராயணருக்கு ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டது.

28 இன்று லண்டனில் பிரிட்டிஷ் மந்திரிகளும் பிரெஞ்சு மந்திரிகளும், யுத்த சம்பந்தமாகக் கலந்து பேசினார்கள். யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவ தென்று முடிவு செய்யப்பட்டது.

29 இன்று மாஸ்கோவில் சோவியத் பார்லிமெண்ட் கூடியது. அந்நிய நாட்டு மந்திரியான மோலோடோவ், போலந்துக்கும் பின்லாந்துக்கும் மேற்கு வல்லரசுகள் செய்த உதவியைப் பரிகசித்துப் பேசினார்.

30 ஒவ்வொரு காங்கிரஸ் கமிட்டியும் ஒவ்வொரு சத்தியாக்கிரகக் கமிட்டியாக அமைய வேண்டுமென்றும், உண்மையான காங்கிரஸ்வாதிகளின் ரிஜிஸ்டர் ஒன்று வைக்கப் பட வேண்டுமென்றும் காந்தியடிகள் 'ஹரிஜன்' பத்திரிகையில் ஒரு கட்டுரை யெழுதி யிருக்கிறார்.

ஜப்பானுடைய ஆதிக்கத்தின் கீழ் நாங்கிங் நகரத்தில் சீன அரசாங்கம் ஒன்று இன்று ஸ்தாபிக்கப்பட்டது. வாங்—சிங்-வை என்பவர் பிரதம மந்திரியாகத் தெரிந் தெடுக்கப் பட்டிருக்கிறார்.

31 பின்லாந்தின் கிழக்குப் பிரதேசத்தை சோவியத் ருஷ்யாவோடு சேர்த்துக் கொண்டு விட்டதை அங்கீகரிக்கிற சட்டம் இன்று ருஷ்ய பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டது.

இங்கிலாந்திலே படிக்கிற இந்தியப் பிள்ளைகளுக்கு முன் பணமாக உதவ சென்னை அரசாங்கத்தார் 13,400 ரூபா அட்வான்ஸ் நிதியாக உதவ தங்கள் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கி வைத்திருக்கின்றனர்.

ஏப்ரல்

1 ஸ்காண்டிநேவிய தீபகற்பத்தில் சமீபத்தில் போர் உண்டாகலா மென்று ஒரு செய்தி கூறுகிறது.

பம்பாயில் மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் தொடங்கி இன்றோடு ஐந்துவாரங்கள் ஆகின்றன. மொத்தம் 88 மில்களில் 22 மில்கள் மட்டும் வேலை செய்கின்றன.

லண்டனில் ஸர் மைக்கல் ஓட்வியரைக் கொலை செய்த உதம் சிங் என்பவர், இன்று விசாரிக்கப்பட்ட போது தமது பெயர் உதம்சிங் இல்லை யென்று கூறினார்.

இந்தியா சட்ட சபை அங்கத்தினரான ஸ்ரீமான் என். ஜி. ரங்கா இன்று சென்னையில், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் படி கைது செய்யப்பட்டார்.

ஏப்ரல் மாதம் முதல் தேதியோடு முடிகிற ஆறு மாதத்திற்குள், சீன-ஜப்பானியப் போராட்டத்தில் 230,000 ஜப்பானியர்கள் மரண மடைந் திருக்கிறார்களென்று ஒரு சீன அறிக்கை கூறுகிறது.

பம்பாய் நகர சபையின் மேயர் பதவிக்கு ஸ்ரீ மதுராதாஸ் திரிகம்ஜி நின்று வெற்றி பெற்றார்.

2 ஸ்ரீ என். ஜி. ரங்கா ஒரு வருஷக் கடுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

ஹாலந்து எல்லைப் புறத்தில் ஜெர்மன் ஆகாய விமானங்களுக்கும் நேச தேச ஆகாய விமானங்களுக்கும் பெரிய யுத்தம் மூண்டது.

3 பிரிட்டிஷ் மந்திரிச் சபையில் இன்று சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஸர் சாமியல் ஹோர் ஆகாய மந்திரியாக நியமனம் பெற்றிருக்கிறார். இன்னும் சில சிறிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஜெர்மனி, இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவது நிச்சய மென்று இன்று தளபதி கோயரிங், ரேடியோ மூலம் பேசினார்.

இந்தியாவில், ஹிந்து-முஸ்லீம் பிரச்னை சமரஸமாகத் தீர்ந்தாலன்றி, அரசியல் முன்னேற்றம் ஒன்றும் ஏற்படா தென்றும் சுதேச மன்னர்களையும் திருப்தி செய்விக்க வேண்டி யிருக்கிற தென்றும் இன்று லார்ட் ஜெட்லண்ட் ரேடியோவில் பேசினார்.

பிரெஞ்சு பார்லிமெண்டில் அங்கம் வகிக்கும் பொதுவுடமை அங்கத்தினர்கள் பலர் கைது செய்யப் பட்டு பல வருஷ தண்டனைக்குள்ளாயினர்.

4 ஸ்ரீ சி. எப். ஆண்ட்ரூஸ் கல்கத்தா ஆஸ்பத்திரி யொன்றில் காலமாகி விட்டார்.

5 அபிசீனியாவில் இரண்டு லட்சம் இத்தாலியர்கள் குடியேறி யிருக்கிறார்களென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

6 ஸ்ரீ எச். வி. காமத்தும், சேனாபதி பாபட்டும் இன்று இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி பம்பாயில் கைது செய்யப்பட்டனர்.

இன்று போலந்திலுள்ள 45,000 துருப்புகள் ஜெர்மானியப் படை முன்னர் சரணடைந்து விட்டன.

துருக்கியில் பெரு வெள்ளம் ஏற்பட்டு முப்பது கிராமங்கள் பாழாய்ப் போயின.

இந்தியாவை, ஹிந்து இந்தியா வென்றும் முஸ்லீம் இந்தியா வென்றும் இரண்டு கூறாகப் பிரித்து விட வேண்டு மென்று ஜனாப் ஜின்னா கூறிய யோசனையைக் கண்டித்து மகாத்மா காந்தி 'ஹரிஜன்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதி யிருக்கிறார்.

7 கொல்லங்கோடு ராஜா அவர்கள் பம்பாயில் இன்று தேக வியோகமானார்.

எகிப்திய அரசருக்கு இன்று ஒரு பெண் மகவு பிறந்தது.

இன்று லண்டனில் பிரெஞ்சு ஸ்தானிகருடைய காரியாலயத்தில் சுமார் 1500 பொதுவுடைமைக் கட்சியினர் ஊர்வலமாக வந்தனர். போலீஸார் இவர்களைக் கலைத்து விட்டனர்.

8 நார்வே அரசாங்கம் இன்று யுத்தக் கப்பல்களை வட கடலில் சேகரித்து வருகிறது.

இன்று எம். எஸ். ஆனே ராஜப் பிரதிநிதியுடன் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

ருஷ்யாவுக்கும் பின்லாந்துக்கும் பழைய மாதிரியாக அரசியல் தொடர்பு ஏற்பட்டு விட்டது.

நார்வே பிரதேசத்தின் கடற்கரை யோரமாக பிரிட்டிஷ் கடற்படையும் பிரெஞ்சு கடற் படையும் சேர்ந்து சுரங்க வெடிகள் வைத்திருக்கின்றன. இங்ஙனம் செய்திருப்பது, தங்களுடைய நடுவு நிலைமையைக் குலைப்பதாகு மென்று நார்வே அரசாங்கம் கண்டித் திருக்கிறது.

சென்னை அபேதவாதக் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ பி. ராம மூர்த்தி, இந்தியப் பாது காப்புச் சட்டத்தின்படி வேப்பத்தூர் என்ற அவருடைய கிராமத்திலேயே இருக்கும்படி உத்திர விடப் பட்டிருக்கிறார்.

9 நார்வே கடலோரத்தைச் சுற்றி பிரிட்டிஷாரும் பிரெஞ்சுக்காரரும் சுரங்க வெடி வைத்ததற்குப் பதிலாக, ஜெர்மனி இன்று திடீரென்று டென்மார்க்கின் மீதும் நார்வேயின் மீதும் படையெடுத்து இரண்டு நாடுகளின் முக்கியப் பிரதேசங்களைக் கைப் பற்றிக் கொண்டது. டென்மார்க் எவ்வித எதிர்ப்பையும் காட்டவில்லை. நார்வேயின் தலை நகரமான ஆஸ்லோவை ஜெர்மனி கைப்பற்றிக் கொண்டது.

நார்வேயின் மீது ஜெர்மனி படையெடுத்திருப்பதை முன்னிட்டு, நார்வேக்கு பிரிட்டன் எல்லா வித உதவிகளையும் செய்யு மென்று நெவில் சேம்பர்லேன் காமன்ஸ் சபையில் கூறினார்.

இந்தியா மந்திரி சபையின் அங்கத்தினராக ஸர் பன்னீர் செல்வத்திற்குப் பதிலாக திவான்பகதூர் எஸ். இ. அரங்கநாதன் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

10 நார்வே கடலோரமாக ஜெர்மன் யுத்தக் கப்பல்களுக்கும் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களுக்கும் பெரிய யுத்தம் நடை பெற்றது.

நார்வே நாட்டுப் படைகள், ஆஸ்லோ நகரத்திற்கு 80 மைலுக்கு வடக்கே இருந்து கொண்டு, ஜெர்மானியப் படைகளை எதிர்த்து நிற்கின்றன வென்று ஒரு செய்தி கூறுகிறது.

டென்மார்க், நார்வே ஆகிய இருநாடுகளின் சம்பந்தமாகத் தாங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கையைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராய மென்ன வென்று ஸ்வீடனையும் ஹாலந்தையும் ஜெர்மனி கேட்டதாகவும், அவையிரண்டும் தாங்கள் நடு நிலைமையையே வகிக்கத் தீர்மானித் திருப்பதாகத் தெரிவித் திருக்கின்றன வென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

11 இன்று நார்வேக்கு அருகாமையில் பெரிய ஆகாய விமானச் சண்டை யொன்று நடை பெற்றது. இதில் சுமார் ஆயிரம் ஜெர்மன் விமானங்கள் கலந்து கொண்டன வென்று சொல்லப் படுகிறது.

12 பிரிட்டிஷ் துருப்புகள் பல, நார்வேயில் சில இடங்களில் இறங்கி யிருக்கின்றன வென்று ஒரு செய்தி கூறுகிறது.

நார்வேயைச் சுற்றி சுமார் 420 மைல் நீளத்திற்குச் சுரங்க வெடிகள் வைத்திருப்பதாகத் தெரிகிறது.

ஹாலந்தில் பலமான யுத்த முஸ்தீப்புகள் செய்யப் படுகின்றன.

13 காங்கிரஸ்காரர்கள், ஸ்தலஸ்தாபனங்களில் வகித்து வரும்பதவிகளை ராஜிநாமா செய்யுமாறு சொல்வது, காங்கிரஸின் அடுத்த வேலைத் திட்டமா யிருக்கு மென்று மௌலானா அஸாத் இன்று ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறினார்.

ஆஸ்லோ நகரத்தைச் சுற்றிப் பலமான சண்டை நடை பெறுகிறது.

14 துருக்கியில் பெரிய பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டது. ஆறு பேர் மரணம்.

கவிஞர் ரவீந்திரநாத் டாகூரின் 80வது பிறந்ததினம் இன்று சாந்தி நிகேதனத்தில் கொண்டாடப்பட்டது.

15 ஸ்வீடனில் பல நாஜிகள் கைது செய்யப் பட்டார்கள்.

இங்கிலாந்திலுள்ள முக்கிய நகரங்களை ஜெர்மனி ஆகாய விமானக் குண்டுகளைப் போட்டுத தாக்கும் என்று ஒரு செய்தி கூறுகிறது.

இன்று வார்தாவில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் கூடியது.

16 ஹாலந்துக்குச் சொந்தமான ஜாவா, சுமத்ரா முதலிய தீவுகள் அந்நியர்கள் கைவசம் சிக்கிக் கொள்ளக் கூடா தென்பது தங்கள் கவலை யென்று ஜப்பானிய அரசாங்க அங்கத்தினர் ஒருவர் கூறினார்.

நார்வேக்கு அருகாமையிலுள்ள பாரோ தீவுகளில் பிரிட்டிஷ் துருப்புகள் பத்திரமாக வந்திறங்கின என்று காமன்ஸ் சபையில் கூறப்பட்டது.

நார்வேயிலுள்ள நார்விக் என்ற நகரம் பிரிட்டிஷாரால் கைப் பற்றிக் கொள்ளப்பட்டது.

இன்றும் காங்கிரஸ் காரியக் கமிட்டி வார்தாவில் தற்போதைய அரசியல் நிலைமையைப் பற்றி யோசித்தது.

ஜெர்மனி தாக்கப்பட்டால் அஃது எல்லா முயற்சிகளையும் செய்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் என்று பெல்ஜியம் பார்லி மெண்டில் பிரதம மந்திரி கூறினார்.

பிரெஞ்சு அரசாங்கத்தார், பாரிஸில் 58 பொதுவுடமைக் கட்சியினரைக் கைது செய் திருக்கின்றனர்.

சீன-ஜப்பானிய யுத்தத்தில் ஷாங்காய்க் கருகாமையில் பெரிய யுத்தம் நடை பெற்றது.

17 காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் இன்றும் வார்தாவில் கூடி சர்வ தேச நிலைமை குறித்தும், இந்திய அரசியல் நிலைமையைக் குறித்தும் ஆலோசித்தது.

துருக்கி அரசாங்கத்தின் கப்பல் படைகள், ஏஜியன் கடலுக்குச் சென்றிருக்கின்றன வென்று இன்று ஓர் அறிக்கை கூறுகிறது.

18 இந்தியாவிலுள்ள ஏழு மாகாண அரசாங்கங்களின் நிருவாகம் கவர்னருடைய விசேஷ அதிகாரத்தின் கீழ் நடை பெறுகிறதல்லவா? இந்த அதிகாரம் ஆறு மாதத்திற்குத் தான் செல்லுபடியாகும். இதனால் இவருடைய அதிகார காலத்தை நீடிக்க வேண்டு மென்று லார்ட் ஜெட்லண்டு, பார்லி மெண்ட் பிரபுக்கள் சபையில் ஒரு பிரேரணை கொண்டுவந்தார். காமன்ஸ் சபையிலும் இதே மாதிரி பிரேரணை கொண்டு வரப்பட்டது.

19 அகில இந்திய கிஸான் சபையின் பொதுக் காரியதரிசியான சுவாமி சகஜானந்த சரஸ்வதி இன்று இந்தியப் பாதுகாப்புச்

என்னுடைய வாழ்க்கையின் லட்சியம்

—மகாத்மா காந்தி

அஹிம்சை என்பது தனிமனிதனுலேயே பின்பற்றக் கூடியதாயிருக்கும் பட்சத்தில் அதை நான் உதறித் தள்ளி விடுவேன். ஆனால் நான் கற்பனை செய்யும் அஹிம்சைத் தத்துவம் கோடிக் கணக்கானவர்கள் பின்பற்றக் கூடியது. அந்தப் புனிதமான தத்துவத்தின் ஊழியன் நான். எந்த விஷயமானது கோடிக் கணக்கானவர்கள் பின்பற்றுதற்கு லாயக்கில்லாததாயிருக்கிறதோ அது எனக்கும் பிரயோசனமற்றதாகும். அதை உதறியெறிவதற்கு நான் தயங்க மாட்டேன். நான் மாத்திரமல்ல, என்னைப் பின்பற்றும் நண்பர்களும் அதைத் தியாகஞ் செய்து விடுவார்கள். சத்தியமும் அஹிம்சையும் தனி மனிதர்கள் மாத்திரம் பின்பற்றக் கூடியவைகள் அல்ல என்பதை நிலை நாட்டுவதற்காகவே நாங்கள் இந்த

சட்டத்தின் கீழ் பாட்னாவில் கைது செய்யப்பட்டார்.

நார்வேயில் பிரிட்டிஷ் துருப்புகளுக்கும் ஜெர்மன் துருப்புகளுக்கும் சண்டை நடைபெற்றது.

ஸ்விட்ஜர்லாந்தும் பெல்ஜியமும் தற்காப்பு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கின்றன.

இன்று நார்வேயில் பிரெஞ்சுத் துருப்புகள் வந்திறங்கின.

20 போதிய தயாரிப்பு இல்லாத காரணத்தினால் தான், சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப் படாமலிருக்கிறதென்று இன்று 'ஹரிஜன்' பத்திரிகையில் மகாத்மா காந்தி யெழுதி யிருக்கிறார்.

லண்டனிலுள்ள ஓர் ஆயுத தளவாட சாலை இன்று திடீரென்று வெடித்தது. ஐந்துபேர் மரணம். பலருக்குக் காயம்.

சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பித்தால், அதற்காகச் சட்ட சபையிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலுமிருக்கும் காங்கிரஸ்காரர், தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்யத் தேவையில்லையென்றும், அங்கத்தினர் பதவியிலிருந்து கொண்டே அவர்கள் காங்கிரஸ் வேலைத் திட்டத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்றும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியது.

இன்று ஹிட்லரின் 54வது பிறந்ததினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு முஸோலினி அவருக்கு ஒரு வாழ்த்துச் செய்தியனுப்பினார். ஹிட்லரும் அதற்குப் பதிலளித்திருக்கிறார்.

இன்று இரவு இரங்கூனில் ஹிந்து முஸ்லீம் கலவரம்.

21 வங்காள மாகாணத்தின் புதிய காங்கிரஸ் கமிட்டி இன்று கூடி தனது உத்தியோகஸ்தர்களைத் தெரிந்தெடுத்தது, பாபு சுரேந்திர மோஹன் கோஷ் தலைவர்.

ருஷ்யாவுக்கும் ருமேனியாவுக்கும் வியாபார சம்பந்தமாக சில ஒப்பந்தங்கள் ஏற்படுமென்று தெரிகிறது.

லட்சுமண புரியில் ஷியா-சன்னி தகராறு ஏற்பட்டு பலருக்குக் காயம் உண்டாகயிருக்கிறது.

உலகில் ஜனித்திருக்கிறோம். அது சமூக, ஜாதி, தேசம் இவைகளின் நீதியாகும். நாங்கள் இப்போது அந்த நிலை நாட்டவில்லை தான். ஆனால் எங்களுடைய வாழ்க்கையின் லட்சியமாக அது இருக்கின்றது. யாருக்கு இதில் நம்பிக்கையில்லையோ, இவற்றை யார் தனதாக்கிக் கொள்ளவில்லையோ, தயவு செய்து அவர்கள் எங்களை விட்டு விலகி விடவேண்டும். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் அதுவே என்னுடைய கனவாகும்; இதையே நான் என்னுடைய வாழ்க்கையின் கடமையாகக் கொண்டிருக்கிறேன். உலகம் பூராவுமே என்னை வெறுத்துத் தள்ளினாலும் சரி, நான் அதை விடமாட்டேன். என்னுடைய நம்பிக்கை அவ்வளவு ஸ்திரமானதாகும். அஹிம்சையையும் சத்தியத்தையும் நிலை நாட்டுவதற்காகவே நான் வாழ்வேன்; அதே முயற்சியிலேயே சாவேன். இந்த நம்பிக்கையிலே எனக்கு அனுதினமும் புதிய புதிய விஷயங்கள் தோன்றுகின்றன. என்னுடைய இந்த நிலைமையிலே எனக்கு இதைத் தவிர்த்து ஒன்றும் புலனாகவில்லை. ஆம், என்னுடைய புத்தி தடுமாறி நான் மற்றொரு வழியைக் காட்டுவதாயிருந்தால் அது வேறு விஷயம். ஆனால் இன்றைய நிலைமையில் அஹிம்சையினுடைய சக்தியை நான் பார்க்கிறேன். அனுதினமும், புதிய சக்தி, புதிய ஆனந்தம் எனக்குக் கிடைக்கிறது. ஆனதால் அஹிம்சை நிரந்தரமாயுள்ளது என்பதே எனது பூரணமான நம்பிக்கை. அது, ஆத்மாவின் ஒப்பற்ற குணமாகும். இதனாலேயே அது வியாபகமாயுள்ளது என்று நான் கூறுகிறேன். ஏனெனில் ஆத்மா யாவருக்கும் உண்டல்லவா? ஆனதால் அஹிம்சை யாவருக்கும் உரியதாகும். எல்லாச் சமயங்களுக்கும் பொருந்தியதாகும் அது உண்மையிலேயே ஆத்மாவின் குணமாயிருக்கும் பட்சத்தில் நமக்கும் அது உரிமையுடையதாகும். சத்தியமா? அது வியாபாரத்திற்குப் பொருந்தாது; அரசியலிலே அது நடைபெறாது என்று இப்போது அடிக்கடி சொல்லப்படுகிறது! அப்படியானால் அது எங்கே தான் செல்லுபடியாகும்? வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும், அதைக் கொள்ள முடியாத பொருளாயிருந்தால் அது—அந்தச் சத்தியம்— வாழ்க்கைக்கு எந்த வகைக்குப் பிரயோஜனமுள்ளதாகும்? என்னுடைய ஜீவியத்திலே ஒவ்வொரு விஷயத்திலும் அது உபயோகமாகிறது. அதனால் புதிய புதிய சக்திகளை நான் பெறுகின்றேன். ஐம்பது வருஷங்களுக்கு மேலாக இதை நான் கைக் கொண்டு வருகிறேன். அந்த சத்தியத்தைக் கடைப்பிடித்து ஒழுகிவரும் என்னுடைய அனுபவத்தை உங்கள் முன்னே சமர்ப்பிக்கின்றேன். நீங்கள் யாவரும் அந்த சக்தியைத் தெரிவிக்கலாம்.

(காந்தி சேவா சங்கக் கூட்டத்தில் செய்த ஒரு சொற்பொழிவின் சாரம்)